# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 05 வியாழக்கிழமை (21.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276



(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
Email Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே



## மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டம்

# மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்

# பாராளுமன்றத்தில் நிறைவேற்றம்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டம் மூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அதாவது நூற்றுப் பதினொரு மேலதிக வாக்குகளினால் பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்ட மூலத்துக்காக நூற்று ஐம்பத்து நான்கு வாக்குகள் ஆதரவாகவும் எதிராக நாற்பத்து மூன்று வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. (23-ம் பக்.)



## மெக்சிக்கோவில் பயங்கர நிலநடுக்கம்

### 250 பேர் பலி



13☛

## இடைக்கால அறிக்கை இன்று வெளியாகும்?

(கொழும்பு)

புதிய அரசமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை குறித்து ஆராய்வதற்கான நாடாளு 23☛

## நல்லாட்சி அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

### ஐ.நாவில் மைத்திரி



20☛

## லலித், அனுஷ பிணையில் வந்தனர்



03☛

## வன அதிகாரிகள் துரத்தி சென்ற வேளை

# உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞன் பரிதாபகரமாக உயிரிழப்பு

(முல்லாவி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சுதந்திரபுரம் குடியிருப்பு பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரத்தை வன வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் துரத்திச் சென்ற போது, வேகமாக தப்பிச் சென்ற உழவு இயந்திரத்தின் பக்க வாட்டில் இருந்து பயணித்த இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ள துயரச் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

சுதந்திரபுரம் குடியிருப்பு பகுதியில் அனுமதியின்றி 23☛

## மின்சார சபையின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் கடந்த 8 நாட்களாக முன்னெடுத்து வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரவு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபைக்கூட்டுத் தொழிற்சங்க அமைப்பு அறிவித்துள்ளது.

இதன்படி இன்று காலை 23☛

## டொனால்ட் ட்ரம்ப் - மைத்திரி முதன்முறையாக சந்தித்தனர்



23☛

## 20 - வது திருத்தம் தொடர்பில்

# வாக்கெடுப்பு நடத்தக்கோரி கவனயீர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

உத்தேச 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி சிவில் அமைப்புக்களைச் சேர்ந்த சிலர் கொழும்பில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் கொழும்பு மாநகர சபைக்கு முன்னால் நேற்றைய தினம் காலை இடம்பெற்றது.

சமத்துவத்திற்கான பிரஜைகளின் நடவடிக்கைக் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த போராட்டத்திற்கு நவ சமசமாஜக் கட்சியின் 24☛

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு பெறப்படும்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

இந்த நாட்டில் தொடரும் இனப் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வை வழங்க முடியும் எனவும் எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க 23☛



## நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயகத்தின் பெயரால் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது

### சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(குருமன்காடு)

நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயகத்தின் பெயரால் தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாட்டினை முன்னெடுக்கின்றது என்பதே எமது நிலைப்பாடாகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

1988ஆம் ஆண்டு மாகாண சபைகள் தேர்தல் திருத்தச்சட்டம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாகாண சபை திருத்தச் 24☛



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் பின்வரும் கால்நடைகள் 04.10.2017 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆடுகள்:-**

| இல | இனம் | வயது | பால் | நிறை |
|---|---|---|---|---|
| 01 | ஜமுனாபாரி கலப்பு | 03. வருடங்கள் | ஆண் | 57.0 kg |
| 02 | ஜமுனாபாரி கலப்பு | 03 வருடங்கள் | ஆண் | 55.0 kg |
| 03 | உள்ளூர் | 23 மாதங்கள் | ஆண் | 40.0 kg |
| 04 | உள்ளூர் | 19 மாதங்கள் | ஆண் | 36.5 kg |
| 05 | உள்ளூர் | 18 மாதங்கள் | ஆண் | 26.0 kg |
| 06 | உள்ளூர் | 16 மாதங்கள் | ஆண் | 30.5 kg |
| 07 | உள்ளூர் | 15 மாதங்கள் | ஆண் | 30.0 kg |
| 08 | உள்ளூர் | 13 மாதங்கள் | ஆண் | 30.0 kg |
| 09 | ஜமுனாபாரி கலப்பு | 13 மாதங்கள் | ஆண் | 32.5 kg |

**மாடுகள்:-**

| இல | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 01 | ஜெர்சி கலப்பு | 02 வருடங்கள் | ஆண் |
| 02 | ஜெர்சி கலப்பு | 22 மாதங்கள் | ஆண் |
| 03 | ஜெர்சி கலப்பு | 21 மாதங்கள் | ஆண் |
| 04 | ஜெர்சி கலப்பு | 09 வருடங்கள் | பசு |
| 05 | ஜெர்சி கலப்பு | 08 வருடங்கள் | பசு |
| 06 | ஜெர்சி கலப்பு | 08 வருடங்கள் | பசு |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 02.10.2017 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏலவிற்பனையானது 04.10.2017 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

**பதிவாளர்** (சி-9696)

# பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

**குழந்தைகளைப் பராமரிப்பதற்கான ஆண் பராமரிப்பாளர்கள் தேவை.** (Warden)

தகைமைகள்:

1. க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை
2. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
3. வயதெல்லை-25-65
4. விடுதியில் தங்கியிருப்பது அவசியம், உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்புமிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

● சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 30.09.2017**

தொடர்புகளுக்கு:-

**தி.இராசநாயகம், தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

**தொலைபேசி இலக்கம்:- 0770604950, 0214923118**

(சி-9702)

# யா/வயாவிளான் மத்திய கல்லூரி-வயாவிளான் பழைய மாணவர் சங்கம்

## "வயவன்களின் சங்கமம்-2017"
## 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை

இடம்:-கல்லூரி வளாகம்
நேரம்:-மாலை 5.00 மணி
ஒன்றுகூடலும் இரவு விருந்துபசாரமும்

பிரவேச அன்பளிப்பு:-தனி ஒருவர்:-500/=
குடும்பம்:-1000/=

கல்லூரி அன்னையின் வளர்ச்சி கருதி அனைத்து பழைய மாணவர்களையும் பங்கு பற்றி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
**திரு.பொ.பத்மநாதன் (0779771042)**
**திரு.மு.கணேசானந்தன் (0779906043)**
**திரு.இ.ராஜ்குமார் (0703777138)**
**செல்வி மு.ஜெகநந்தினி (0774322736)**
**திரு.ஐ.சிவகுமார் (0777370687)**
**(கொழும்பு கிளை செயலாளர்)** (சி-9701)

**பழைய மாணவர் சங்கம்**
**யா/வயாவிளான் மத்திய கல்லூரி, வயாவிளான்.**

# UNIVERSITY OF JAFFNA

**FACULTY OF AGRICULTURE**
**ADMISSION OF PUBLIC OFFICERS**
**FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2016/2017)**

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2016/2017

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

OR

Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

AND

2. Diploma in Agriculture (Course duration not less then 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

**Age:** candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar, Envelope (for Rs. 5.00) not less than 9"x 4" size.

**Date of closing is 30th of October 2017.**

Applications should be forwarded through the relevant Heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

**18.09.2017** (C-9695) **REGISTRAR**

# பிரம்மஸ்ரீ வை.ஆ.சர்மா அவர்களின் சதாபிஷேகமும் அகவை 80 பூர்த்தி விழாவும்



மூளாயினை பிறப்பிடமாக கொண்ட வைத்தீஸ்வர சர்மா சீதாலட்சுமி அம்மாவின் புதல்வரான ஆனந்த சுப்பிரமணிய சர்மா அவர்கள் பருத்தித்துறையை வசிப்பிடமாக் கொண்ட இராமநாத குருக்கள் அமிர்தேஸ்வரி அம்மாவின் மகளான சௌந்தரநாயகியை திருமணம் செய்து இனிய இல்லற வாழ்வினை நடாத்தி வருகின்ற இந் நல்வேளையில் இவருக்கு அகவை 80 பூர்த்தியும் சதாபிஷேக வைபவமும் இன்றைய தினம் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

பிரம்மஸ்ரீ வை.ஆ.சர்மா அவர்கள் 1960களில் இலங்கை பரீட்சை திணைக்களத்தில் ஓர் உயர் நிலை தட்டெழுத்தாளராக கடமையாற்றியுள்ளதுடன் பல அரச நிறுவனங்களில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றியுள்ளதுடன் ஜோதிட துறையிலும் ஆன்மீக துறையிலும் தனக்கென ஓர் இடத்தினை மிகச் சிறப்பாக் வெளிக்காட்டி வருகின்றார். இவர் ஓர் ஜோதிட ஆராய்ச்சியாளர் மற்றும் சமூக சேவையாளர், இவர் தனது வாழ்வியல் அனுபவத்தினூடாகவும், ஆராய்ச்சியினூடாகவும் பெற்ற ஜோதிட அறிவைக் கொண்டு பல மக்களுக்கு எவ்வித கட்டணங்களையும் பிரதி பலன்களையும் பெற்றுக்கொள்ளாது 1990ஆம் ஆண்டிலிருந்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலவசமாக ஜோதிட சேவையினை ஆற்றி வருகின்றார். இவரது ஜோதிட சேவையினை பெற்று பல மக்கள் தங்களது வாழ்வில் ஒளியேற்றப்பட்டு மிகவும் உன்னதமான நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

மேலும் (ஆரம்ப சுகாதார சேவை நிலையம்) இவரது இன்னுமொரு மிகப்பெரிய சாதனையாக பருத்தித்துறையில் மத்திய மருந்தகம் அமையப் பெற்றமையினை குறிப்பிட முடியும். இவர் அயராத உழைப் பின் மூலம் 1971ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்ப டாமல் காணப்பட்ட தனது மாமனாரது காணியில் பருத்தித் துறையில் மத்திய மருந்தகம் அமைப்பதற்காக மிகவும் பாடுபட்டார். மக்களின் பங்களிப்புடன் பல சவால்களுக்கு முகம் கொடுத்து இறுதியில் இம் மத்திய மருந்தகம் தற்போதுள்ள இடத்தில் அமைவ தற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் பாடுபட்டவர் ஆவார். இவரின் இம் மகத்தான செயற்பாட்டினால் தற்போது பல மக்கள் மருத்துவ சேவையினை இலவசமாக பெற்றுக் கொள் ளக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டிருக்கின்றது.

தன்னலம் கருதாது இத்தகைய மேன்மையான செயற்பாடுகளினால் மக்களின் மனங்களில் நிறைந்திருக்கின்ற வை.ஆ.சர்மா அவர்கள் தேக ஆரோக்கியத்துடன் நீடூழி காலம் வாழ இன்றைய இந் நன்னாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**அன்பர்களும், நண்பர்களும்** (630)

# லலித், அனுஷ பிணையில் விடுவிப்பு!

(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கும் தொலைத்தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.



தொலைத்தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 600 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி செயலக கணக்கிற்கு பெற்று பௌத்த விகாரைகளுக்கு சில் துணி வழங்கியமைக்காக முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு கண்காணிப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையும் ஒருவருக்கு தலா 2 மில்லியன் ரூபா தண்டமும் 50 மில்லியன் ரூபா நட்டஈடும் வழங்க வேண்டும் என கூறி மேல் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த நிலையிலேயே கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இருவரையும் பிணையில் செல்ல உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

தியாகி திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகளை பொது அமைப்புக்கள் மற்றும் கட்சிகளுடன் இணைந்து நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

எதிர்வரும் 26.09.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பொதுமக்கள், அனைத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக தனது உடலை மெழுகாய் உருக்கி மண்ணுக்காக மரணித்த மாவீரனுக்கு வணக்கம் செலுத்த வேண்டியது தமிழ் தேசத்து மக்கள் அனைவரதும் கடமையாகும்.

குறித்த நிகழ்வில் அரச நிர்வாக திணைக்களங்கள், கல்வித் திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவன விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் அனைவரும் குறித்த நிகழ்வில் எதிர்வரும் 26.09.2017 (செவ்வாய்க்கிழமை) கலந்துகொள்ள ஆவன செய்து ஒத்துழைக்குமாறு சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள், தனியார் நிறுவன உரிமையாளர்கள், அரச சார்பற்ற நிறுவன தலைவர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.(இ-4)

# புலிகளை அழித்ததால் பழிவாங்குகின்றனர்

## அரசு மீது மகிந்த குற்றச்சாட்டு



புலிகளை அழித்ததால் இன்று இந்த ஆட்சியாளர்கள் எங்களை அரசியல் ரீதியாகப் பழிவாங்குகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நாங்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த நாட்டைப் புலிகளிடம் இருந்து மீட்டெடுத்தோம். தாய் நாட்டின்மீது நாம் வைத்த அன்பு காரணமாக இந்த நாட்டைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்குப் பல தியாகங்களைச் செய்தோம். எமது படையினரே உயிரையும் உடல்களையும் இழந்து நாட்டைக் காப்பாற்றினர்.

ஆனால், இந்த அர்ப்பணிப்புக்கு அரசில் மதிப்புக் கிடையாது. மனதில் குரோதங்களை வைத்துக்கொண்டு எம்மை அரசியல்ரீதியாகப் பழிவாங்குகின்றனர். நான் நினைத்திருந்தால் புலிகளுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு சத்தமில்லாமல் இருந்திருக்க முடியும்.

நாட்டுக்காக நான் புலிகளிடம் போர் செய்து அவர்களை அழித்ததால் இன்று இந்த ஆட்சியாளர்கள் எங்களைக் கஷ்டப்படுத்துகின்றனர். எமக்கு எதிராகப் போலி வழக்குக்களைத் தொடுக்கின்றனர். சிறையில் அடைகின்றனர் என்று குற்றம் சாட்டினார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். (இ-7)

# தாயகத்தில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை புலம்பெயர் தமிழரை திருப்பியனுப்ப வேண்டாம்

## ஜனநாயக போராளிகள் வலியுறுத்து



தாயகத்தில் நிரந்தரத் தீர்வு கிடைக்கு வரை புலம்பெயர் தமிழ் மக்களை நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதரக உயர் அதிகாரிகளிடம் ஜனநாயக போராளிகள் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுவிஸ் நாட்டின் தூதரக ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர்களுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியினருக்குமான கலந்துரையால் ஒன்று நேற்றைய தினம் திருகோணமலையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.


இது தொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில்,

சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதரக உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் தற்போதைய ஜனநாயக போராளிகளின் செயற்பாடுகள், சமகால தமிழர் தரப்பு அரசியல் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக தீர்வுக்கான முனைப்புகள், சமாதான சகவாழ்வியல் தொடர்பில் நிலையான, நிரந்தரமான முடிவுகள் ஏற்படுத்தப்படும் வரை புலம்பெயர்ந்தவர்கள் மீள்திரும்புகை நிறுத்தப்பட வேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. (இ-9)

# இலங்கைக்கு தொடர்ச்சியாக பாக்.உதவி வழங்கத் தயார்

## புதிய பிரதமர் ஜனாதிபதியிடம் உறுதி



தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவிகளை வழங்கத் தயாரென பாகிஸ்தானின் புதிய பிரதமர் சஹிட் கஹான் அப்பாஸி ஜனாதிபதி மைத்திரியிடம் உறுதியளித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையில் இடம்பெறும் வர்த்தக, பொருளாதார உறவுகளை மேலும் பலப்படுத்தி புதிய அணுகுமுறையூடாக அதனை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பாகிஸ்தான் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச்சபை கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாகிஸ்தான் பிரதமருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றபோதே பாகிஸ்தான் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நீண்டகாலமாகவுள்ள இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்து அந்த உறவுகளை நீண்டகாலம் பேணக்கூடியவாறு பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை தலைவர்கள் வலியுறுத்தினர். (இ-3)



தென்கொரியாவின் சியோல் நகரில் நடைபெறும் இந்தோ-ஆசிய- பசுபிக் பிராந்திய இராணுவத் தளபதிகளின் மாநாட்டில் இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தலைமையிலான உயர்மட்டக் குழு பங்கேற்றுள்ளது.

# இலங்கை தொடர்பான வர்த்தக கொள்கையில் மாற்றம் இருக்காது

## அமெரிக்கா அறிவிப்பு

அமெரிக்காவின் புதிய அரசாங்கத்தில் இலங்கை தொடர்பான வர்த்தகக் கொள்கையில் பெரிய மாற்றங்கள் இருக்காது என்று தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மார்க் லின்ஸ்கொட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "அமெரிக்காவின் புதிய நிர்வாகம், பல்வேறு வர்த்தக உடன்பாடுகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றங்களைச் செய்துள்ளது. முக்கியமாக, ட்ரான்ஸ் பசுபிக் ஒத்துழைப்பு உடன்பாட்டைக் குறிப்பிடலாம்.

இருந்தாலும், இலங்கையுடனான இருதரப்பு வர்த்தகம் அல்லது முதலீட்டு வரைவு உடன்பாடு தொடர்பான கொள்கைகளில் எந்த மாற்றங்களும் இடம்பெறும் என்று நான் நினைக்கவில்லை.

இலங்கைக்கு இது முக்கியமான தருணம். பிராந்தியத்தின் கேந்திரமாக மாறி வருகிறது. அமெரிக்கா ஒரு பாரிய ஏற்றுமதிச் சந்தையாக இலங்கைக்கு இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு சுதந்திரக் கட்சி எதிர்ப்பு!

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதில் சுதந்திரக் கட்சிக்கு உடன்பாடில்லை என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சில சரத்துக்கள் குறித்து பொதுமக்கள் கருத்துக் கணிப்பொன்றை நடத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், அவ்வாறான கருத்துக் கணிப்பொன்றுக்கு செல்வதில் சுதந்திரக் கட்சிக்கு உடன்பாடில்லை. அதே நேரம் சுதந்திரக்கட்சியின் ஆதரவின்றி அவ்வாறான கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டால் அது தோல்வியடையும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ரயனின் மறியல் நீடிப்பு

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரயன் ஜெயலத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மாளிகாவத்தை நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டமை மற்றும் சுகாதார அமைச்சினுள் பலவந்தமாக நுழைந்து அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் ரயன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தோல்வியின் எதிரொலி

# இலங்கையை நேரடியாக உலகக்கிண்ணத் தொடருக்கு வரிந்துகட்டி அழைத்துச் சென்றது இங்கிலாந்து

***"நார்ஸின் பந்தை பென் ஸ்ரோக்ஸ் சிக்ஸருக்கு விரட்டியபோது இங்கிலாந்து மட்டுமல்ல; கூட இலங்கையும் ஆர்ப்பரித்தது."***

பேர்ஸ்டோர்வ் அபாரமாக ஆடி சதமடிக்க மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றதுடன், இலங்கையையும் வரிந்துகட்டிக்கொண்டு நேரடியாக உலகக் கிண்ணத் தொடருக்கு அழைத்துச் சென்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள், அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் மான்செஸ்டரில் நடைபெற்றது.

மழை காரணமாக, தலா 42 ஓவர்களாக கொண்டமைந்த இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர், முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**ஹோல்டர் ஆறுதல்**

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எவின் லீவிஸ் (11) ஏமாற்றினார். சுமார் 2 வருடங்கள், 5 மாதங்கள், 29 நாட்களுக்கு பிறகு அணியில் இடம்பிடித்த கிறிஸ் ஹெயில் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் சிறிது நேரம் வாணவேடிக்கை காட்டி 37 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். ஷாய் ஹோப் (35) ஆறுதல் தந்தார். சாமுவேல்ஸ் (17), ஜேசன் மொஹமட் (18), ராவ்மன் பாவெல் (23) பெரிய அளவில் சோபிக்கவில்லை. அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் (41*), ஓரளவு கைகொடுக்க,

நிர்ணயிக்கப்பட்ட 42 ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் பென் ஸ்டோக்ஸ் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**பேர்ஸ்டோவ் அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு அலெக்ஸ் ஹேல்ஸ் (19) சுமாரான ஆரம்பம் கொடுத்தார்.

2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஜொனி பேர்ஸ்டோவ், ஜோ ரூட் ஜோடி, விரைவாக ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்பாக ஆடிய ரூட், அரைசதமடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 125 ஓட்டங்கள் சேர்த்த போது ரூட் (54) ஆட்டமிழந்தார். அணித் தலைவா ஒய்ன் மோர்கன் (10) ஏமாற்றினார்.

அபாரமாக ஆடிய பேர்ஸ்டோவ், ஒரு நாள் அரங்கில் தனது முதல் சதமடித்தார். நர்ஸ் பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய ஸ்டோக்ஸ், வெற்றியை உறுதி செய்தார்.

இங்கிலாந்து அணி, 30.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பேர்ஸ்டோவ் (100), ஸ்டோக்ஸ் (23) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றியின்மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 1-0 என முன்னிலை பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் பேர்ஸ்டோவ் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி இன்று நெட்டிங்ஹாமில் நடைபெறுகிறது.




**இலங்கை தகுதி**

இங்கிலாந்தில், வரும் 2019ல் நடக்கவுள்ள ஐ.சி.சி., உலக கிண்ணத் தொடருக்கு (50 ஓவர்) நேரடியாக தகுதி பெற மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை 5-0 அல்லது 4-0 என வென்றாக வேண்டிய கட்டாயம் இருந்தது.

எனினும் முதல் போட்டியில் தோல்வியடைந்ததால் மேற்கிந்தியத் தீவுகள் அணி, உலக கிண்ணத்துக்கு நேரடியாக முன்னேறும் வாய்ப்பை இழந்தது. இதனால் இலங்கை, 8ஆவது அணியாக உலக கிண்ணத் தொடருக்கு நேரடியாக தகுதி பெற்றது.

மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும் உலக கிண்ணத் தொடருக்கு தென்னா பிரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை என 8 அணிகள் நேரடி வாய்ப்பு பெற்றன.

மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு அடுத்த ஆண்டு தகுதிச் சுற்று நடத்தப்படும். இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்கேற்று, உலக கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பை பெறலாம்.

# உழவு இயந்திரம் - டிப்பர் விபத்து

## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயம்

(மல்லாவி)

முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள முள்ளியவளை நெடுங்கேணி வீதியில் 07ஆம் கட்டை பகுதியில் பயணித்த உழவு இயந்திரம் ஒன்றை பின்னால் சென்ற டிப்பர் வாகனம் மோதிய விபத்துச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தகப்பன் மற்றும் மகன்களுமாக 03, பேர் படுகாய மடைந்த நிலையில் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு 7.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, உழவு இயந்திரத்தில் மணலை ஏற்றிக் கொண்டு ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு மகன்கள் முள்ளியவளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை பின்னால் அதிவேகத்தில் வந்த டிப்பர் வாகனம் உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியினை மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, முள்ளியவளை 03ஆம் வட்டாரத்தினை சேர்ந்தவர்களான கணபதிப்பிள்ளை இராசரெட்ணம் (வயது-62), மற்றும் அவரது மகன்களான இராசரட்ணம் கேதீஸ்வரன் (வயது-32), இராசரட்ணம் விதுசன் (வயது-25) ஆகியோர் படுகாய மடைந்த நிலையில் வீதியால் சென்ற பொது மக்களினால் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது விபத்தினை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்தின் சாரதி தப்பி சென்றுள்ளார்.

இச்சம்பவத்தை அடுத்து விபத்து நடைபெற்ற இடத்தில் ஒன்றுகூடிய அதிகளவான பிரதேச இளைஞர்கள் டிப்பர் வாகனத்தின் சாரதியினை தேடிய போதும் சாரதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

விபத்துக்குள்ளான உழவு இயந்திரத்தின் இழுவைப்பெட்டி முற்றாக சேதமடைந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-15)

# குடும்பப் பெண் ஒருவரின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள கோவில்குளம் தபால்பெட்டிச் சந்திக்கு அருகே வர்த்தக நிலையத்தில் பொருட்களை கொள்வனவு செய்து விட்டு வீடு நோக்கி நடந்து சென்ற குடும்பப் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பாதிக்கப்பட்ட பெண் பதிவு செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, கோவில்குளம் தபால்பெட்டிச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையத் தொகுதி ஒன்றில் பொருட்களை கொள்வனவு செய்து விட்டு தனது வீடு நோக்கி உமாமகேஸ்வரன் வீதியினூடாக நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரை,

மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இரு மர்ம நபர்கள் பெண்ணை கீழே தள்ளி வீழ்த்தி விட்டு அவரின் கழுத்தில் இருந்த ஒரு பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

திருட்டில் ஈடுபட்ட நபர்கள் முகத்தை முழுமையாக மூடியவாறு தலைக்கவசத்தினை அணிந்திருந்ததுடன், சிவப்பு நிறத்திலான ஆடைகளையும் அணிந்திருந்த தாக பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில்,

அப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கமரா தரவுகளை சேகரித்து குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (மு-15)

## குடும்பஸ்தர் கொலை

# மேலும் ஒருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை வெட்டி படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட முக்கிய நபர் ஒருவர் யாழ் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலர் வீதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வநாயகம் தனபாலசிங்கம் (வயது 38) என்பவரை அப்பகுதியை சேர்ந்த மூன்று பேர் கடத்திச் சென்று பலமாக தாக்கிய பின்னர் வீதியில் குற்றுயிராய் விட்டுவிட்டு சென்றுள்ளனர்.

அவர் பொதுமக்களால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்திருந்தார். குறித்த விடயம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினரிடம் பெற்றுக்கொண்ட தகவலின் அடிப்படையில் குறித்த நபரை கடத்தி சென்றவர்கள் என சந்தேகிக்கப்பட்ட அதே இடத்தை சேர்ந்த சகோதரர்கள் மூவரை கைது செய்வதற்காக அவர்களுடைய வீட்டுக்கு தேடி சென்றுள்ளனர்.

அங்கு அவர்கள் இல்லாததால் அவர்களின் மூத்த அண்ணனையும் அவர்களது தகப்பனையும் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்

இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட சகோதரர்களில் ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (மு-9)

## சைட்டத்தை எதிர்த்து

# நாடு முழுவதும் இன்று தொழிற்சங்க நடவடிக்கை

சைட்டம் எனப்படும் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடுமாறு வலியுறுத்தி பலம்வாய்ந்த தொழிற் சங்கங்கள் சில இணைந்து இன்றைய தினம் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளன.

மருத்துவம், கல்வி என பல துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும், அதிகாரிகளும் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நல்லாட்சி அரசை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கு முக்கிய பங்கு வகித்த தொழிற் சங்கங்களான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையை ஏற்பாடு செய்திருக்கின்றன.

இதற்கமைய இன்று காலை 8 மணி முதல் முழுநாள் பணிபகிஷ்கரிப்பில் அரச மருத்துவர்கள் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கெனவே அரச மருத்துவர்களால் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் பலமுறை தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் பல நோயாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே இன்று நடத்தப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

நாடளாவிய ரீதியிலாக நடத்தப்படவிருக்கும் போராட்டங்கள் குறித்து இதன்போது அறிவிக்கப்பட்டது. (மு-11)

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு



இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து மரணித்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின் ஆறாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 8.00 மணிக்கு நல்லூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பன இணைந்து தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நல்லூரிலுள்ள நினைவுத்தூபியில் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-உ.சாளின்)

## நவராத்திரி ஆரம்பம்

மட்டுவில் வடக்கு சாவகச்சேரி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய நவராத்திரி விழா நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமானது. எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 4.30 மணிக்கு சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வருடாந்த திருவிழா நாளை

கொழும்புத்துறை தூய செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும்புனித அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-10-107)

## அலங்கார உற்சவம்

இணுவில் மருதனார்மடம் திருவேங்கடேஸ்வரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-10-104)

## சர்வதேச அமைதி தினம் இன்று

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் வழங்கும் சர்வதேச அமைதி தினம் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.213 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சுக தாமம் மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவினை இராஜயோகினி டாக்டர் பிரம்மகுமாரி நிர்மலா கஜாரியா (தீதி) வழங்குவார். (இ-3)

## உள்ளூராட்சி தேர்தல் ஜனவரியில் நடக்காது

### மகிந்த தேசப்பிரிய

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான சட்டத்தில், திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனில், அத்தேர்தலை, 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தமுடியாது" என்று, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இதேவேளை உள்ளூராட்சி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர். இன்னும் சில சட்டமூலங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர், வாக்கெடுப்பு நடத்துவதற்கு, 75 நாட்கள் தேவை. ஆகையால், திருத்தங்களை நிறைவேற்றுவது காலதாமதம் ஆகுமாயின், வாக்கெடுப்பும் தாமதமாகும் என்றும் அறிய முடிகிறது. (இ-7)

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலர் வெளி வந்துள்ளது. (இ-3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் திருமதி. **சண்முகநாதன் வதனா**



பிறப்பு 1965 - 05 - 09

இறப்பு 2017 - 08 - 22

அம்மா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் கடந்தும் ஆறவில்லை எம் துயரம் என்றும் உங்கள் நினைவுகளோடு வாழ்ந்து கொண்டு இருக்கும்...

சி-9694

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் (நாதன் மில்)

:077 803 0388
077 266 9417

பன்னையம்பதி, தும்பளை வீதி, பருத்தித்துறை.

## இராசி பலன்

21.09.2017

(புரட்டாதி 05, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

பிரதமை முற்பகல் 11.02 மணிவரை

அத்தம் பின்னிரவு 12.52 மணிவரை

சுபநேரம் 7.32-9.02 மணிவரை

இராகுகாலம் 01.32-3.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம், பூரட்டாதி | | ராகு |
| கேது | | | செவ், புத,சுக், |
| | சனி | குரு | சூரி சந் |

**மீனம்:** கனவு பலிதமுண்டு, வழிபாடு ஆனந்தம் தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மேடம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்:** குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மிதுனம்:** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

**கும்பம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், மற்றவர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.

**கடகம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், தொழிலில் தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர், போசன சுகமுண்டு.

**மகரம்:** வருமானம் திருப்திகரமானதாக அமையும், தேகநலனில் தெளிவு பிறக்கும், புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** சிறப்பான நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**தனுசு:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பாராட்டும் புகழும் கூடும் நாள், பிறர் உதவியுண்டு.

**விருச்சிகம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் பகை அகலும்.

**துலாம்:** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** சுப விரயங்கள் கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

# முதலமைச்சர் பதவியில் தொடர்ந்தும் இருக்கவே 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு நஷீர் ஆதரவு


கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அஹமட் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காகவே 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படுவதன்மூலமே தமிழ் மக்களுடைய சில அடிப்படை பிரச்சினைகளுக்கும் தீர்வைக்காண முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இருபதாவது திருத்தச் சட்டம் நிறை வேற்றப்பட்டால் தற்போது கலைக்கப்பட வேண்டிய மாகாண சபைகளின் ஆயுட் காலம் அதிகரிக்கப்படலாம். ஆகையால் முதலமைச்சராக தொடர்ந்தும் இருக்கலாம் என்ற நினைப்பில் தான் கிழக்கு மாகாண முதலமைச்சர் இருபதாவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கலாம். கிழக்கு மாகாண முதல

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசனம்

மைச்சர் கட்சியின் சொல்லை கேட்பதாகத் தெரிய வில்லை. மேலும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படுவதன் மூலமே மக்களுடைய சில அடிப்படை பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைக்க முடியும். தற் போதும் எமது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இராணுவத்தின் வசம் உள்ளன.



இதனால் எமது சுற்றுலாத் துறை உட்பட சுய தொழில்களில் போதிய வருமானத்தை ஈட்ட முடியாத நிலை காணப்படுகின்றது. இதுதவிர எமது கிராமத்தின் பெயர்கள் சிங்கள பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றை பழைய படி தமிழ் பெயர்களில் மாற்றம் செய்ய வேண்டும் என முதலமைச்சர் தெரிவித்தார். (இ-4)

# வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் விருது வழங்கல்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இம்மாதம் 22,23, 24 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா இடம்பெறவுள்ளது. இந்த விழாவில் விருது பெறுவோர் விபரம் வருமாறு,

சிறந்த நூற்பரிசுத் தேர்வு

பாலகிருஸ்ணன் இரகுவரன் (பருத்தித்துறை) ஆய்வு நூல்-வடமராட்சியில் நாட்டுக் கூத்துகள்,

தருமராசா அஜந்தகுமார் (கரவெட்டி) புதுக் கவிதை - நான் அவளுக்கொரு கடலை பரிசளித்தேன்,

மார்க்கண்டு அருள் சந்திரன் (கோண்டாவில்) சமயம் - யாழ்ப்பாணப் பெட்டகம் தொகுதி 02 வணக்கஸ்தலங்கள்,

விசுவாசம் ஜெகநாதன் (உரும்பிராய்)மரபுக் கவிதை - சாதி வலயங்களுள் வாக்கு வங்கிகள்,

மார்க்கண்டு அருள் சந்திரன் (கோண்டாவில்) வரலாறு -யாழ்ப்பாணப் பெட்டகம் தொகுதி01ஆளுமைகள்,

கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் (நெல்லியடி) சிறுகதை - தீர்வு தேடும் நியாயங்கள்,

வண.செபமாலை அன்புராசா (மாங்குளம்) சிறுவர் இலக்கியம் சிறகடிக்கும் சிட்டுக்கள்,

யோசவ் யோண்சன் ராஜ்குமார் (யாழ்ப்பாணம்) நாடகம் - அற்றைத்திங்கள்,

நாராயணி யோகேந்திரநாதன்(நீர்வேலி) நாவல் -நீந்திக் கடந்த நெருப்பாறு,

ஐயாத்துரை சாந்தன் (மானிப்பாய்) மொழிபெயர்ப்பு - என்முதல் வாத்து,

அருணாசலம் செல்லத்துரை (வவுனியா) ஏனைவை-அடங்காப்பற்று வன்னியில் ஆதிகாலத் தமிழர் வரலாறு,

ஆக்கத்திறன் போட்டி-2017 போட்டி முடிவுகள் (தமிழ் மொழிமூலம்) பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்கள்

கவிதையாக்கம் (திறந்த பிரிவு)

முதலாமிடம் வி.சந்திரமோகன் (ஸ்ரீகரநர்த்தனாலயம்,முழுங்காவில்), இரண்டாமிடம் ம.தேவநேசன் (நானாட்டன் மன்னார்), மூன்றாமிடம் சாலினி சாள்ஸ் சண்முகப்பிரியன் (தொன்மம் கலைக்குழு யாழ்ப்பாணம்).

•சிரேஷ்ட பிரிவு

முதலாமிடம் சிறோசேக்கா (தொன்மம் இசைக்குழு, யாழ்ப்பாணம்). இரண்டாமிடம் சிவசக்தி வினுஜா (சிவசக்தி கலாமன்றம் மன்னார்), மூன்றாமிடம் மகாலிங்கம் மங்கை (ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக் கல்லூரி வவுனியா),

கனிஷ்ட பிரிவு

முதலாமிடம் ஆனந்தராசா கஜீவன் (அரியாலை திஸ் நாடக மன்றம் நல்லூர்), இரண்டாமிடம் ஏழுமலைப்பிள்ளை வைரவன்(முத்தமிழ்க் கலாமன்றம்கிளிநொச்சி),

பாடலாக்கம் திறந்த பிரிவு

முதலாமிடம் கனகரத்தினம் குமணன் (யாழ். மாவட்ட இசைக்குழுக் கலைஞர் சங்கம்), இரண்டாமிடம் அந்தோனிப்பிள்ளை மங்களராசா (கலாலயம் கரைச்சி), மூன்றாமிடம் மாயழகு கோமதி (ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக் கல்லூரி வவுனியா),

குழு நடனம்

முதலாமிடம்(பொன்னாலை சந்திர பரத கலாலயம், சுழிபுரம் சங்கானை), இரண்டாமிடம் - (ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி அருளக நுண் கலைக் கல்லூரி, வவுனியா), மூன்றாமிடம் - (வசந்தம் இசைக் குழு, கோண்டாவில் கிழக்கு, நல்லூர்).

ஓவியம் (திறந்த பிரிவு)

முதலாமிடம்- சுப்பிரமணியம் பத்மநாதன் (சிவத் தமிழ் மானிடவியல் கழகம், நல்லூர்),இரண்டாமிடம்- செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி - (புத்தொளி கலை இலக்கியமன்றம், பரந்தன்), மூன்றாமிடம் - அஸ்மீர் மசாகிறா பானு (ஸ்ரீகரநர்த்தனாலயம், முழுங்காவில்).

கனிஷ்ட பிரிவு

முதலாமிடம் ஜெகசீலன் சனார்த்தனன் (திருநாவுக்கரசு கலை இலக்கிய மன்றம், வேலணை), இரண்டாமிடம் * சத்திய சிவம் டிலானி (மாவை பொதுச் சேவைக் கழகம், தெல்லிப்பழை),

சிரேஷ்ட பிரவு

முதலாமிடம் தயாளன் மிதுனா (ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக் கல்லூரி, வவுனியா),இரண்டாமிடம் றமேஸ் மதுமிதா (அரியாலை திஸ் நாடக மன்றம், நல்லூர்),மூன்றாமிடம் சுகுமார் சுஜிதரன் (தொன்மம் கலைக்குழு யாழ்ப்பாணம்).

புகைப்படம்

முதலாமிடம் ஜெனோவின் ஜெயப்பிரகாஸ் (ஒளிக் கலை ஒன்றியம், மன்னார்), இரண்டாமிடம் ஜோஜ் ஜஸ்ரின் (யாழ். ராகஸ்வரம் இசை மன்றம், கொழும்புத்துறை),மூன்றாமிடம் தங்கவேல் நிதர்சன் (குமரக் கோட்டம் பிக்சஸ், கோண்டாவில்),

ஆக்கத்திறன் போட்டி-2017 போட்டி முடிவுகள் (தமிழ்மொழிமூலம்) பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்கள்

நாடகம்

முதலாமியம் (ஸ்ரீகிருஸ்ணாலய மன்றம், நல்லூர்), இரண்டாமிடம் (அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி, வவுனியா), மூன்றாமிடம்(ஆரோகணா அரங்கக் கல்லூரி, தெல்லிப்பழை).

சிறந்த ஆண் நடிகர்- ஜானு அரங்கக் கல்லூரி - முதியவர், சிறந்த பெண் நடிகை அகிலாண்டேஸ்வரி - பெண் குழுமத்தின் தலைவி

சிறந்த இசை- ஆரோகணா அரங்கக் கல்லூரி - தெல்லிப்பழை

சிறந்த காட்சி- ஆரோகணா அரங்கக் கல்லூரி- தெல்லிப்பழை

சிறந்த ஒப்பனை- அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி, வவுனியா

சிறந்த நெறியாள்கை - ஜானு அரங்காற்றுகையகம், கிளிநொச்சி.

வில்லுப் பாட்டு

முதலாமிடம்- நாராயணா கலைக்கழகம், கோண்டாவில் ,இரண்டாமிடம் - குபேரகா கலைக் கழகம், சுன்னாகம். உடுவில்.

மூன்றாமிடம் - ஜானு அரங்கக்கல்லூரி, கிளிநொச்சி.

நாட்டிய நாடகம்

முதலாமிடம் - நிருத்திய நிகேதன நுண்கலை மன்றம், வவுனியா, இரண்டாமிடம் - பொன்னாலை சந்திர பரத கலாலயம், யாழ்ப்பாணம்,மூன்றாம் இடம் - ஜானு அரங்கக் கல்லூரி, கிளிநொச்சி.

தனி நடனம்

முதலாமிடம் -இலங்கரட்ணம் சுஜித் - ஜானு அரங்கக் கல்லூரி, கிளிநொச்சி,இரண்டாமிடம்- சசிகரன் தனுஜா - ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக் கல்லூரி, வவுனியா, மூன்றாமிடம் - வன்னியசிங்கம் ஹம்சினி- நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி, வவுனியா.

ஆக்கத்திறன் போட்டி அரச ஊழியர்கள்

எழுந்தமான கவிதையாக்கம்

முதலாமிடம்- இராசலிங்கம் ஸ்ரீதரன், ஆசிரியர் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம்,இரண்டாமிடம் - செல்வி. யோகராசா அனுசியா, கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. மூன்றாமியம் - செபமாலை தாசன் சத்தியபவானி, ஆசிரியர், யா.இந்து மகளிர் கல்லூரி.

குறுநாடகவாக்கம்.

முதலாமியம் - திருமதி திலீபன் சுதாஜினி, ஆசிரியர், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா,இரண்டாமிடம் - தம்பிப்பிள்ளை சுதன், ஆசிரியர், விநாயக வித்தியாலயம், கணேசபுரம், வவுனியா, மூன்றாமிடம் - கோவிந்தசாமி தமிழரசி, அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைச்சு, அரியாலை, யாழ்ப்பாணம்.

சிறுகதையாக்கம்

முதலாமிடம் - த.நிறைமதி, ஆசிரிய ஆலோசகர், கோட்டக் கல்வி அலுவலகம், வவுனியா. இரண்டாமிடம் - வேலாயுதம் லவேந்திரா, நூலகர், பிரதேச சபை, கரைச்சி, மூன்றாமிடம் - கதிர்காமநாதன்சிவகுமார்,முகாமைத்துவ உதவியாளர், பிராந்திய உதவிஆணையாளர்அலுவலகம், கிளிநொச்சி.

கட்டுரை வரைதல்.

முதலாமிடம் - மகேந்திரன் ஜெயமிதுன், முகாமைத்துவ உதவியாளர், விவசாயத் திணைக்களம், அரியாலை யாழ்ப்பாணம்,இரண்டாமிடம் -திருமதி முத்துலிங்கம் சுமதி, அபிவிருத்தி உத்தியோகத்தர், காணிப் பயன்பாட்டு அமைச்சு, கண்டி வீதி, யாழ்ப்பாணம்,மூன்றாமிடம் - சின்னையா தயாபரன், முகாமைத்துவ உதவியாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

பாடலாக்கம்

முதலாமிடம் - கிறிஸ்தோபர் ஜெயபாலன், படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார், இரண்டாமிடம் - யோகநாதன் சகதீசன், நூலகர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில், மூன்றாமிடம் - திருமதி. பஞ்சலிங்கம் சுசீலா, ஆசிரியர், விபுலானந்தா கல்லூரி, பண்டாரிக் குளம், வவுனியா.

ஓவியம்

முதலாமிடம் - திருமதி. பாலபவன் சங்கீதா, அபிவிருத்தி உத்தி யோகத்தர், விவசாய அமைச்சு, கண்டி வீதி, அரி யாலை, இரண்டாமிடம் - நாகலிங்கம் ரமேஸ்வரன், அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதிப் பிரதம செயலாளர், அலுவலகம், நல்லூர், யாழ்ப்பாணம், மூன்றாமிடம் - திருநாவுக்கரசு மனோராஜ், திணைக்களத் தொழிலாளி, விவசாய அமைச்சு, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

புகைப்படம்

முதலாமிடம் - கந்தசாமி கனகரட்ணம் அமர்நாத் முகாமைத்துவ உதவியாளர், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், நல்லூர், யாழ்ப்பாணம், இரண்டாமிடம் - திருமதி. திலீபன் சுதாஜினி, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வவுனியா,மூன்றாமிடம் - ஜோர்ஜ் ஜஸ்ரின், நூலக பிரிசாரகர், யாழ். மாநகரசபை பொது நூலகம்.

தனி நடிப்பு

முதலாமிடம் - யோகநாதன் சகதீசன், நூலகர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில், இரண்டாமிடம் - இராச சிங்கம் ஸ்ரீதரன், ஆசிரியர், கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம், மூன்றாமிடம் - செல்வி. சுந்தர ராசா ரஞ்சினி அலுவலகப் பணியாளர்,வலயக் கல்வி அலுவலகம், வவுனியா.

பேச்சு

முதலாமிடம் - தம்பிப்பிள்ளை சுதன், ஆசிரியர், விநாயக வித்தியாலயம், கணேச புரம், வவுனியா, இரண்டாமிடம்-செல்வி அருந்தவராசா சாம்பவி முகாமைத்துவ உதவியாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. மூன்றாமிடம் - செல்வி. சுந்தரராசா ரஞ்சனி அலுவலகப் பணியாளர், வலய க்கல்வி அலுவலகம், வவுனியா.

தனி நடனம்

முதலாமிடம் - திருமதி. சதீபன் லிசாந்தினி, கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி,இரண்டாமிடம் - விநாயகமூர்த்தி நந்தகுமார், அலுவலகப் பணியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி. மூன்றாமிடம்- யோகநாதன் சகதீசன், நூலகர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

சிங்கள மொழி மூலம் (அரச ஊழியர்கள)

பேச்சு

முதலாமிடம்- சி.என்.கே. அன்ரனி,

எழுந்தமான கவிதை யாக்கம்

முதலாமிடம் சி.என். கே. அன்ரனி .

பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்களுக் கிடையிலானது நாடகம்

முதலாமிடம்-மடுகந்த ரங்கலா மன்றம்- ரங்கன ஜெயகொடி

குழு நடனம்

முதலாமிடம் -விஜயரங்கரணதிஸ்ர கலாமன்றம்-K.A. விஜயரட்ண பெரேரா,


தனி நடனம்

முதலாமிடம் -விஜயரங்கரணதிஸ்சர கலாமன்றம் - K.A. விஜயரட்ண பெரேரா.

118

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?



**சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியம்**

எஸ்.மயூரன் ஆகிய நான் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மே மாதம் எனது கடமையில் சேர்ந்தேன். வித்தியா கொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வந்தேன். உலர்ந்த குருதி மாதிரி, கழுத்து பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட சீமெந்து, கண் பகுதியில் காணப்பட்ட திரவம், உட்பட நான்கு திரவ மாதிரிகளை பெற்றதாக கூறி மன்றில் அவற்றை ஒப்படைத்தார்.

மேலும் கொலை செய்யப்பட்ட மாணவியின் இரத்த மாதிரி, சந்தேக நபர்கள் ஒன்பது பேரின் இரத்த மாதிரிகள் என்பவற்றையும் மன்றில் சமர்ப்பித் தார்.

**பிரதான பொலிஸ் பரிசோதகர் சாட்சியம்**

டபிள்யூ பி பெரேரா ஆகிய நான் தற்போது மன்னாரில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிவருகின்றேன்.

இதற்கு முன்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்தேன்.

முதல் மூன்று சந்தேக நபர்களான சகோதரர்களை இக்கொலையின் சந்தேக நபர்களாக கைது செய் திருந்தேன்.

கைது செய்த பின்னர் அவர்களது வீட்டினை சோதனையிட்ட போது இருவரின் மேலட்டை (சேட்), பணியன் (ரீசேர்ட்) ஆகியவற்றில் இரத்தக்கறை காணப்பட்டது. மற்றொருவரின் இடுப்பின் பின்புறத்தில் இரத்தக் கறை காணப்பட்டது என சாட்சியம் அளித்து அச்சான்று பொருட்களினையும் மன்றில் கையளித்திருந்தார்.

**குற்றப்புலனாய்வு துறை அதிகாரி சாட்சியம்**

ஏ.பி.என் நிசாந்த சில்வா ஆகிய தான் 18 வருடங்களாக குற்றப் புலனாய்வு துறை அதிகாரியாககடமையாற்றி வருகிறேன்.

விசேடமாக கூட்டுக் கொலை தொடர்பில் புலனாய்வு செய்து வருவதாக கூறி குறித்த வழக்கில் ஊர்காவற்றுறை பொலிஸார், சட்ட வைத்திய அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட சான்றுப் பொருட்களை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் நீதிமன்றில் கேட்டுக் கொண்டார்.

சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளையும் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கு மரபணு பரிசோதனைக்கு மன்று அனுப்பி வைக்க நட வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மன்றில் அவர் கேட்டுக் கொண்டார்.

குறித்த வழக்கில் 15.06.2015 அன்று ஏழு பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் நீதிபதி சந்தேக நபர்களிடம் ஏதும் கூறவுள்ளதா? என கேட்டிருந்தார்.

அதிலொருவர் சம்பவம் நடைபெற்ற போது தான் கடைக்கு சென்ற தாக கூறினார்.

இது விசாரணையின் போது கூறப்பட வேண்டியது என தெரிவித்த நீதிபதி நீங்கள் விரும்பினால் சட்டத் தரணிகளை வைத்து வாதாட முடியும் என கூறினார்.

அதற்கு எமக்கு சட்டத்தரணிகள் யாரும் வருகின் றனர் இல்லை என சந்தேக நபர்கள் கூற, சட்டத்தரணி உங்களுக்கு ஆஜராகுவதை யாரும் தடுத்தால் அதனை மன்றில் தெரியப் படுத்துமாறும் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நீதிபதி கூறினார்.

தொடர்ந்து குறித்த சந்தேக நபர்களை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்வதற்கு மன்று அனுமதி அளிக்கின்றது. சந்தேக நபர்களுடன் தொடர்புடைய அனைத்து வங்கி கணக்குகளினையும் விசாரணை செய்ய மன்று கட்டளை இடுகின்றது என நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.

சுமார் நான்கு மணி நேர மாக நடைபெற்ற இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா அனுசரணையில் சட்டத்தரணிகளான சுகாஸ், விஜயராணி, அம்பிகா, ஜனகன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். குறித்த வழக்கு மீண்டும் அடுத்த மாதம் 13 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும்.

மாணவி வித்தியாவின் படு கொலை தொடர்பில் 15.06.2015 அன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் சாட் சியங்கள் பதிவு செய்யப்பட் டன.

வித்தியாவின் தாய் சரஸ்வதி, சகோ தரன் நிசாந்தன், தனியார் பஸ் நடத்துநர், ஊர்காவற்றுறை பொலிஸ் பரிசோதகர், ஊர்காவற்றுறை தலைமைப் பொலிஸ் அதி காரி என ஏழு பேரின் சாட்சி யங்கள் வித்தியாவின் மரண விசாரணை யின் பொருட்டு பதிவு செய்யப் பட்டன.

20.05.2015 அன்று மாணவி வித்தியாவின் படு கொலையைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டங்களும் பேர ணிகளும் இடம் பெற்றன.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிலர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலையடுத்து 130 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிந்தவிடயமே.

இவ்வாறு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 130 கைதிகளும் பகுதி பகுதியாக யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வரிசையில் 04.06.2015 அன்று 40 பேர் யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் ஆஜர் படுத்தப் பட்டனர். இதில் 6 பேருக்குப் பிணை வழங்க மிகுதி 34 பேர்தொடர்ந்தும்விளக்கமறியலில் வைக்கப் பட்டனர்.


இதையடுத்து 09.06. 2015 அன்று 33 பேர் யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர் படுத்தப் பட்டதுடன் 15 பேருக்குப் பிணை வழங்கப்பட ஏனைய 18 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

(திங்கள் வளரும்)

-புருசோத்தமன்-

# மரக்குற்றிகளை கடத்திய ஹன்டர் வாகனம் தடம்புரள்வு

## அதிரடிப்படையினரும் வன இலாகாவினரும் துரத்திய போது சம்பவம்



வவுனியாவில் மரக்குற்றிகளை கடத்திச் சென்ற ஹன்ரர் ரக வாகனத்தை விசேட அதிரடிப்படையினரும், வன இலாகா அதிகாரிகளும் விரட்டிச் சென்ற போது விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஓமந்தை, குஞ்சுக்குளம் பகுதியில் இருந்து பெறுமதியான மரக்குற்றிகளை ஏற்றி மூடிய நிலையில் பயணித்த ஹன்ரர் ரக வாகனம் வவுனியா நகரை நோக்கி பயணித்த போது பெரியமடு பகுதி விசேட அதிரடிப்படையினரும் ஓமந்தை மற்றும் வவுனியா வன இலாகா அதிகாரிகளும் சந்தேகம் கொண்டு குறித்த வாகனத்தை மறித்து சோதனையிட முயன்றுள்ளனர்.

இதன்போது குறித்த வாகனத்தை சாரதி நிறுத்தாது தப்பிச் சென்றுள்ளார். விசேட அதிரடிப்படையினரும், ஓமந்தை மற்றும் வவுனியா வன இலாகா அதிகாரிகளும் குறித்த வாகனத்தை பின்தொடர்ந்து துரத்திய நிலையில், வவுனியா, பேயாடிகூழாங்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு அருகில் உள்ள புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்ட வேளை குறித்த வாகனம் அப் பகுதியில் விபத்துக்குள்ளாகி தடம் புரண்டது.

சாரதியும், அதில் பயணித்தவர்களும் தப்பியோடிய நிலையில் வாகனமும் அதில் இருந்த பெறுமதியான மரக்குற்றிகளும் விசேட அதிரடிப்படையினராலும், ஓமந்தை மற்றும்வவுனியாவன இலாகா அதிகாரிகளாலும் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவு னியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)




# 142 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள்



தென்னை பயிர்ச்செய்கை சபையினால் மானிய அடிப்படையில் 142 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண தென்னை பயிர்ச்செய்கை பிராந்திய முகாமையாளரின் ஏற்பாட்டில் ஒரு பயனாளிக்கு 14 தென்னங் கன்றுகள் வீதம் 142 பயனாளிகளுக்குமாங்குளம் கிராம சேவகர் பிரிவில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊடு பயிர்ச் செய்கையினை மேற்கொண்ட பயனாளிகளுக்கு காசோலையும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தென்னைப் பயிர்ச்செய்கையில் பரவிவரும் சிவப்பு நிற வண்டு தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு 130 பயனாளிகளுக்கு மருந்தும் அதற்கான உபகரணங்களும் ஒட்டுசுட்டான் பிர தேச செயலாளர் அனிருத்தனினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# மோ.சைக்கிள் - ஆட்டோ விபத்து; நால்வர் காயம்

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, மரக்காரம்பளை வீதி, காத்தான் கோட்டம் சந்திக்கு அருகே நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் குறித்த விபத்து நடைபெற்றது. மரக்காரம்பளை வீதியூடாக வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், குழுமாட்டுச்சந்தியிலிருந்து கணேசபுரம் நோக்கி பயணித்த ஆட்டோவும் காத்தான்கோட்டம் சந்திக்கு அருகில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்டோ சாரதி மதுபோதையில் இருந்தமையால் அவரை நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# கேரளக் கஞ்சாவை கடத்த முயன்றவர் கைதானார்



(மல்லாவி)

வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் வைத்து யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு நோக்கி பயணித்த அரச பேருந்தில் கேரளக் கஞ்சாவைக் கடத்திச் சென்ற பயணி ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.20 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் உப பொலிஸ் பரிசோதகர்கள் தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்கள் அடங்கிய பொலிஸ் அணியினர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இ.போ.ச. பேருந்தை சோதனையிட்ட போது, பயணி ஒருவரிடம் இரண்டு கிலோ கேரள கஞ்சாவினை கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் பயணியையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் கைதான சந்தேக நபரை வவுனியா பொலிஸ் நிலைய மேலதிக விசாரணைகளுக்காக போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

கைதான சந்தேக நபரிடம் வவுனியா பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளின் போது, கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், இதனை கைதான 34 வயதுடைய டினேஸ்வன்னிநாயக்க என்ற சந்தேக நபரே கடத்திச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-250-15)

# மாணவர்கள் விபத்தில் காயம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு-கொக்கிளாய் வீதியில் உண்ணாப்பிலவு பகுதியில் நடைபெற்ற வீதி விபத்தில் இரண்டு பாடசாலை மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

பாடசாலை விட்டு வீடு சென்ற மாணவர்கள் மீது பிக்கப் வாகனம் மோதியதாலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது.

விபத்து தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். (2-281)

# சிறுவர்கள் பாடசாலை செல்லாது சட்டவிரோத செயல்களில் ஈடுபாடு

## பொதுமக்கள், பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் அதிகளவான சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாது பல்வேறு ஆபத்தான வேலைகளுக்கு செல்லும் நிலை காணப்படுவதாக இப் பகுதி பொதுஅமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி கல்மடுநகர் நாவல்நகர், ரங்கன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் கூடுதலான சிறுவர்கள் பாடசாலைக்குச்செல்லாத நிலைமை காணப்படுவதுடன், இவ்வாறு பாடசாலை செல்லாத சிறுவர்கள் மணல் அகழ்வுகள் மற்றும் பல்வேறு சட்டவிரோத வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இப்பகுதி பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த பகுதியில் வாழும் குடும்பங்களில் அதிகளவான குடும்பங்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களாக காணப்படுவதனால் இவர்களது குடும்ப வருமானத்தை கருத்திற் கொண்டு பல சிறுவர்கள் இவ்வாறான வேலைகளில் ஈடுபடுவதாகவும் சில பெற்றோர்கள், உறவினர்களின் அக்கறையீனங்களால் பலர் இவ்வாறு பாடசாலைக் கல்வியை விட்டு விலகி வேலைகளுக்கு செல்வதாகவும் இப் பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான சிறுவர்களின் எதிர்காலம் குறித்து இவர்களை கற்றல் செயற்பாடுகளில் அல்லது தொழில் சார்கற்கை நெறிகளில் இணைத்து இவர்களின் எதிர்காலத்தை வளமுள்ளதாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# சுகாதார அமைச்சின் இணைப்பு அலுவலகம் மன்னாரில் திறப்பு



(மன்னார்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பு அலுவலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் குறித்த உப அலுவலகம் நேற்று புதன் கிழமை காலை 8.30 மணியளவில் சர்வமத தலைவர்களின் ஆசியுடன் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சி.ஏ. சந்திரையா, தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ மாவட்ட அமைப்பாளர் இராஜேந்திரம் பற்றிக், ரெலோ முக்கியஸ்தர் கணேசலிங்கம் லோக்கன், ஈ.பி. ஆர்.எல். எப். அமைப்பின் மாவட்ட பொறுப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-4)

# கசிப்புடன் கைதான பெண்ணுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டது

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு இருபதாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், பத்து நாட்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடவேண்டும் என்றும் கிளிநொச்சிமாவட்ட நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி ஊரியான் பகுதியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணொருவரை கடந்த 18ஆம் திகதி பிற்பகல் கிளிநொச்சிப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் ஏற்கனவே இவ்வாறான குற்றம் ஒன்றின் மூலம் தண்டிக்கப்பட்டதை கவனத்திலெடுத்த மன்று குறித்த பெண்ணுக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன், சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் 10 நாட்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (2-315)

# நூறு மில்.ரூபா நிதியொதுக்கீட்டில் 50 சிறிய குளங்கள் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சினூடு நூறு மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் ஐம்பது சிறிய குளங்களின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்ற அமைச்சினது நிதியொதுக்கீட்டின் கீழ் 999 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் விவசாய செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள சேதமடைந்த குளங்கள் மற்றும் ஏனைய குளங்களை புனரமைக்கும் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சினது நூறு மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் 50 குளங்களின் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)



முல்லை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையக் கட்டடத்திறப்பு விழா நேற்று சிறப்புற இடம்பெற்றது. முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை இந்தியாவில் இருந்து வருகை தந்த 55 வருட தவஜோகியும் வைத்திய கலாநிதியுமான நிர்மலா கஜாரியா, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி .விக்னேஸ்வரன் ஆகி யோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைத்தனர் . இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அதிகாரி,கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்த னர்.

(படங்கள் : பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சிந்தனைகள் சிதறடிக்கப்படாது அமைதி பெறுவதற்கான ஒழுங்கே தியானமாகும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

கடந்த கால நினை வு களே எமது மனங்களைத் தொடர்ந்து குழம்பிக் கொண் டிருக்கின்றன. அமைதி குன் றியவர்களாக நாம் காணப் படுகின்றோம். ஆதலால் எம க்கு அமைதி வேண்டும். அந்த அமைதியைப் பெற எங்களின் சிந்தனை சிதறடிக்கப்படாது கட்டிக்காக்கப் பட வேண்டும். அதனைக் கட்டிக்காக்கும் ப்யணத்திற்கான ஒழுங்கே தியானமாகும். உரியவா றான தியான முறைகளையே பிரம்மகுமாரிகள் சொல்லித் தருகின்றார்கள் என வடக்கு மாகாண முதலமைச்ச்ர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலையம் வட்டுவா கல் பகுதியில் நேற்று முன் தினம் காலை 9.30 மணி யளவில் திறந்து வைக்கப்பட் டது .

இக்கட்டடத்ததை திறந்து வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

பல்லாயிரம் துன்பச் சுமை களை மனங்களில் தாங்கிக் கொண்டு நடைபிணங்க ளாக உலாவிக் கொண்டிரு க்கின்ற எம்மக்களின் மனங் கள் சற்று அமைதி பெறவேண் டுமென்ற நல்லெண்ணத் தில் இவ்வகம் திறந்து வைக் கப்படுகிறது.

கடந்த கால நினைவுகளே எமது மனங்களைத் தொடர் ந்து குழப்பிக் கொண்டிருக் கின்றன. அமைதி குன்றி யவர் களாக நாம் காணப்படுகின் றோம். ஆகவே எமக்கு அமைதி வேண்டும். அந்த அமைதியைப்பெற எங் களின் சிந்தனை சிதறடிக் கப்படாது கட்டிக்காக்கப்பட வேண்டும். அதனைக் கட்டி க்காக்கும் பயணத்திற்கான ஒழுங்கே தியானமாகும். உரியவாறான தியான முறை களையே பிரம்மகுமாரிகள் சொல்லித்தருகின்றார் கள்.

இத்தியானங்களின்மூலம் மக்கள் உளவியல் ரீதியாக சக்தியூட்டப்படுகின்றனர். அவ்வாறான சக்தியூட்டல் கள் மூலம் மனம் உள்ளார்த் தமாக வலுவூட்டப்படுகின் றது. வைத்திய கலாநிதி நிர் மலா கஜாரியா கடந்த 55 வருடங்களாக ஆசியப் பிராந் தியம் முழுவதிலுமே குழப்ப மடைந்த மக்களு க்கு வலு வூட்டல் தியான முறைமை களைக் கற்றுக் கொடுத்தும் அவர்களை ஈடுபடச் செய்தும் அவர்களுக்கான அமைதி நிலைகளை பெற்றுக் கொடுத் தும் வருகின்றார். அவர்க ளின் முயற்சி பாராட்டுக்கு ரியது.

இது போன்ற தியான முறைமைகள் காலாதி கால மாக இந்திய ஆன்மீக கலா சாரத்தில் இடம் பெற்று வந்து ள்ளன.

பிரம்மகுமாரிகள் அமைப் பினர் மக்களின் மனக்கிலே சங்களைப் போக்கி அமைதி யைப்பெற வழிவகுப்பதே அவர் களின் குறிக் கோள். அன்பும் அரவணைப்புமே அவர்க ளின் அன்றாடக் கருவிகள். மென் சொற்களே அவர்களின் மின்னாயுதம்.

அவர்கள் மதம் மாற்ற வரவில்லை. மனச் சஞ்சல ங்களைஎப்படிக் குறைப்பது, நீக்குவது போன்ற விடய ங்களைக் கற்றுத்தரவே வந் துள்ளார்கள்.

அவர்களின் உளவியல் விருத்திக்கான வலுவூட்டல் நிகழ்வுகள் சிறப்பாக நடை பெற வேண்டும் என்று வாழ் த்துகின்றேன். (2)

# மருத்துவ சான்றிதழ் பெறுவோர் நீண்ட நேரமாகக் காத்திருப்பு

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு



(குருமன்காடு)

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக வவுனியா தேசிய போக்குவரத்து வைத் திய நிறுவனத்துக்கு மருத்து வச் சான்றிதழ் பெறச் செல்ப வர்கள் ஏழு மணி நேரமாக காத்திருக்க வேண்டி இருப் பதாக பலரும் விசனம் தெரி வித்துள்ளனர்.

புதிதாக சாரதி அனுமதிப் பத்திரம் பெறுபவர்கள், சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப் பிக்க செல்பவர்கள் மற்றும் சாரதிகளுக்கான பல்வேறு சேவைகளைப் பெறுவதற்கு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை தேசிய போக்கு வரத்து திணைக்களத்தின் கீழான வைத்திய நிறுவனத் திற்கு செல்பவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு சுமார் ஏழு மணிநேரமாக காக்க வைக் கப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

மருத்துவ சான்றிதழ் பெறு வதற்காக காலையில் 8.30 மணிக்கு குறித்த நிறுவனத் துக்கு செல்பவர்கள் பிற்பகல் 2மணி வரையில் காத்திருந்து மருத்துவ சான்றிதழை பெற வேண்டிய நிலைமை காண ப்படுகின்றது.

வவுனியா தேசிய போக்கு வரத்து வைத்திய நிறுவனத் துக்கு சாரதி அனுமதிப்பத்தி ரத்திற்கான மருத்துவ சான்றி தழ் பெறுவதற்கு வந்திருந்த ஒருவர் கருத்துத் தெரிவிக் கையில்,

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவப் பரிசோதனை மூன்று கட்டங்க ளாக நடைபெறுகிறது. அதன் பின்னர் சான்றிதழ்கள் வழங் கப்படுகின்றது.ஆனால்மருத்துவ சான்றிதழ் வழங்கும் வைத் தியர் காலை 8.30 மணி தொட க்கம்10 மணிவரையும் சேவை யாற்றி விட்டு புறப்பட்டு சென்று விடுவதாகவும், பின்பு பிற்பகல் ஒரு மணிக்கு மீண்டும் வரும் மருத்துவ அதிகாரி பரிசோ தனைகளை முடித்து சான்றிதழ் வழங்க மாலையாகி விடுவ தாகவும் குறிப்பிட்டார்.

வவுனியா தேசிய போக்கு வரத்து வைத்திய நிறுவனத் துக்கு சேவையை பெற வரும் அரச உத்தியோகத்தர்கள் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள், குடும் பப் பெண்கள் வவுனியா தேசிய போக்குவரத்து வைத்திய நிறு வனத்தின் இந் நடவடிக்கை காரணமாக பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வருவ தாகவும் விசனம் வெளியிட் டனர். (2-250)



# ஆற்றுமணல், முதிரை மரக்குற்றிகள் ஏற்றிப்பயணித்த வாகனங்கள் கைப்பற்று

(மல்லாவி )

கிளிநொச்சி,முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்க ளுக் கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன வின் நேரடிக் கண்காணி ப்பின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்தும் படைப்பிரிவின் பொலிஸார் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் விசேட வீதிக் கண்காணிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த போது, அனுமதிப் பத்திரத்திற்கு முர ணான் வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 03 டிப்பர் வாகனங்களை யும்,சட்டவிரோதமான முறை யில் வெட்டப்பட்ட முதிரை மரக் குற்றிகளை கடத்திச் சென்ற மகேந்திர பிக்கப் வாக னம் ஒன்றையும் கைப்பற்றி யுள்ளதுடன். சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 04, பேரையும்கைது செய்து தரும புரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக கிளி நொச்சி-முல்லை த்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலு வலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


இச்சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணி தொடக்கம் 10 மணி வரையிலான விசேட வீதிப் பரிசோதனை் நடவடிக்கையின் போது நடைபெற்றுள்ளது. இது தொடர் பில் மேலும் தெரிய வருவது,

சட்ட விரோதமான முறை யில் வெட்டப்பட்ட முதிரை மரங்களை கடத்திச் சென்ற பிக்கப் வாகனம், அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாக னங்கள் என்பன கைப்பற் றப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர் கள் மேலதிக விசாரணை களுக்காக தருமபுரம் பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். அத்துடன் தடயப் பொருட்களும் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதான சந் தேக நபர்களிடம் விசார ணைகள் நடைபெற்று வரு வதாகவும் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட வுள்ளதாகவும் தடயப் பொரு ட்களும் பாரப்படுத்தப்படவு ள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (2-15)

# குடியிருப்பு கலாசார மண்டபத்தின் புனரமைப்பு வேலைகளில் இராணுவம்



வவுனியா மாவட்டத்தில் கடந்த 26 ஆண்டுகளாக இராணுவத்தினர் வசமிரு ந்து விடுவிக்கப்பட்ட குடியி ருப்பு கலாசார மண்டபம் புனர மைக்க நிதி இல்லாமை யால் அதனை இராணுவத்தினர் பொறுப்பேற்று புனரமை த்து வருகின்றனர்.

கடந்த சில மாதங்களு க்கு முன்னர் இராணுவத்தின ரால் குறித்த கலாசார மண்ட பம் வவுனியா பிரதேச செயலா ளர் கா.உதயராசாவிடம் கைய ளிக்கப்பட்டது.

பல மாதங்கள் புனரமை க்கப்படாமல் பாதுகாப்பற்ற பகுதியாகவும், இளைஞர்கள் சட்டவிரோத செயற்பாடுகளுக் கான இடமாகவும் குறித்த கலாசார மண்டபம் காணப்பட் டது. குறித்த கலாசார மண்ட பத்தை புனரமைக்க பிரதேச செயலாளர் பல்வேறு முயற்சி களை மேற்கொண்ட போதும் அதற்குரிய நிதி கிடைக்க வில்லை. இந்நிலையில் தற்போது இராணுவத்தினர் அதனை புனரமைத்து வரு கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக புனரமைப்புக்கு பொறுப் பாக வுள்ள இராணுவ அதிகாரி கருத்து தெரிவிக்கையில்,

கலாசார மண்டபத்தை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக வவு னியா பிரதேச செயலாள ரிடம் கையளித்தோம்.எவ்வித புனரமைப்புமின்றி காணப்பட் டமையினால் வவுனியா இரா ணுவத்தினரால் பொறுப்பேற் கப்பட்டு மீள் புனரமைப்பு செய்து வருகின்றோம். புனர மைப்பு முடிந்ததும் மீண்டும் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவிடம் கைய ளிக்கவுள்ளதாக தெரிவி த்தார். (2-250)

# வீதிகளை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் புனரமைக்கப்ப டாது இருக்கின்ற வீதிகளை புனரமைத்துத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந் தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்..

ஸ்கந்தபுரம் கிராம அலு வலர் பிரிவில் 816 குடும்பங் களைச் சேர்ந்த 2ஆயிரத்து 607 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை யில் ஸ்கந்தபுரம் பகுதியிலு ள்ள குடியிருப்பு வீதிகள் பிர தான வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாது காண ப்படுகின்றன. இதனால் பருவ மழை காலங்களில் இப் பகுதி மக்கள் பல்வேறு அசௌ கரி யங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதே வேளை சில வீதிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின் றது.

எனவே முக்கியமான வீதிகளைப் புனரமைத்துத் தருவதற்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர். (2-315)

# கலைத் தரிசனம்

முதலமைச்சர் விருது



## மூத்த சிற்பக்கலைஞர் கலாபூஷணம் கோ.வேலுப்பிள்ளை அவர்களுடனான சந்திப்பு

**சிறு வயதில் வீட்டில் இருக்கும் போது களிமண்ணிலும் சீமெந்துகளிலும் சிற்பங்கள் செதுக்கி பொழுதுபோக்கில் ஈடுபட்டார். இம் முயற்சி பின்னாளில் ஒரு சிற்பக் கலைஞர் நிலைக்கு உயர்த்தியது1938.01.07 ஆம் திகதி புலோலி மேற்கு, தம்பசிட்டி பருத்தித்துறையில் பிறந்த இவர் 1969 ஆம் ஆண்டு சதாவதானி கதிரவேற்பிள்ளையின் சிலையைச் செதுக்கிப் பாராட்டைப் பெற்றார். 79 வயதிலும் எந்தவிதச் சோர்வுமின்றி இன்றும் சிலைகளைச் செதுக்கிய வண்ணம் உள்ளார். 2009 இல் கலாபூஷண விருதையும் 2015 இல் முதலமைச்சர் விருதையும் பெற்றார். சிறுவயதில் எந்த விடயத்தையும் கூர்ந்து அவதானிக்கும் திறன் இவரிடம் இருந்தது. இதனால் குருவின்றி ஓவியம், சிற்பம் ஆகியவற்றை தானே கற்றுத் தேறினார். கலாபூஷணம் கோ.வேலுப்பிள்ளை அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனம் திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.**

**❖ தங்களின் சிற்பத் துறையின் ஆரம்பம் பற்றி…?**

நான் பிறந்த ஊர் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை பிறந்த ஊர் என்பதாலோ தெரியவில்லை எனக்கும் கூர்ந்து அவதானிக்கும் திறன் அதிகமாகவே இருந்தது. எனது ஆரம்பக் கல்வியைத் தொடங்குவதற்காக எனது பெற்றோர் என்னை யா/ மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலையிலே சேர்த்து விட்டனர். பிறப்பிலேயே நான் செவிப்புலன் அற்றுக் காணப் பட்டதாலோ என்னவொ எனக்கு பாடசாலையில் குருகுலக் கல்வி அவ்வாறு மனதில் பதியவில்லை. செவிப்புலன் அற்ற நிலையில் ஒருவரது வாய் அசைவையும் சைகையையும் வைத்தே அவர்கள் பேசுவதை விளங்கிக்கொள்வேன். அதனாற் போலும் எனக்கு கல்வியில் நாட்டம் வரவில்லை. திருமதி கனகம்மா கார்த்திகேசு, பொன்னம்மா ரீச்சர் ஆகியோரிடம் நான் கற்றேன். வகுப்பில் ஆசிரியர் வராத சந்தர்ப்பங்களில் வெண்கட்டியால் படங்கள் கீறி நிரப்புவதிலேயே எனக்கு ஆர்வம் நிறைந்திருந்தது. இப் படங்களை அவதானித்த அதிபர் , ஆசிரியர்கள் அந்தக் காலத்தே என்னை ஆசீர்வதித்தனர்." ஒளிமயமான எதிர்காலம் ஒன்று எனக்கு உண்டென்பதை அன்றே அவர்கள் உறுதியாகக் கூறியிருந்தார்கள்.

அதிகளவு பிரயத்தனப்பட்டு எட்டாம் வகுப்பு வரையில் பாடசாலையின் படிகளில் ஏறிவந்த எனக்கு அதற்கு மேல் படிப்பு எட்டவில்லை. வீட்டில் இருந்தபடியே களிமண்ணிலும் சீமெந்திலும் சிற்பங்கள் செய்து மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கி விளையாடுவேன். காலப்போக்கில் நான் வேலைக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது. எனக்குப் பதினைந்து வயதளவில் மேசன் வேலை செய்யப் புறப் பட்டேன். காலப்போக்கில் வீடுகட்டு, கோவில்களுக்கு நிலையம் எடுக்கும் திறனும் எனக்குக் கைவரப் பெற்றது. எந்த வேளையிலும் சிற்பக் கலையை வளர்க்கும் ஆர்வம் சிறிதும் குறைவில்லை. இருபத்தைந்து வயதளவில் கோயில்களில் சிற்பங்கள் செய்யும் அளவிற்கு எனது முயற்சி வெற்றி கண்டது. மேசன் வேலையை முற்றாக விட்டு விட்டு கோயில்களில் சிற்பம் செதுக்கும் பணியில் ஈடுபட்டேன். எனது திறமையை அறிந்தவர்கள் பல்வேறு இடங்களிலுமிருந்து என்னை நாடி வந்தனர். நான் சிற்பத் துறைக்குள் இவ்வாறு கால் பதித்தேன். என்னை அதற்காக முழுதாக அர்ப்பணித்தேன்.

**❖ தாங்கள் செதுக்கிய சிற்பங்களில் அதிகளவு பாராட்டைப் பெற்ற சிற்பம் என்றால் எதனைக் குறிப்பிடுவீர்கள்?**

1969ஆம் ஆண்டு ஏறத்தாழ அப்போது எனக்கு வயது முப்பத்தைந்து தாண்டியிருந்தது. அந்த வருடம் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் சிலையை வடிக்கத் தொடங்கினேன். அந்த சிற்பமே எனக்கு முதன் முதலில் மாபெரும் வெற்றியைத் தந்தது. இந்த சிலையை வடிவமைத்தமைக்காக அந் நிலையம் எனக்கு சிற்பக் கலைஞன் எனும் விருதை வழங்கிக் கௌரவித்தது. இந் நிகழ்வு எனக்கு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்ததுடன் வெளி உலகிற்கு என்னை ஒரு கலைஞனாகக் கொண்டு வந்தது.

**❖ தாங்கள் செதுக்கிய சிற்பங்கள் பற்றி…?**

தொடர்ந்து கோயிற் கோபுரங்களில் சிலை வடிப்பதையே எனது தொழிலாகக் கொண்டேன். நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயம், அநுராதபுரம் நுவறைக் குளம் பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை ஆலடிப் பிள்ளையார், பருத்தித் துறை பெரிய பிள்ளையார், வல் வெட்டித்துறை நெடியகாட்டுப் பிள்ளையார், நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கோயில். இவ்வாறாக நான் சிற்பங்கள் வடித்த கோயில்கள் நூற்றுக்கும் மேற்பட்டவை ஆகும்.

**❖ தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி…?**

1983இல் அல்வாய் முருகன் ஆலயத்தினர் சிற்பகலாகேசரி எனும் பட்டத்தையும் அல்வாய் ஆலடிப் பிள்ளையார் தேவஸ்தானத்தினர் சிற்பக் கலாமணி எனும் பட்டத்தினையும் அதே வருடங்களில் வழங்கி பொன்னாடை போர்த்தி என்னைக் கௌரவித்தனர். 2003இல் அல்லையம்பதி தேவஸ்தானம் சிற்பக் கலாநிதி எனும் விருதையும் 2009 இல் புலோலி மேற்கு ஆலடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் சிற்பக் கலைவேந்தன் என்ற விருதையும் வழங்கிக் கௌரவித்தது. ஒவ்வொரு கௌரவிப்பும் வழங்கப்பட்ட பட்டங்களும் எனக்குள்ளே ஒரு உந்து சக்தியாக அமைந்தது. சரஸ்வதி சிலை செய்து கொடுத்தேன். வடமராட்சி சாந்தியூரிலுள்ள சனசமூக நிலையத்தில்காந்தி சிலை வடித்துப் புகழ் பெற்றேன். எனது இந்தச் சிற்பக் கலைக்கு மதிப்புக் கொடுத்து என்னைப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தவர்களும் மகான்களே. அவர்களில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர். நடராஜசுந்தரம் ஐயா அவர்கள், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் நந்தகுமார் , உளநலப்பிரிவு வைத்தியர் டாக்டர். முல்லை , வடமராட்சியைச் சார்ந்தவர்கள். அவர்கள் இன்னும் என்னில் மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ளார்கள்.

**❖ செவிப்புலனற்ற நிலையிலும் சிற்பங்களைச் செதுக்குவதில் தங்களுக்கு கஷ்டமாக இருக்கவில்லையா?**

இந்த அருஞ்சிலைகளை நான் எந்தக் குருவிடமும் கற்கவில்லை. முற்பிறப்பில் ஏற்பட்ட சாபமோ தெரியாது குருவின்றி நானே இந்தக் கலையைக் கற்றேன். இது எனக்கு இறைவனால் அளிக்கப்பட்ட வரம் என்றே கருதுகிறேன். எல்லாம் நன்மைக்கே என்று பெரியோர்கள் கூறுவது போல எனக்கு செவிப்புலனை அளிக்காதது இறைவன் நன்மையின் பொருட்டே என்றுதான் நினைக்கிறேன்.

ஏனெனில் எனக்குச் செவிப்புலன் இருந்திருந்தால் எனது புலன் வெளிக் கவனங்களில் சிதறியிருக்கும். எனது புலன்களை ஒரு முகப்படுத்தி சிலை செய்திருக்க முடியாது. எனவே எனக்கு அது ஒரு குறையாகவே தெரியவில்லை.

**❖ இன்றைய கலையுலகிற்கு நீங்கள் மனந்திறந்து கூறுவது?**

இன்றைய கலை உலகுக்கு நான் சொல்ல இருப்பது என்னவெனில் கலையுணர்வு மிக்கவனே மனிதன் ஆகின்றான். அவனிடமே மனிதக் குணத்தை நாம் எதிர்பார்க்க முடியும். அவ்வாறு இல்லாதவன்தான் மிருக குணம் படைத்து அலைகின்றான். நடனம், நாட்டியம், சங்கீதம், நாதஸ்வரம், ஓவியம், சிற்பம் என கலைப் படைப்புகள் பல உள்ளன. அவற்றில் ஒன்றிலாவது தமது மனம் லயிக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல்எம்மிடம்வன்மம்மிக்ககுணமே மேலிடும். அன்றைய கால மக்கள் பண்புடனும் பணிவுடனும் வாழ இந்தக் கலைநயமே காரணமாக இருந்தது. ஆனால் இன்று கலைநயம் அருகி தென்னிந்தியத் திரைப் படங்களுக்கே அனைவரும் அடிமையாகி விட்டனர். இதனாலேயே இன்று பல்வேறு பட்ட பண்பாட்டுச் சீரழிவுகள்உருவாகியுள்ளன. எனவே பாடசாலையில் கல்வி பயில்கின்ற வேளையிலேயே மாணவர்கள் ஏதாவது ஒரு கலையையும் பயிலத் தொடங்க வேண்டும். இது அவர்களின் கல்வியிலே ஏற்படுகின்ற மன அழுத்தத்தைக் குறைப்பதுடன் அவர்களை நேர் வழியில் வாழ வைக்கும்.

குறிப்பாக சிற்ப உலகிற்கு நான் மனம் திறந்து கூறிக் கொள்வது சிற்பம் செதுக்குபவர்கள் கலை உணர்வோடு செதுக்க வேண்டும். அவை உயிரோட்டம் மிக்கனவாகவும் பேசும் சிற்பங்களாகவும் விளங்க வேண்டும். அவற்றின் மூலம் வரலாற்றுக் கதைகள் அறியக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரு கலைஞன் வடிக்கின்ற சிற்பத்தில் அவனின் எண்ணங்களை அறியக் கூடியதாக இருக்க வேண்டும். கலையுலகம் மட்டுமன்றி உலக மக்கள் அனைவருமே கலைஞர்களை வரவேற்க வேண்டும். அவர்களின் எண்ணங்கட்கும் ஆக்கங்கட்கும் உந்து சக்தியாக இருந்து மதிப்பளிக்க வேண்டும். இதுவே எனது வேண்டுகோளும் அவாவும்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை-தம்பசிட்டி




வேலாயுதம் மகாவித்தியாலயம் -பருத்தித்துறை



## "சோதனைகளை சாதனையாக்கி சிற்பக் கலையில் வெற்றி பெற்றேன்"

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# சபைக்கு வந்தார் 'ஷாருக்கான்'



(கொழும்பு)

போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவ ரத்து அமைச்சர் நிமால் சிறிபால. டி சில்வா பொலிவூட் நடிகர் ஷாருக்கான் போல சிகையை அலங்கரித்துக் கொண்டு நாடாளுமன்றத் துக்கு நேற்று முன்தினம் சமூகமளித்திருந்தார்.

இதனால் சபையில் சிரிப் பொலி எழுந்தது. வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் அவர் பதிலளிப்பதற்கு எழுந்த வேளையில் ஷாருக்கான் ஷாருக்கான் என்று சிலர் கிண்டல் செய்தனர். (இ-7)

# முன்னாள் படைச்சிப்பாயின் மனுவை விசாரிக்க உச்சநீதிமன்றம் தீர்மானம்

போரின் போது அவையவங்களை இழந்த இராணுவம் உட்பட முப்படையைச் சேர்ந்த முன்னாள் படையினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது நடத்தப்பட்ட கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதலினால் ஒரு கண்ணின் பார்வையைத் தான் முழுமையாக இழந்துள்ளதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்ச நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

போரின் போது அவையவங்களை இழந்த இராணுவம் உட்பட முப்படையைச் சேர்ந்த முன்னாள் படையினர் தமக்குரிய ஓய்வூதியத்தை வழங்குமாறு வலியுறுத்தி கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி காலிமுகத்திடலில் போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு குவிக்கப்பட்ட பொலிஸாருக்கும் முன்னாள் படையினருக்கும் இடையில் எழுந்த வாக்குமூலத்தை அடுத்து முன்னாள் படையினர் காலிமுகத்திடலுக்கு எதிரில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைய முற்பட்டனர்.

இதனைத் தடுக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/மார்பு/கை), ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: Shan's Health Care.
255, K.K.S.Rd, Kokuvil
T.P:077 035 7307

(289)



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில் (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)





"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5, CHAPEL ROAD, LONDON. W13 9AE. TEL: 0208 - 810 0835

Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - 840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.



பணிநிலை : 1 ஆலய சிவாச்சாரியார் Hindu religious workers with non pastoral role

ஆலய சிவாச்சாரியார்கள் (HINDU RELIGIOUS WORKERSWITH NON PASTORAL ROLE)

தகமைகள் : விண்ணப்பத்தாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணிசெய்திருக்க வேண்டும்.


கடமைகள் : ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி : 23.10.2017

618

ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org) பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.

கேலிச்சித்திரம்

# ஒரே பார்வையில் நவராத்திரி வழிபாட்டு முறைகள்

## மூன்றாம் நாள்

| | |
|---|---|
| கோலம்போடும் பொருள் | முத்து |
| கோலவகை | மலர்க்கோலம் |
| அபிஷேகத்திற்குரிய திரவியம் | குங்குமம் |
| திலகம் இடப்படும் திரவியம் | கஸ்தூரி |
| ராகம் | காம்போதி |
| இசைக்கப்படும் வாத்தியம் | வீணை |
| கனிகள் | பலாப்பழம் |
| நிவேதனங்கள் | சர்க்கரைப் பொங்கல் |
| மலர்கள் | சம்பங்கி |
| இலைகள் | மரு |

தொகுப்பு:- சிவஸ்ரீ . சபா. வாசுதேவக்குருக்கள்
(வீணாகான குருபீடம்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:BSc/நிலஅளவையாளர் கட்டார்
தொ.இ: B/7064

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 28 செவ் 7 இல்
உயரம்:160cm
தகைமை/தொழில்: BSc, MSc/ ஆசிரியர்
தொ.இ: B/7061

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L / தனியார் தொழில்
தொ.இ: B/7066

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்
தொ.இ: B/7067

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 94 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA/முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/4650

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 38
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/Lஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4665

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 27 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BCS, ICT/ ஆசிரியர்
தொ.இ: G/4674

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 44 செவ் 4 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்: சித்தவைத்தியர
தொ.இ: G/4742

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




# வடகொரியாவுக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை பாகிஸ்தான் வழங்கியதாக இந்தியா குற்றச்சாட்டு

(டில்லி)

வடகொரியாவுக்கு அணு சக்தி தொழில் நுட்பத்தை வழங்கிய பாகிஸ்தான் மீது நடவடிக்கை எடுக்கவேண் டும் என்று அமெரிக்க, ஜப்பான் வெளியுறவு அமைச்சர்களி டம் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா.சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அமெரிக்கா வின் நியூயோர்க் நகருக்கு சென்றுள்ளார்.



நேற்றுமுன்தினம் அவர் மாநாட்டின் இடையே அமெ ரிக்க வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன், ஜப்பான் வெளியுறவு அமைச்சர் டாரோ கோனு ஆகியோரை சந்தித்தார்.

இந்த 3 நாடுகளின் வெளி யுறவு அமைச்சர்களும் 2015 ஆம் ஆண்டுக்கு பிறகு சந்தி த்து பேசியது, இதுவே முதல் முறை ஆகும்.

3 நாடுகள் தரப்பிலும் வட கொரியாவின் அணு ஆயுத சோதனை, கடல் சார் பாது காப்பு உள்ளிட்ட ஆசிய கண் டத்தின் பல்வேறு விவகாரங் கள் குறித்து விவாதிக்கப் பட் டது. அப்போது, சுஷ்மா சுவ ராஜ் வடகொரியா அண் மைக் காலத்தில் நடத்திய அணுகுண்டு மற்றும் ஏவு கணை சோதனை குறித்த மிகுந்த கவலை தெரிவித் தார்.

இதுபற்றி மத்திய வெளி யுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரவீஷ்குமார் நிருபர்களிடம் கூறுகையில், "வடகொரியாவின் சமீபகால நடவடிக்கைகள்மற்றும்அணு ஆயுத பெருக்கத்தில் அந்த நாடு இன்னொரு நாட்டுடன் கொண்டிருந்த தொடர்புகள் குறித்தும் விசாரணை நடத் தப்படவேண்டும் என்று இந்த சந்திப்பில் சுஷ்மா சுவராஜ் கேட்டுக் கொண்டார்.

மேலும், அதற்கு காரண மான நாட்டின் (பாகிஸ்தான்) மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தியா தரப்பில் வற்புறுத்தப்பட்டது என்று குறிப்பிட்டார்.

சுஷ்மா சுவராஜ் பாகிஸ் தானின் பெயரை நேரடியாக குறிப்பிட்டு குற்றம் சாட்ட வில்லை என்றாலும் கூட பாகிஸ்தான் அணு விஞ் ஞானி ஏ.கியூ.கான் மூலம் வடகொரியா அணுவை செறி வூட்டும் தொழில்நுட்பத்தை பெற்றதாக வெளியாகி உள்ள தகவலை சுட்டிக் காட்டி இருக் கலாம் என்று கருதப்படுகிறது.

இதுகுறித்து ரவீஷ் குமார் கூறும்போது, வடகொரியா வுக்கு அணுசக்தி தொழில் நுட்பத்தை வழங்கிய நாடு எது என்பதை குறிப்பிட்டு கூற இயலாது. அதுபற்றி கூறப் படும் மறைமுகமான வார்த் தைகளே போதுமானது என் றார். (இ-3)

## தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் சசிகலாவை சந்திக்கத் தீர்மானம்

(சென்னை)

தமிழகத்தில் நிலவும் அரசியல் நிலை பற்றி எடு த்துக்கூற தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 21 பேர் சிறை யில் இருக்கும் சசிகலாவை சந்திக்க முடிவு செய்துள்ளனர்.

அ.தி.மு.கவில் முதல மைச்சர் எடப்பாடி பழனிச் சாமிக்கும், டி.டி.வி. தினகர னுக்கும் இடையே கட்சியை கைப்பற்றுவதில் கடும் போட்டி நிலவுகிறது.

எடப்பாடி பழனிச்சாமி அணியுடன் ஓ.பன்னீர்செல்வம் அணியினர் இணைந்த நிலையில் கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் பொதுக் குழுவில் பொதுச் செயலாளர் சசிகலாவையும், டி.டி.வி. தினகரனையும் நீக்கி தீர்மா னம் நிறைவேற்றினார்கள்.

அதுமட்டுமன்றி தினக ரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 18 பேரை தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் நடவடி க்கை மேற்கொண்டார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத் தியுள்ளது.

இந்தச் சூழலில் தமிழ கத்தில் நிலவும் அரசியல் நிலை பற்றி எடுத்துக்கூற தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் 21 பேர் சிறையில் இருக்கும் சசிகலாவை சந் திக்க முடிவு செய்துள்ளனர்.

இதற்காக பெங்களூர் சிறைத்துறை அதிகாரிக்கு கடிதம் கொடுத்துள்ளனர்.

ஆனால் சிறை விதிப்படி ஒரே நேரத்தில் 5 பேருக்கு மேல் சசிகலாவை சந்திக்க முடியாது என்று கூறி விட்ட னர். 21 பேரும், ஒரே நேரத் தில் சந்திக்க வேண்டும் என்றால் உள்துறை செயலா ளரின் அனுமதி பெற வேண் டும் என்றும் கூறி உள்ள னர்.

இதனால் டி.டி.வி. தின கரன் ஆதரவு எம்.எல்.ஏக் கள் சசிகலாவை சந்திப்பதி லும் முட்டுக்கட்டை ஏற்பட் டுள்ளது. (இ-3)

# எந்த நதியில் நீராடினாலும் புண்ணியம் தேட முடியாது

## முதல்வர் பழனிச்சாமியை நோக்கி தினகரன்

(திருச்சி)



எந்த நதியில் புனித நீராடி னாலும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியால் புண்ணி யம் தேட முடியாது என்று அ.தி.மு.க. பொதுச் செயலா ளர் தினகரன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள் ளார்.

நீட் தேர்வில் இருந்து தமி ழகத்திற்கு நிரந்தர விலக்கு அளிக்கக்கோரி அ.தி.மு.க. அம்மா அணி சார்பில் திருச்சி யில் நேற்று முன் தினம் பொதுக்கூட்டம் நடைபெற் றது.

இதில் அ.தி.மு.க. அம்மா அணி துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் கலந்து கொண்டு பேசினார். பின்னர் இரவு திருச்சியில் உள்ள தனியார் ஹோட்ட லில் தங்கியிருந்த அவர் நேற்றுக் காலை நிருபர்க ளுக்கு பேட்டியளித்தார்.

கேள்வி : திருச்சி வந் துள்ள தீபா, தினகரனுக்கு சேர்ந்த கூட்டம் பணத்தால் சேர்ந்த கூட்டம் என்று கூறி யுள்ளாரே? .

பதில்: தீபா எதையாவது சொல்வார். நீட் தேர்வை விலக்க வேண்டும் என்று அனைவரும் ஆர்வத்தோடு பங்கேற்ற கூட்டம். இதை ஒவ்வொருவரும் உணர்ந்து இருக்கிறார்கள். தீபா கூறு வதை யாரும் பொருட்படுத்த வேண்டாம்.

கேள்வி: நீட் தேர்வு விவ காரத்தில் மத்திய அரசை ஏன் கண்டிக்கவில்லை?

பதில்: மத்திய, மாநில அரசுகளை கண்டித்துதான் பொதுக்கூட்டம் நடைபெற் றது. மத்திய அரசு தமிழக மக்கள்நலனை பாதிக்காத வகை யில் நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். நீட் தேர்வில் இருந்து வில க்கு அளித்தால் தான் 69 சத வீத இட ஒதுக்கீடு முழுமை யாக கிடைக்கும்.

கேள்வி: 18 எம்.எல். ஏக்கள் தகுதிநீக்கம் செய்யப் பட்டதன் அடுத்த கட்ட நட வடிக்கை என்ன?

பதில்: எடப்பாடி பழனிச் சாமி நீதிமன்றம் ஒன்று இருப்பதை உணராமல் சபா நாயகர் மூலம் தகுதி நீக்கம் செய்துள்ளார்.

நீதிமன்றத்தில் நாங்கள் வெற்றி பெறுவோம். நீதி நிச் சயம் வெல்லும். தீர்ப்பு வந்த பிறகு அடுத்த கட்ட நடவடி க்கை குறித்து முடிவு செய் வோம். ஜனாதிபதியை சந்திப் பது குறித்தும் முடிவு செய் யப்படும் என்றார்.

பின்னர் திருச்சி விமான நிலையத்தில் தினகரன் நிருபர்களிடம் கூறும் போது, நீட்தேர்வால் பாதிக்கப்பட்ட அனிதாவின் மரணம் எல் லோரையும் பாதித்து விட் டது. அந்த உணர்வின் வெளிப் பாடுதான் நேற்று முன் தினம் சேர்ந்த கூட்டம். சட்ட சபையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் ஓ.பன்னீர் செல்வம் எதிர்த்து வாக்களித் தார். அவரை சபாநாயகர் தகுதி நீக்கம் செய்யவில்லை.

முதல்வரை மாற்ற வேண் டும் என்ற ஒரே காரணத்திற் காக கட்சியை காப்பாற்ற போரா டும் போராளிகளான 18 எம். எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்துள்ளது ஜனநாயக படு கொலை.

மயிலாடுதுறை மகா புஷ் கர விழாவில் முதலமைச் சர் எடப்பாடி பழனிச்சாமி புனித நீராடியுள்ளார். அ.தி.மு.க. பொதுச்செயலாளருக்கு துரோ கம் செய்த அவர் இராமேஸ் வரத்தில் குளித்தாலும் சரி, காசியில் குளித்தாலும் சரி, எத்தனை முறை மூழ்கினா லும் தூய்மையாக மாட்டார். அவரால்புண்ணியம்தேடமுடி யாது. நதியின் புண்ணியம் தான் கெடும் எனக் கோபத் துடன் கூறினார். (இ-3)

## தினகரனுக்கு சேரும் கூட்டம் பணத்தால் சேரும் கூட்டம்

### திருச்சியில் தீபா பேட்டி



(திருச்சி)

டி.டி.வி. தினகரனுக்கு சேரும் கூட்டம் பணத்தால் சேரும் கூட்டம் என திருச்சி விமான நிலையத்தில் நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு தீபா பதில் அளித்தார்.

நீட் தேர்வால் பாதிக்கப் பட்டு உயிரிழந்த அரியலூர். மாணவி அனிதாவின் குடும் பத்தினருக்கு ஆறுதல் கூறு வதற்காக எம்.ஜி.ஆர்., அம்மா தீபா பேரவை பொதுச் செய லாளர் தீபா நேற்று அரிய லூர் சென்றார். இதற்காக அவர் நேற்றுக்காலை சென் னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வந்தார். திரு ச்சி விமான நிலையத்தில் அவரை பேரவை நிர்வாகி கள் வரவேற்றனர். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டிய ளித்தார்.

அப்போது நிருபர்கள், தின கரன் நடத்தும் பொதுக் கூட் டத்திற்கு அதிக அளவு கூட் டம் சேர்வது குறித்து கேள்வி எழுப்பினர். இதற்கு பதில ளித்ததீபா, தினகரனுக்கு சேரும் கூட்டம் பணத்தால் சேரும் கூட்டம் என்றார். (இ-3)

## மாணவிகளுக்கு பா... தலைமை ஆசிரியருக்கு...

(சென்னை)

மாணவிகள் மீது தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டு வந்த அரசு பள்ளி தலைமை ஆசிரி யருக்கு நீதிமன்றம் 55 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப் பளித்துள்ளது.

மதுரையில் உள்ள அரசு பள்ளி ஒன்றில் ஆரோக்கியசாமி என்பவர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்துள்ளார்.

மாணவிகளுடன் தொடர்ச்சியாக தகாத முறையில் நடந்து வந்துள்ளார்.

2011ஆம் ஆண்டில் இக்குற் றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போது அப் பள்ளியில் படித்த 90-க்கும் அதிக

## ஈரான் நாட்டு ஏ... இஸ்ரேல் சுட்...




(ஜெருசலேம்)

ஈரான் நாட்டில் தயாரிக்கப்பட்ட பாட்ரியாட் ஏவுகணையை இஸ்ரேல் இராணுவம் நேற்று சுட்டு வீழ்த்தியது.

பாலஸ்தீனம்-இஸ்ரேல் எல் லைப் பகுதியில் இயங்கிவரும் ஹெஸ்புல்லா போராளிகள் இஸ்ரேலை நோக்கி செலுத்திய பாட்ரியாட் ரக ஏவுக

## வடகொரியா... எங்களுக்கு...

## அமெரிக்க ஜன...



(வோஷிங்டன்)

ஐ.நா. பொதுக்கூட்டத்தில் முதல் முறையாக உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாகிஸ்தான், வடகொரியாவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார். ஐக்கிய நாடு கள் சபை பொதுக்கூட்டம் நியூயோர்க் கில் நடந்து வருகிறது. இதில், முதல் முறையாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் உரையாற் றினார். உலகம் முழுவதும் அதிகரி த்து வரும் தீவிரவாதத்திற்கு முடிவு கட்ட வேண்டும். தீவிரவாதத்தால்



# வெளிநாடு



## பாலியல் துன்புறுத்தல்!
## ...க்கு 55 ஆண்டுகள் சிறை


மான மாணவிகளிடம் ஆரோக்கிய சாமி தவறாக நடந்துகொண்டது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து பாலியல் வன்கொடுமை சட்டத்தின் கீழ் ஆரோக்கியசாமி மீது மதுரை நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் இறுதி வாதம் நேற்று முன்தினம் நீதிமன்றத்திற்கு வந்தபோது ஆரோக்கியசாமிக்கு 55 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட 43 மாணவிகளுக்கு ரூ.3.40 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3)

## ...6 ஏவுகணையை
## ...ட்டு வீழ்த்தியது



ணையை கோலன் ஹெய்ட்ஸ் பகுதியில் நேற்று சுட்டு வீழ்த்தியதாகவும் அந்த ஏவுகணை ஈரான் நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானரக ஏவுகணை என்றும் இஸ்ரேல் இராணுவ செய்தி தொடர்பாளர் ஜொனாத்தன் கான்ரிக்கஸ் தெரிவித்துள்ளார். (இ-3)

# மெக்சிக்கோவில் பயங்கர நிலநடுக்கம்

# 250 பேர் பலி!



(மெக்சிக்கோ சிட்டி)

**மெக்சிக்கோ நாட்டில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் 250 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

வட அமெரிக்காவிலுள்ள மெக்சிக்கோ நாட்டின் மத்திய பகுதியில் நேற்று பயங்கர பூகம்பம் ஏற்பட்டது.

இதனால் தலைநகரம் மெக்சிக்கோ சிட்டி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

பீதி அடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் அலறியடித்தபடி வீடுகள் மற்றும் கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

பூகம்பத்தில் ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. அடுக்குமாடி கட்டடங்கள் சரிந்தன.

இதனால் ஏராளமான மக்கள் இடிபாடுகளில் சிக்கினர். தங்களை காப்பாற்றும்படி அபய குரல்கள் எழுப்பினர். பூகம்பத்தை தொடர்ந்து மீட்புப் படையினர் களம் இறங்கியுள்ளனர். கட்டட இடிபாடுகளை உடைத்து அதில் சிக்கியவர்களை மீட்டு வருகின்றனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் அவர்களின் உறவினர்களும் ஈடுபட்டனர். தங்களது கைகளால் இடிபாடுகளை தோண்டி அகற்றினர். பூகம்ப பகுதிக்கு ஏராளமான அம்புலன்ஸ்கள், தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப்பட்டன.

100-க்கும் மேற்பட்டோர் காயத்துடன் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பூகம்பத்தில் 250 பேர் பலியாகி உள்ளனர். மோர்லோஸ் மாகாணத்தில் அதிக பேர் பலியாகியுள்ளனர். அங்கு மட்டும் 120 பேர் உயிரிழந்துள்ளனர். தலை நகர் மெக்சிக்கோ சிட்டியில் 85 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

மத்திய மாகாணமான பியூப்லாவில் 45 பேரும் தென்மேற்கு மெக்சிக்கோவில் உள்ள குயரோ மாகாணத்தில் ஒருவரும் பலியாகியுள்ளனர்.

பூகம்ப பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது. 38 இலட்சம் பேர் மின்சாரம் இன்றி இருளில் தவிக்கின்றனர்.

7.1 ரிக்டர் அளவில் இந்தப் பூகம்பம் பதிவாகியுள்ளது. பியூப்லா நகரை



மையமாக கொண்டு பூமிக்கு அடியில் பூகம்பம் உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ...ாவை அழிப்பதைத்தவிர
## ...த வேறு வழியே இல்லை!
## ...ஜனாதிபதி ட்ரம்ப் ஆவேசம்



எங்கள் நாட்டையும், ஒட்டுமொத்த உலகத்தையும் கண்ணீர் சிந்த நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

எனவே, தீவிரவாத அமைப்புகளுக்கு அடைக்கலம் தருவோரையும், அவர்களுக்கு நிதி உதவி செய்பவர்களையும் உலக தலைவர்கள் வெளிக்கொண்டு வர வேண்டிய தருணம் இது. அல்கொய்தா, தலிபான் போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவளிப்பவர்கள் அதனால் ஏற்படும் நாச வேலைகளுக்கு முழு பொறுப்பும் அவர்கள் தான். எனவே தீவிரவாத அமைப்புகளை சொந்த மண்ணிலிருந்து ஒவ்வொரு நாடும் விரட்டியடிக்க வேண்டும்.

தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டு வரும் வடகொரியா ஒட்டு மொத்த உலகிற்கு அச்சுறுத்தலாக உள்ளது. அமெரிக்கா தன்னையும், தனது ஆதரவு நாடுகளையும் காப்பாற்றிக் கொள்ளும் வலிமையையும், தகுதியையும் கொண்டுள்ளது. இதற்கு ஆபத்து எழும் பட்சத்தில், வடகொரியாவை முற்றிலும் அழிப்பதை தவிர எங்களுக்கு வேறு வழியே இல்லை. 'ரொக்கெட் மான்' (வடகொரிய ஜனாதிபதி கிங்ஜங்உன்னை குறிப்பிட்டு) அமெரிக்காவை மிரட்டுவதாக நினைத்து, அவரையும், அவரது நாட்டையும் தற்கொலை முயற்சியில் ஈடுபட செய்துள்ளார் என எச்சரித்தார். (இ-3)

# கொரிய தீபகற்பத்தில் அச்சுறுத்தலால் அமைதியை ஏற்படுத்திவிட முடியாது

## வடகொரியாவுக்கு சீனா வக்காளத்து

(பீஜிங்)

வடகொரியாவை தடைகளின் மூலம் அச்சுறுத்தி கொரிய தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்திவிட முடியாது என சீனா தெரிவித்துள்ளது.

ஐ.நா. சபையின் தடைகளை மீறி வடகொரியா தொடர்ந்தும் அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது.

இதற்கு அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ.நா. சபையில் வடகொரியா மீதான புதிய திருத்தப்பட்ட பொருளாதார தடைகள் குறித்த தீர்மானம் அண்மையில் நிறைவேற்றப்



பட்டது. இதற்கு அனைத்து நாடுகளும் ஒப்புதல் அளித்தன.

இருப்பினும், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் வடகொரியாவிற்கு மறைமுகமாக ஆதரவளித்து வருவதாக கூறப்படுகிறது. வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது குறித்து யோசித்து வருவதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ஜேம்ஸ் மேட்டிஸ் கூறியிருந்தார்.

இந்நிலையில், வடகொரியா மீது பொருளாதார தடைகள் விதித்து அந்நாட்டை அச்சுறுத்துவதன் மூலம் கொரிய தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்த முடியாது என சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த செய்தியை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் லுகாங் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)


# வழக்குத் தண்டப் பணத்தை தேரர்கள் சேகரிப்பது தவறு

## ஞானசார தேரர் எதிர்ப்பு

(கொழும்பு)

"சில் ஆடை" வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு பணம் சேகரிப்பதற்கு தேரர்களை வீதிக்கு இறக்கியுள்ள நடவடிக்கை தவறான ஒரு செயல் என்றே நான் காண்கின்றேன் என பொதுபல சேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தேரர் இதனைக் கூறினார்.



சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் தமது கட்சி அங்கத்தவர்களை கூட்டி இந்தப் பணத்தைச் சேகரித்திருக்கலாம். தமது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 100 ரூபா வீதம் தருமாறு கூறியிருந்தாலும் அப்பணத்தைச் சேர்த்திருக்கலாம். இதற்காக தேரர்களை வீதிக்கு இறக்குவதை அனுமதிக்க முடியாது எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்கள பௌத்த அமைப்புக்களின் மியன்மார் ஆதரவு ஆர்ப்பாட்டத்திற்கு கொழும்பு நீதிமன்றம் தடை உத்தரவு

17 சிங்கள பௌத்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து மியன்மார் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திஸாநாயக்க இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார். பொதுபல சேனா, சிங்கள ராவய, ராவணபலய, ஜாதிக பெரமுன, ஜாதிக பிக்கு பெரமுன உட்பட 17 அமைப்புக்களுக்கே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பித்தளை சந்தி, தெவட்டகல பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள பகுதி, ரொஸ்மிட் பெதஸ, லிப்டன் சுற்றுவட்டம், தர்மபால மாவத்தை, ஹோர்ட்டன் பெதஸ, எப்.ஆர். சேனநாயக்க மாவத்தை மற்றும் கன்னங்கர மாவத்தை ஆகிய பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த தடை செய்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வெலே சுதாவின் சொத்து விவகாரம்; பராமரிப்பாளரை நியமிக்க ஆட்சேபனை

ஹெரோயின் வைத்திருந்த, விற்ற குற்றச்சாட்டில் மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள வெலே சுதா என்றழைக்கப்படும் சமந்த குமார, அவருடைய மனைவி மற்றும் தங்கைக்கு எதிரான வழக்கில், சொத்துப் பராமரிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு பிரதிவாதிகள் தரப்பினால், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

ராஜகிரிய ரோயல் பார்க், வெள்ளவத்தை சீகல் ரெசிடென்ஸ், விஜேராம மாவத்தை, நெதிமால ஆகிய பிரதேசங்களில் வீடுகளை வாங்கி பணச்சலவை செய்தனர் என்று சட்டமா அதிபரால், மேற்குறித்த மூவருக்கும் எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பணச்சலவைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், சட்ட விரோதமாகச் சம்பாதிக்கப்பட்ட 18.2 மில்லியன் ரூபாய் தொடர்பிலும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மத்தேகொட, சொத்துகளைப் பராமரிப்பதற்காக, நீதிமன்றத்தால் பராமரிப்பாளரொருவரை நியமிப்பதற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

அத்துடன், இது தொடர்பான எழுத்துமூல ஆட்சேபனையையும் மன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக அறிவித்ததுடன், சாட்சியப் பதிவுக்கான தினங்களாக டிசெம்பர் 14, 15 ஆம் திகதிகள் குறிக்கப்பட்டுள்ளன என்பதையும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில், இம்மாதம் 27 ஆம் திகதி ஆராயப்படும் என அறிவித்த நீதிபதி வழக்கை அன்றைய தினத்துக்கு ஒத்தி வைத்தார். (இ-7)

# தேர்தல் ஜனவரியிலும் சந்தேகம்



## அநுர எம்.பி.சுட்டிக்காட்டு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஜனவரி மாதத்தில் நடைபெறுவதாக கூறப்பட்டாலும் கூட, உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் தொடர்பிலான பல திருத்தச் சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படாதுள்ளதாகவும் அவற்றை முன்வைப்பதற்குரிய காலங்கள்கூட அரசாங்கத்தினால் அறிவிக்கப்படாதுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த திருத்தச் சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத நிலையில் தேர்தலை நடத்த முடியாது. இதனை அரசாங்கம் இதுவரை முன்வைக்க எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தேர்தல் ஜனவரியிலாவது நடைபெறுமா? என்ற சந்தேகம் இதன் மூலம் எழுவதாகவும் அவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பொல்லாதவர்களிடம் உள்ள பொதுக்குணம்

ரொம்பப் பொல்லாதவர்கள்; ரொம்பக் கண்டிப்பானவர்கள்; ரொம்பக் கறார் பேர்வழிகள் என்று சொல்லப்படுபவர்கள் நம் வட்டத்திற்குள் இருந்தாலோ நம் வட்டாரத்தில் வாழ்ந்தாலோ இவர்களைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியது இல்லை. இவர்களையே நாம் குடும்ப உறுப்பினர்களாகவோ மேலதிகாரிகளாகவோ பெற்றவர்கள், இவர்கள் மீது சலிப்போ வெறுப்போ அடைய வேண்டியது இல்லை.

காரணம் என்ன தெரியுமா? இவர்கள் நேர்மைக்கோ அன்புக்கோ கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள்.

இவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பது என்பதோ இவர்களின் நன்மதிப்பை பெறுவதோ என்பதோ லேசுப்பட்ட விடயமல்ல.

என்ன இருந்தாலும் குற்றம் குறை கண்டுபிடிப்பதும் எரிந்து விழுவதும் ஒன்றுமில்லாத விடயத்தையெல்லாம் பெரிதுபடுத்திக் குதிப்பதும் இவர்களது பாணி, எவ்வளவு பொறுமையாக அணுகினாலும் அடக் சை! இந்த ஆளோடு காலந்தள்ளுவது ரொம்பக் கஷ்டம் என்று வெறுத்துப் போய்ச் சொல்லுவார்கள்.

ஆனால் இவர்களைக் கூட நம்மால் வசப்படுத்திவிட முடியும். வழிக்குக் கொண்டுவர முடியும்.

எப்படி?

முதலாவதாக இவர்கள் மனத்தில் எப்படியும் இடம்பிடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். இப்படி ஒரு வைராக்கியத்தை மனத்தில் பதித்துக் கொண்டால் நமக்கு நிறையவே பொறுமை கைவரப் பெறும்.

முதலில் இவர்களை எதிர்த்துப் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இரண்டாவது கூடுதலாகப் பணிவது போன்று காட்டிக் கொள்ள வேண்டும். கொஞ்ச நாட்களுக்கு இவர்களுக்கு பிடித்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும்.

பொல்லாதவர்கள், கண்டிப்பானவர்கள் எல்லோரும் அன்புக்கு அடிமையாகி விடுகிறார்கள். ஒரு வகையில் சொல்லப் போனால் சிறுவயது முதல் இவர்களுக்குக் கிடைக்காமல் போன அந்த அன்புதான் இன்று அவர்களை இப்படி ஆக்கி வைத்திருக்கிறது.

சிறுசிறு செயல்களின் மூலம் இவர்களின் மீது அன்பு செலுத்துக்கிறோம் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். எப்படி? என்ன? ஏது? என்பது அவர் அவர் சூழ்நிலைகளைப் பொறுத்து முடிவு செய்ய வேண்டிய விடயம்.

உங்கள் கண்டிப்பைப் பாராட்டுகின்றேன். நீங்கள் செய்தது மிகச் சரி என்று சமயம் வாய்க்கும் போதெல்லாம் சொல்ல வேண்டும்.


ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாம் இவர்கள் இதயத்தில் பதிய ஆரம்பிப்போம். அவர்கள் பார்வை நம்மீது லேசாக விழுந்து விட்டது என்பதை நாம் உணர்ந்து கொண்டதுமே நம் திட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டும்.

அவ்வளவுதான் எப்பேர்ப்பட்ட முரட்டு மனிதரும் நம் வழிக்கு வந்துவிடுவார்கள்.

அப்புறம் சுற்றியிருக்கிற எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். அந்த முரட்டு மீசை, நம்மைக் கண்டால் மட்டும் எப்படி வளைந்து கொடுக்கிறது என்று!

லேனா தமிழ்வாணன்

# நவராத்திரி விரதம் இன்று



ஏவிளம்பி வருஷ 2017 ஆம் ஆண்டிற்குரிய நவராத்திரி விரத ஆரம்பம் (21.09.2017) புரட்டாதி 5 ஆம் திகதி வியாழக்கிழமை இன்று உலக நாடுகளில் உள்ள இந்து ஆலயங்களிலும் அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் வீடுகளிலும் நிறை பூரண கும்பம் வைத்து மிகவும் பக்திபூர்வமாக ஆரம்பமாகின்றது. முதல் மூன்று நாட்களும் வீரத்திற்கு அதிபதியாகிய கிரியா சக்தியான அன்னை துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்திற்கு அதிபதியான இச்சா சக்தியான திருமகளுக்கும் இறுதி மூன்று நாட்களும் ஞானசக்தியான கல்விக்கு அதிபதியான சரஸ்வதி வழிபாடும் மேற்கொள்ளப்பட்டு இறுதி நாளாகிய பத்தாம் நாள் அன்று ஆயுத பூஜை வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. விஜயதசமி அன்று கோவில்களிலும், பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் குருமார்களினால் பாலர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவம் இடம்பெறுகின்றது. சக்தி விரதங்களில் நவராத்திரி விரதம் மிகவும் முக்கியமானது.

நவராத்திரி முதல் நாள் அதிகாலை எழுந்து கர்மானுஷ்டானங்களை நிறைவு செய்து அம்பிகையை வழிபட்டு, அம்பிகை திருப்பதிகங்கள், சகலகலா வல்லிமாலை போன்றவற்றை பாராயணம் செய்து ஒரு பொழுது உணவை உட்கொள்ள வேண்டும். நவராத்திரி காலங்களில் உபவாசம் இருத்தல் மகா உத்தமமாகும். இயலாதவர்கள் உணவைச் சுருக்கிக் கொள்ளலாம். விஜயதசமியில் அதிகாலை விரதத்தை நிறைவு செய்து கொண்டு அம்பிகை ஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்ற வேண்டும். தமிழ் புரட்டாதி மாத பூர்வபட்ச பிரதமை தொடக்கம் நவமி வரை உள்ள திதிகளில் இராப் பொழுதில் அம்பிகைக்கு விசேட பூஜை இடம்பெறுகின்றது. இதில் பிரதமை துதியை, திருதியை ஆகிய திதிகளில் துர்க்காதேவியை இராப் பொழுதில் பூசித்தும் சப்தமி, அட்டமி, நவமி ஆகிய திதிகளில் இரவுகளில் சரஸ்வதி தேவியை இராப் பொழுதில் பூசித்தும் கொள்ளப்படுகின்றது. இந்த அட்டமி மகா அட்டமி என்றும் நவமி மகாநவமி என்றும் கொள்ளப்படுகின்றது. அடுத்த திதியான தசமி விஜயதசமி என்று கொள்ளப்படுகின்றது. இந்த விஜயதசமியில் எந்த வேலையை ஆரம்பித்தாலும் அது வெற்றியாகவே நிறைவு பெறும்.

சிம்ம வாகனத்தில் அமர்ந்து சக்கரம், சங்கம், சூலம் முதலிய ஆயுதங்கள் தரித்துத் துக்க நிவாரணியாகத் துர்க்கை காட்சி தருகின்றாள். நன்மைகளையும் நன்மை செய்யும் எல்லாப் பொருட்களையும் அளிப்பவள் லக்ஷ்மி. ஆயிரம் இதழ்களையுடைய தாமரை இரு கைகளிலும் தாமரைகள் தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருள், பொருள் பாலிப்பவள் லக்ஷ்மி. வள்ளுவர் குறளில் இவளை "அகளமர்ந்து செய்யாள் உறையும் மடியிலாள் தாள் உளான் தாமரையாள்" என்று கூறி உள்ளார். ஸ்ரீ நாராயணனின் திருமார்பில் லக்ஷ்மி அகலாமல் வசிக்கின்றாள். லக்ஷ்மிக்கு எட்டு ஸ்வரூபங்கள் உள்ளன.

சரஸ்வதி தேவியானவள் கல்விக்கு அதிபதியானவள். சரஸ்வதி தேவியானவள் ஆய கலைகள் அறுபத்தி நான்கிற்கும் தலைமை தாங்குகின்றாள். அந்த அறுபத்திநான்கு கலைகளுள் சிறந்து விளங்குவது இசைக் கலை என்றால் மிகையாகாது. இசையால் ஈர்க்கப்படாதவை எவையும்இல்லை என்றே கூறலாம். கல்வி அழியாத செல்வமாகும். ஏனைய செல்வங்கள் யாவும் பிறருக்குக் கொடுக்கும் போதும் அழிந்து கொண்டு செல்லும். கல்விச் செல்வமானது பிறருக்குக் கொடுக்கும் போதும் பெருகிக் கொண்டே செல்லும். இதனால்தான் கல்விச் செல்வத்தை அழியாச் செல்வம் என்று கூறுகின்றனர். இதனையே வள்ளுவரும் திருக்குறளில் பொருட்பாலில் கல்வி அதிகாரத்தில்

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

ஒருவனுக்கு அழிவில்லாத உயர்ந்த செல்வம் கல்வியாகும். ஏனைய மணி, பொன் முதலியன சிறந்த செல்வம் ஆக மாட்டாது என இரு வரிகளில் கூறி உள்ளார். கல்வியானது வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது கள்வராலும் கவரப்படமாட்டாது. இளமையிலும் மறுமையிலும் பயனளிக்கவல்லது. கல்வி கற்றவனையே உலகம் மதிக்கும். கல்லாதவன் நெடுமரம் போன்றவனாவான். அவனால் குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ, நாட்டிற்கோ எந்தவித பயனும் கிடையாது. கல்வி ஒன்றே நம்மை கடைத்தேற்றும் கலம் என்பதை நம் மாணவச் செல்வங்கள் உணர வேண்டும். அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதிலும் பார்க்க ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியமாகும். இந்த உண்மையை நன்குணர்ந்து வீட்டிலும் நாட்டிலும் கல்விப் பயிர் வளர்த்திட பணி செய்து இந் நவராத்திரி நன் நாட்களிலே அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை நமதாக்கிட முயல்வோமாக!

கலைமாமணி
திருமதி. மலர்விழி கனகசபை
உதவிக் கல்விப்பணிப்பாளர்
(அழகியல்) தீவக கல்வி வலயம்.

# பதவியுயர்வு, சம்பள அதிகரிப்பு, சலுகை கோரி கீழ் உழைப்பு பட்டதாரிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

அரசசேவையில் கடமைபுரியும் பட்டதாரியான முகாமைத்துவ உதவியாளர்களுக்கு தகைமை அடிப்படையில் பதவியுயர்வு, சம்பள அதிகரிப்பு மற்றும் சலுகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடமாகாண கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க சேவையில் பட்டத்தினை அடிப்படை தகைமையாக கொள்ளாத பதவிகளில் பணி புரியும் பட்டதாரியான பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கு உரிய பதவியுயர்வு, சம்பள அதிகரிப்பு மற்றும் ஏனைய சலுகைகள் வழங்க நல்லாட்சி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மிகத் தாழ்மையுடன் கோரிக்கை விடுகின்றோம்.

கடந்த ஆட்சிக்காலத்தில் எங்களது கோரிக்கையானது எவ்வித தீர்வும் காணாமல் காலத்தை வீணடித்து சென்றமை எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய துறைகளில் பட்டதாரியாக உள்ளவர்களுக்கு அவரவர் கடமை புரியும் துறைகளில் உரிய காலத்தில் பதவியுயர்வுகள் வழங்கும் போது ஏன் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் மட்டும் முடியாமல் இருப்பது ஏன்? உதாரணமாக சமுர்த்தியில் கடமைபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (SDO) பட்டம் பெற்றால் சமுர்த்தி முகாமையாளர் பதவி உடன் வழங்கப்படுகின்றது. ஆசிரியர் சேவையில் உள்ளவர் பட்டம் பெற்றால் அவர்களுக்கான சம்பளம் அதிகரிப்பு செய்யப்படுகின்றது. வங்கியில் கடமைபுரியும் ஒருவர் பட்டம் பெற்றால் அவருக்கு உரிய பதவியுயர்வு வழங்கப்படுகின்றது.

எமது ஆட்சிக் காலத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். அந்த உறுதிமொழிக்கேற்ப எமது தேவை நிறைவேறும் என முழுமையாக நம்புகின்றோம்.

ஜனாதிபதி அவர்களே! பட்டதாரியான எங்களுக்கு பின்வரும் சலுகைகளையும் பதவியுயர்வுகளையும் சம்பள அதிகரிப்பினையும் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கோரிக்கை விடுப்பதுடன் இந்த விடயத்தினை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

01. அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கு MN-2 சம்பள படிநிலை வழங்கப்படுகின்றது. பட்டதாரிகளுக்கு MN - 4 சம்பள படிநிலை வழங்கப்படுகின்றது. எனவே அரச முகாமைத்துவ பட்டதாரிகளுக்கு MN - 4 சம்பள படிநிலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். (வகுப்பு தரம் பிரிக்கப்பட்டு III, II, I என்ற நிலைக்கு நேரொத்த படிநிலைக்கு சம்பளத்தினை மாற்றுதல் வேண்டும்)

02. அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்று அரச முகாமைத்துவ உதவியாளர் பதவியை மாற்றம் செய்து புதிய பதவி ஒன்றை ஏற்படுத்தல் (பட்டதாரி அரச முகாமைத்துவ உதவியாளர்)

03. பட்டதாரியான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 24 வருடங்களுக்கு மேல் சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து கணக்காளர் சேவை, இலங்கை நிர்வாக சேவை, உதவி திட்டமிடல் பணிப்பாளர் சேவை, கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி, புலனாய்வு உத்தியோகத்தர் பதவி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் பதவி போன்ற நியமனங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல் இல்லையென்றால் அவர்களுக்கு ஒரு பாடத்தில் மட்டும் பரீட்சை நடத்தி நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல். (வயதில் முதியவர்கள் ஓய்வூதியம் பெறப் போகின்ற நிலையில் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்).

ஜனாதிபதி அவர்களே! நாட்டின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் புதிய திட்டங்களை உருவாக்கும் உங்கள் அரசாங்கம் ஏன் எங்கள் விடயத்தில் கவனம் செலுத்த முடியாது. பட்டம் பெற்றும் பெற்ற பட்டத்திற்கு பதவியோ, சம்பள அதிகரிப்போ இல்லாமல் இருக்கும் எங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதுடன் எமது மனக் குறையினையும் மன அழுத்தத்தினையும் இல்லாமல் செய்ய நல்லாட்சி அரசாங்கம் மேற்கூறிய விடயங்களை பெற்றுத்தர வேண்டுமெனவும் இதற்கு உங்களது சிந்தனை வழிவகுத்துத் தர வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம் என கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தினர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (இ)

# தவறான ஆவணங்கள் தயாரித்த மூவர் கைது

தவறான முறையில் ஆவணங்களைத் தயாரித்த மூவர் மாபோலை பிரதேசத்தில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நடத்திய சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட வேளையில் சந்தேக நபர்களிடமிருந்து தவறான முறையில் அச்சிடப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள், கல்விசார் சான்றிதழ்கள் மற்றும் அவற்றை அச்சிட பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 100 | 70 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 220 | 180 | 300 | 200 | 200 | 200 |
| தக்காளி | 150 | 220 | 140 | 180 | 200 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 60 | 80 | 60 | 80 |
| கோவா | 80 | 120 | 60 | 120 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 200 | 100 | 160 | 160 | 160 | 70 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 50 | 60 | 30 |
| புடோல் | 100 | 100 | 60 | 80 | 90 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 200 | 100-300 | 240 | 240 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 90 | 140 | 130 | 100 | 130 |
| பாகற்காய் | 300 | 300 | 170 | 250 | 240 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 50 | 50 | 70 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 80 | 80 | 120 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 140 | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 120 | 140 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 100 | 30 | 40 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 200 | 90 | 160 | 160 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 100 | 160 | 120 | 80 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 110 | 200 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்பளை | 100 | 100 | 80 | 100 | 120 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 25 | 40 | 40 | 40 | 25 |
| தேசிக்காய் | 250 | 250 | 240 | 300 | 300 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 85 | 80 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 300 | 400 | 200 | - | 350 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 | 240 | 200 | - |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 60 | 60 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 40 | 20 | 50 | 40 | 50 | 60 |

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2017-17.10.2017



**நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லும் கும்ப இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, நல்ல மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரப்போகின்றது. கூட்டு முயற்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாய் மாறும். அடிப்படை வசதிகளைப்பெருக்கிக்கொள்ள ஆயத்தம்செய்வீர்கள். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவது யோக மாகும்.

'குரு பார்க்க கோடி நன்மை' என்பதால் இனி படிப்படியான முன்னேற்றம் பல வழிகளிலும் வந்து சேரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள், தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நிறைய நடைபெறப் போகின்றது. தள்ளிப்போன சுபகாரியங்கள் தானாக நடைபெறும்.

வெல்லம் போல் இனிமையாக பேசியவர்களில் ஒருசிலர் விலகிச் சென்றிருக்கலாம். அவர்கள் மீண்டும் வந்திணைய வாய்ப்பு உண்டு. அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தால் பலவிதக் கஷ்டங்களையும் நட்டங்களையும்எதிர்கொண்டு வந்த நீங்கள் இப்பொழுது இஷ்டம் போல் வாழ்க்கை நடத்த எல்லா வழிகளிலும் உதவி கிடைக்கப் போகின்றது. மற்றவர்களைப் போல இல்லாமல் நாம் ஒரு புது முறையைக் கையாள வேண்டுமென்று நினைப்பவர்கள் நீங்கள். அதற்கு இதுவரை இடையூறு சக்திகள் இருந்திருக்கலாம். இனி உங்கள் நோக்கங்கள் நிறைவேறும். தாக்கங்கள் அகலும்.

6 இல் இராகு, 12இல் கேது சஞ்சரிக்கின்றார்கள். 6இல் இராகு இருப்பதால் உத்தியோகத்தில் உயர்வும் ஊதியத்தில் எதிர்பார்த்தபடி சலுகைகளும் கிடைக்கும் வாய்ப்பும் உருவாகும். அதே நேரத்தில் 12இல் கேது இருப்பதால் ஒருசில சமயங்களில் நீங்கள் எடுத்த முடிவால் அவதிப்படவும் நேரிடலாம். அதிக விரயங்களையும் அது கொடுக்கும். எனவே சான்றோர்களின் ஆலோசனைகளையோ, ஆன்மீகம் சார்ந்தவர்களின் ஆலோசனைகளையோ கேட்டு நடப்பது நல்லது.

சூரியன் 8இல் மறைந்திருப்பதால் அரசியல்வாதிகளால் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படலாம். வங்கிகளில் நீங்கள் எதிர்பார்த்த சலுகைகள் வந்தடைவதிலும் தாமதம் ஏற்படலாம். பொதுநலத்தில் இருப்பவர்களுக்குப் பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். மதிநுட்பத்தோடு நடந்துகொள்வது நல்லது. இம்மாதம் நவராத்திரி விழா வருகின்றது. உங்கள் இராசிக்குச் சுக்ரன் நன்மை செய்யும் கிரகமாகும். எனவே பெண் தெய்வ வழிபாடுகள் உங்களுக்கு கைகொடுக்கும். அந்த அடிப்படையில் நவராத்திரி விழாக் காணும் அம்பிகையை 9 நாளும் சென்று வழிபட்டு வருவதோடு அம்பிகை வெற்றி பெற்ற நாளான விஜய

# முயற்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்!

தசமியிலும் அம்பிகையை வழிபட்டு வந்தால் வெற்றிச் செய்திகள் வந்து சேரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 24ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் செல்கின்றார். அந்த வீடு புதனுக்கு உச்ச வீடாகும். அஷ்டமாதிபதியான புதன் 8இல் உச்சம் பெறுவதுயோகம்தான். மறைந்த புதனால்நிறைந்த தனலாபம் கிடைக்கும். எனவே பொருளாதாரநிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள்மாறும். சேமிப்புகள்உயரும். இந்த நேரத்தில் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் செல்கின்றார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாண




வாய்ப்புகள் கைகூடும். பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் அகலும். உங்களுக்குரிய பங்கு வந்து சேரும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 10ஆம் திகதி கன்னி இராசிக்கு, சுக்ரன் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். 4, 9இற்கு அதிபதியான சுக்ரன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் வில்லங்கம் பார்த்து வாங்குவது நல்லது. நண்பர்கள் ஏமாற்றங்களைச் சந்திக்கும் நேரமிது. அணிந்து அழகுபார்த்த நகைகளை ஒருசிலர் அடகு வைக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி இராசியில் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் அஷ்டமத்தில் மறைவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். உடன்பிறப்புகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். இடம், பூமிசம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையில் இருக்கும்.

இம்மாதம் செவ்வாய்தோறும் முருகப் பெருமானை வழிபாடு செய்வதோடு நவராத்திரி நாட்களில் அம்பிகை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். அமாவாசையன்று முன்னோர்களை வழிபடுவதன் மூலம் சுபகாரியத் தடைகள் அகலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் குரு பார்வை இருப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு திருப்திகரமாக அமையும். அனுபவித்து வந்த கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள். பாதியில் நின்ற பணிகள் அனைத்தும் ஒவ்வொன்றாக முடிவடையும். மாதத்தின் கடைசி 4 நாட்கள் மிகமிக கவனமுடன் இருப்பது நல்லது. கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும் என்பதால் பெரும்பொருள் விரயம் அச்சமயத்தில் ஏற்புடலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு அல்லது வெளிநாட்டு முயற்சி சம்பந்தமாக ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால் அதில் அனுகூலங்கள் உருவாகும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

தாய்வழி ஆதரவு திருப்தி தரும். தந்தையின் உடல்நலத்தில் கவனம் தேவை. குரு வழிபாடும், நவராத்திரி நாளில் அம்பிகை வழிபாடும் நன்மைகளை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நல்லவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் மீன இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிநாதன் குருபகவான் இப்பொழுது அஷ்டமத்தில் சஞ்சரிக்கின்றார். 6இற்கு அதிபதியான சூரியன் சப்தமஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்க்கின்றார். எனவே புரட்டாதி மாதம் முழுவதும் நீங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டியது அவசியமாகும். பொதுவாகவே அஷ்டமத்திற்கு சனி வந்தாலும், குரு வந்தாலும், செவ்வாய் வந்தாலும் மிக கவனத்துடன் இருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் பிறருக்கு நன்மை செய்ய முயற்சி செய்து, அது தீமையில் முடியலாம். பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்க்கை அமையலாம். இரவு, பகலாக நீங்கள் அரும்பாடுபட்டு மேற்கொண்ட காரியங்களுக்கு பலனில்லாமல் போகலாம்.

பொதுவாகவே மாபெரும் கிரகங்கள் 8ஆம் இடத்திற்கு வரும்பொழுது வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படத்தான் செய்யும். அவற்றை ஈடுகட்ட நீங்கள் வழிபாட்டில்தான் முழுக் கவனமும் செலுத்த வேண்டும். எனவே இந்த மாதத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும்குருபகவானை வழிபட்டு, அர்ச்சனைகள் செய்து வருவது நல்லது. உங்கள் பெயரையும் நட்சத்திரத்தையும்சொல்லி அர்ச்சனைகள் செய்யும் பொழுது முழுமையான நற்பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும். சோதனையான காலம் கூட இனிமையான நேரமாக மாற இறைவழிபாடு ஒன்றுதான் கைகொடுக்கும்.


மாதத்தொடக்கத்தில் பஞ்சம ஸ்தானத்தில் இராகுவும், இலாப ஸ்தானத்தில் கேதுவும் இருக்கின்றார்கள். புத்திர ஸ்தானத்தில் இராகு இருக்கும் பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும். கல்யாண காரியங்களை துரிதமாக பேசி முடிக்கவும் இயலும். பிள்ளைகள் வெளிநாடு சென்று படிக்கவோ, வேலை பார்க்கவோ, நீங்கள் எடுத்து வந்த முயற்சியில் இதுவரை எதிர்கொண்டு வந்த தாமதங்கள் இனி அகலும். முன்னோர்கள் கட்டமைத்த ஆலயங்களை முழுமையாக பராமரித்து முறையாக திருப்பணிகள் செய்வதற்கான வாய்ப்புகளும் உருவாகும். இம்மாதம் புதனும், சூரியனும் 6,7 ஆகிய இடங்களில் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார்கள். புதிய வேலையில் சேர்ந்து அதில் திருப்தியில்லாமல் வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு இது அனுகூலம் தரும் நேரமாகும். வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு புதிய வேலையும் கிடைக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றமும் ஏற்படும்.

# நல்ல வாய்ப்புக்கள் வந்து கொண்டேயிருக்கும்!

பொதுவாக இம்மாதத்தில் இராகு-கேதுக்களுக்குப் பிரீதி செய்வது நல்லது. பிரதோஷ நேரத்தில் நந்தியெம்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். நவராத்திரி நாட்களில் மகிஷாசுரமர்த்தினியாக அம்பிகை அவதாரம் எடுத்து அசுரனை வெற்றி பெற்ற நாளான விஜயதசமி அன்று முறையாக வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். வாழ்க்கை பயணம் நல்ல விதமாக அமையும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 24ஆம் திகதி கன்னி இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்கு புதன் உச்சம் பெறுவதால் திருமண காரியங்கள் கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கும். அயல்நாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் கிடைப்பார்கள். தாயார், தந்தையாரின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள். அவர்களின் உடல்நலம்




தேறும். உங்கள் தொழிலுக்கான மூலதனத்தைப் பெற்றோர்களே தரலாம். ஒக்டோபர் 9ஆம் திகதி துலாம் இராசிக்குப் புதன் வருகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். குறைந்த இலாபம் கிடைத்து வந்த தொழிலில் நிறைந்த இலாபம் கிடைக்கப் போகின்றது.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் ஒக்டோபர் 10ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். உங்கள் இராசி நாதன் குருபகவானுக்கு பகைக் கிரகமாக விளங்குபவரும் சுக்ரனே ஆவார். எனவே அப்படிப்பட்ட கிரகம் நீச்சம் பெறும்பொழுது அற்புதமான பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பார்கள். எனவே நல்ல வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**


ஒக்டோபர் 14ஆம் திகதி கன்னி இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 7ஆம் இடத்தில் சஞ்சரிப்பது நன்மைதான். குடும்பச் சுமை குறையும். கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும். தந்தை வழி உறவில் இருந்து வந்த விரிசல் அகலும். பூர்வீகச் சொத்துக்களை பாகம் பிரிக்க மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சகோதர சச்சரவுகள் அகலும். இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப் பெரு மானையும், வியாழன் தோறும் குருபக வானையும் வழிபாடு செய்யுங்கள். பௌர்ணமி கிரிவலம் வருவதன் மூலம் பலன் அதிகம் கிடைக்கும்.

**மங்கையர்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டிய மாதமாகும். குடும்பச்சுமை அதிகரிக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் ஸ்தம்பித்து நிற்கலாம். உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இணக்கம் ஏற்பட, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்ப விடயங்களை மூன்றாம் நபரிடம் சொல்வதை தவிர்க்க வேண்டும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வை யில் வழிநடத்துவது உகந்தது. உத்தியோக மாற்றம் உருவாவதை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். திசாபுத்தி வலுவிழந்தவர்களுக்கு நீண்ட தூரத்திற்கு மாறுதல் கிடைக்கலாம். பெற்றோர் வழி ஆதரவு ஓரளவு உண்டு. விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதற்கு ஆர்வம் காட்டுவீர்கள். வியாழன்தோறும் குரு வழிபாட்டையும், பிரதோஷ நேரத்தில் நந்தியெம்பெருமான் வழிபாட்டையும், சிவன் உமையவள் வழிபாட்டையும் மேற்கொண்டால் நன்மைகள் அதிகம் கிடைக்கும். (முற்றும்)

# சிங்களஅரசுபொறுப்புக்கூறலை செய்யப்போவதேஇல்லை!

## ஐ.நா.அமர்வில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



சிங்கள பௌத்த பேரின வாத அரசாங்கங்களில் தற்போதைய அரசு என்றாலும் சரி, இனி வரப் போகும் அரசுகள் என்றாலும் சரி பொறுப்புக் கூறல் என்பதை செய்யப் போவதே இல்லை. ஆகையால்தான் 'இலங்கை விடயத்தை பாதுகாப்பு சபைக்கு அனுப்பி குற்றவியல் விசாரணை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என கோருகின்றோம் என ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பொறுப்பாளர் பிரான்சிஸ்கோ மொட்டோவிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா.மனிதவுரிமை பேரவையில் அமைந்துள்ள பிரான்சிஸ்கோ மொட்டோவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பிலான அறிக்கையை வெளியிடும் போது, உள்ளக விசாரணை இலங்கையில் சாத்தியமில்லை. முப்பது வருடகால இனப்பிரச்சினையால் இலங்கையின் நீதித்துறை நம்பகத்தன்மையை இழந்துள்ளது. இதனால் தான் கலப்பு விசாரணை ஒன்று வேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவை, இலங்கையின் குற்றங்களை விசாரணை செய்ய கலப்பு பொறிமுறை ஏற்புடையது எனவும், இந்த பொறிமுறைக்கான முழு பொறுப்பும் இலங்கையினுடையது எனவும் கூறியிருந்தன. எனினும் சர்வதேச நாடுகளை எந்த வகையில் சேர்த்து கொள்வது என்பது தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இதே போன்று இலங்கை தொடர்பில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் கலப்பு பொறிமுறை என்ற விடயம் இல்லை. ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் மட்டும் தான் கலப்பு விசாரணை என சொல்லியிருக்கின்றார். எனினும் கலப்பு விசாரணை நடைபெறப் போவதில்லை என்பது வெளிப்படையான விடயம். அதனை இலங்கை அரசாங்கமே கூறி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனிதவுரிமை ஆணையாளர்நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கை மீது சர்வதேச விசாரணையே வேண்டும் எனவும், அதன் மூலமே இலங்கையை பொறுப்புக்கூறலில் ஈடுபட வைக்க முடியும் என வலியுறுத்தி வந்திருந்தார். எனினும் புதிய ஆணையாளராக செயிட் அல்ஹூசைன் வந்த பின்னர் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதே இல்லை. இந்த நிலையில் தான் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கம், அது தற்போது இருக்கும் அரசாங்கம் என்றாலும் சரி இனி வரப் போகும் அரசுகள் என்றாலும் சரி, பொறுப்புக்கூறல் என்பதை செய்யப் போவதே இல்லை. ஆகையால் தான் இலங்கை விடயத்தை பாதுகாப்பு சபைக்கு அனுப்பி குற்றவியல் விசாரணை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். அல்லது ஐ.நாவின் பொறுப்பில் சர்வதேச விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதாக சர்வதேச நாடுகளுக்கு இலங்கை அரசு வாக்குறுதியளித்த நிலையில், அந்த சட்டத்தை இன்று வரை நீக்க நடவடிக்கை எடுக்காமல் அதனை விட மோசமான ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளை கூட இந்த சட்டத்தை வைத்து மீண்டும் மீண்டும் அவர்கள் மீது வழக்கு தொடர்ந்து சிறையில் அடைக்கும் வேளைகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகின்றது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனை அடுத்து பதிலளித்த ஐ.நாவிற்கான ஆசிய பசுபிக் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பொறுப்பாளர், ஐ.நாவின் பரிந்துரைகளை நிறைவேற்ற இரண்டு வருட கால அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிலையில் தற்போது ஒரு வருட நிறைவில் அரசின் செயற்பாடுகள் ஏமாற்றமளிக்கின்றது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பதவியில் இருக்கும் போது தான் இந்த தாமதம் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனினும் புதிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவின் காலத்திலும் எந்த முன்னேற்றங்களும் இல்லை. இந்த விடயங்கள் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பாக எதிர்வரும் மார்ச் மாதம் வரவுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் என கூறியிருந்தார். எனினும் மார்ச் மாதம் வர போகின்ற அறிக்கை ஐ.நா. பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு ஒரு தெளிவான ஆலோசனையை, அறிவுறுத்தலை வழங்குவதாகவும் அழுத்தம் கொடுப்பதாகவும் இருக்க வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் வலியுறுத்தியிருந்தார். (இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1196

சுதாகர்

மீன் சாப்பிடும் போது...
முள் குத்தாமலிருக்க...



செருப்பு போட்டுகிட்டு
சாப்புடனும்...

விஷ்ணுகாந்

பதில் சொல்லுங்க ப்ளீஸ்



பீரோவில் இருக்கும் மனைவியின்
நூற்றுக்கணக்கான புடைவைகளில் ஒன்றை
எடுத்து கிஃப்ட் பெக் செய்து மனைவிக்கு
பரிசளித்தால் கண்டு பிடித்து விடுவாளா?

கவிப்பிரியா

கஸ்டமர்: இந்த பேஸ்ட்'ல
உப்பே இல்லையே...?"



கடைக்காரர்: யோவ் அது
பேஸ்ட்டே இல்ல, புண்ணுக்குப்
போடுற மருந்துயா...!

நந்து



மனைவி :
யாராவது
பொண்ணுங்க
உங்களுக்கு
ஃப்ளையிங் கிஸ்
கொடுத்தா
என்ன
பண்ணுவீங்க...?

கணவன் : அந்த மாதிரிப்
பொண்ணுங்களையே எனக்குப்
பிடிக்காது. சோம்பேறி கழுதைங்க.

கலைச்செல்வி

பெண்ணின் புன்னகை
ஆணைவிட அழகானது....!



ஆனால் ஆணின் கண்ணீர்
பெண்ணைவிட வலி நிறைந்தது...!

ரூபன்

சோகமாகக்கூட இருப்போம்...
ஆனால் சோறு இல்லாமல்
இருக்க மாட்டோம்...!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள் - தும்பளை செய்தியாளர்)

# ரோஹிஞ்யா முஸ்லிம்களை அரசு ஒருபோதும் பொறுப்பேற்கமாட்டாது

## அமைச்சர் சம்பிக்க திட்டவட்டம்

(கொழும்பு)

ரோஹிஞ்யா முஸ்லிம்களை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் பொறுப் பேற்காது. இலங்கைக்குள் அனுமதிக்கவோ தஞ்சம் கொடுக்கவோ அமைச்சரவை தீர்மானிக்கவில்லை. ரோஹிஞ்யாக்களில் அடிப்படை வாதக் குழுவொன்று தனி நாட்டை கைப்பற்றும் நோக் கத்தில் போராடிவருகிறது. முஸ்லிம் நாடுகளின் ஒத் துழைப்பு இதில் காணப் படுகிறது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



ரோஹிஞ்யா முஸ்லிம்கள் குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க விடுத்துள்ள விசேட அறிக்கையில்,

மியன்மாரின் உள்நாட்டு குழப்பங்களை அடுத்து அங்குள்ளவர்களின் 10 ஆயிரம் ரோஹிஞ்யா முஸ்லிம்களை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க தயாராக உள்ளதாக கடந்த வாரத்தில் இருந்து வெளிவரும் செய்திகள் அனைத்துமே உண்மைக்கு புறம்பானவையாகும். இந்த செய்திக்கு பின்னர் நாட்டில் சில குழப்பகர கருத்துக்கள் நிலவிவரும் அதே நிலையில் ஒருசில முஸ்லிம் அமைப்புகள் கொழும்பில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக பேரணிகளை நடத்தவுள்ளதுடன் அதனை எதிர்த்து பௌத்த அமைப்புகளும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆனால் அரசாங்கமாக நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ரோஹிஞ்யா முஸ்லிம்களை பொறுப்பேற்கவோ அல்லது அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவோ தீர்மானிக்கவில்லை. அமைச்சரவையில் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை, எனினும் சில காலத்திற்கு முன்னர் இலங்கை கடல் எல்லையில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் சிலர் சட்ட விரோதமாக கப்பலில் வந்த நிலையில் அவர்கள் மீட்கப்பட்டு மீண்டும் மியன்மாருக்கு அனுப்பப்பட்டனர். அதை தவிர இலங்கை எந்த வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை" என தெரிவித்துள்ளார். (இ-7)

# டெங்கு ஒழிப்பு விசேட செயற்றிட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்

## சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க அனைத்து தரப்பினரதும் பூரண ஒத்துழைப்பை கோரியுள்ள சுகாதாரத் துறையினர், பொது சுகாதார பரிசோதகர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்இருப்பதால் குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்து செல்வதில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

டெங்கு நோய் தொற்றை தடுக்கும் விதமாக நாடளாவிய ரீதியில் தேசிய செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் நேற்றைய தினம் இந்த டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஏனைய மாகாணங்களை விட இந்தவருடம் வடக்கு மாகாணத்தில் டெங்கு தொற்று அதிகரித்துள்ளதாகவும் அதில் யாழ். மாவட்டத்திலேயே சடுதியாக அதிகரித்துள்ளது என தரவுகள் தெரிவிக்கின்றன. எனவே பாரிய பாதிப்பில் இருந்து மீள்வதற்கு, மிக சிறப்பான முறையில் தீவிரமாக டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக அரச, தனியார் திணைக்களங்கள், புதிய கட்டடப்பகுதிகள், பாடசாலைகள் போன்றவற்றில் மிகவும் நுணுக்கமான முறையில் குறித்த செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளனர் வீடுகளில்டெங்கு ஒழிப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ள முழுமையான ஒத்துழைப்பை மக்கள் வழங்க முன்வர வேண்டும்எனவும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த குழு செயற்பாட்டில் அனைத்து தரப்பினரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றும் மிக முக்கியமான பணியை முன்னெடுக்கும் பொது சுகாதார பரிசோதகர்கள் தற்போது தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் குறித்த செயற்பாட்டை முன்னெடுத்து செல்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் எனவே மக்களின் நன்மை கருதி சிறந்த முறையில் குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்து செல்ல அனைத்து தரப்பினரும் கூடிய ஒத்துழைப்பை தர வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# ஊடகவியலாளர் அஸ்வின் நினைவாக 'கோடுகளால் பேசியவன்' நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சன் நினைவு நிகழ்வும் - கோடுகளால் பேசியவன் என்ற நூலின் வெளியீடும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். நாச்சிமார் கோவிலடி ராஜா குளிர்களியகத்தின் ஹம்சியா மஹால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுகளில் என்றும் பசுமையாக நிறைந்திருப்பவன் அஸ்வின் சுதர்சன் என்ற பொருளில் அருட்பணி. பிலிப் றஞ்சனகுமார் (அ.ம.தி) அடிகளாரும் ஊடகவியலாளர் அஸ்வின் சுதர்சனின் பன்முக ஆளுமைகள் என்ற பொருளில் சமூக சேவைகள் உத்தியோகத்தரும் எழுத்தாளருமாகிய வேதநாயகம் தபேந்திரனும் மாதகல் மண்ணின் மைந்தனாக அஸ்வின் சுதர்சன் என்ற பொருளில் ஆசிரியர் ஜேசுதாசன் அனிஸ்டாசும் நண்பர்களின் பார்வையில் அஸ்வின் சுதர்சன் என்ற பொருளில் புகையிரத நிலைய உத்தியோகத்தர் விவேகானந்தன் கவிச்செல்வனும், செய்தி ஆசிரியராக அஸ்வின் என்ற பொருளில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி. குமரனும் கார்ட்டூனிஸ்ற் ராக அஸ்வின் சுதர்சன் என்ற பொருளில் ஊடகவியலாளர் ஆறுமுகராசா சபேஸ்வரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (இ-3)

# உலக சுற்றுலா தினத்திற்கான விழிப்பூட்டல் நிகழ்வு யாழில்

## வடக்கு முதலமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்திற்கான உலக சுற்றுலா தினத்திற்கான விழிப்பூட்டல் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம்திகதி யாழில்நடைபெறவுள்ளதாக வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வடமாகாணத்தில் எத்தனையோ சுற்றுலா மையங்கள் அடையாளப்படுத்தப்படாது இலைமறைகாயாக காணப்படுகின்ற காரணத்தினால், வெளிநாடுகளிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்தில் சுற்றிப் பார்ப்பதற்கு ஒருஇடமும்இல்லைஎன்ற கருத்துடன் நயினாதீவுக்கும், தம்பகொளபட்டுண என்ற கடற்படையினர் பெயர் வைத்த இடத்திற்கும் சென்றுவிட்டு திரும்பி விடுகின்ற நிகழ்வு எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக சுற்றுலா மையங்கள் புனரமைக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

வடமாகாண சுற்றுலாத் துறைக்கான தந்திரோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. கலைச்செல்வன் என்பவரின் திட்ட வரைவு எம்மால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. அது குறுகிய காலத்திற்கு ஏற்புடையதாய் இருந்தாலும் நிலையான ஐந்து வருட அல்லது பத்து வருட முதன்மைத்திட்டம் (Master Plan) ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். நிபுணர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கின்றோம்.

சுற்றுலா சார் துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அன்று மக்களிடையே விநியோகிக்கப்படுவன.

போர்க்காலத்தில் வடமாகாண வரைபடம் உத்தியோகபூர்வமாகக் கிடையாதிருந்தது. அதனை உத்தியோகபூர்வமாகத் தயாரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். அதே நேரம் சுற்றுலா மையங்களை உள்ளடக்கி நாமாகவே வரைபடம் தயாரித்துள்ளோம்.

வடமாகாண சுற்றுலா வழிகாட்டி நூல்கள் சிலவற்றை தயாரித்து அன்றைய தினம் வெளியிடவிருக்கின்றோம்.

இவற்றுக்கும் மேலாக சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதன் மூலமாக அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வடபகுதியை நோக்கி வருவதற்கும் வடபகுதியில் காணப்படும் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் தங்குமிடச் சொந்தக்காரர்கள், உணவு விநியோகத்தர்கள் என பல்வேறுபட்ட தரப்பினருக்கு வருவாயைத் தேடிக் கொடுப்பதற்கும் சுற்றுலா அபிவிருத்திஅனுசரணையாக விளங்கும் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் விருந்தோம்பல் முகாமைத்துவப் பாடநெறிகளை விரைவில் ஆரம்பிக்க இருக்கின்றது. தொழில் தேடும் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு தொழிற்றிறன் கொண்டதும் அதிக வருமானத்தை ஈட்டித்தர வல்லதுமான விருந்தோம்பல் துறையின் பின்வரும் பாடநெறிகள் கற்பிக்கப்படவுள்ளன. வரவேற்பறை முகாமைத்துவம், உணவு மற்றும் பானங்கள் பரிமாற்றம், தங்குமிடப் பராமரிப்பு, தொழில்முறை சமையற்கலை மற்றும் கடமைகளுக்கான ஆங்கிலம் என்பன கற்பிக்கப்படுவன.

சுற்றுலாப் பயணிகளை வடபகுதிக்கு கவரும் அதே நேரத்தில் எமது மக்களின் கலாசார நிகழ்வுகளுக்கு இடம் கொடுக்கும் வகையில் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது அவா. அன்றைய நிகழ்வுகளில் எமது பாரம்பரியம் மற்றும் கலைகள் என்பவற்றை பிரதிநிதித்துவப் படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றன.

மாட்டு வண்டில் சவாரிகள் நடைபவனியின் போது நடைபெறுவன.

தவில், நாதஸ்வரம், பறை, தப்பு, சங்கு போன்றவற்றின் கூட்டிணைந்த இனியம்இசை நிகழ்ச்சிகள் நடைபெறுவன.

நாட்டுக்கூத்து, காவடி, சிலம்பம், பொம்மலாட்டம் போன்ற இன்னோரன்ன ஆடல் வடிவங்களும் அரங்கேற்றப்படவுள்ளன.

மொத்தத்தில் வடபகுதியின் பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைக்கின்ற ஒரு நல்ல நிகழ்வாக இந்த சுற்றுலாத் தினம் - 2017 முன்னெடுக்கப்படவிருக்கின்றது. அன்றைய தினம் காலை யாழ். புகையிரத நிலையம் முன்பாக ஆரம்பமாகின்ற விழிப்புணர்வு பேரணி ஆஸ்பத்திரி வீதியூடாக பயணித்து, சத்திரச்சந்தியை அடைந்து கே.கே.எஸ். வீதியூடாக பண்ணையை அடைந்து பூர்த்தியாகும். அதை அடுத்து பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். பொது நூலகம் முன்பாக நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன என தெரிவித்துள்ளார். (இ-4,9)

# இலங்கையில் உள்ளூராட்சி சபைகளும் பிரதிநிதிகள் எண்ணிக்கையும்

இந்த ஐந்து யோசனைகளையும் பரிசீலனை செய்த குழு 5 ஆவது முறையை ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் வட்டார வாரியாக 5092 தெரிவாகு நிலை வட்டாரம் உருவாகியது. மிகுதி 40 விகிதாசார முறை தெரிவு செய்யப்படுவர்.

மாவட்ட அடிப்படையில் மக்கள் தொகை 1981-2012 இற்கு இடைப்பட்ட அதிகரிப்பு, குடி அதிகரிப்பில் மாவட்டத்தின் விகிதாசாரம், `தற்போதைய அங்கத்தவர் எண்ணிக்கை புதிய முறையில் வட்டார ரீதியில் பெறவிருக்கும் ஆசனங்கள் எண்ணிக்கை பின் வருமாறு,

| மாவட்டம் | மக்கள் தொகை | மக்கள் தொகை அதிகரிப்பு 1981-2012 | வீதம் | தற்போதைய அங்கத்தவர் எண்ணிக்கை | வட்டார ரீதியிலும் விகிதாசார(*) ரீதியிலும் தெரிவாகும் அங்கத்தவர் எண்ணிக்கை | மக்கள் தொகையில் சராசரியாக கிடைக்க வேண்டிய எண்ணிக்கை | தேசிய வேறுபாடு | வட்டார ரீதியில் சராசரி ஒரு அங்கத்தவருக்கு மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 2309199 | 442809 | 4.38 | 295 | 329 (208)(*) | 580 | -251 | 7018 |
| கம்பஹா | 2296341 | 813641 | 20.91 | 354 | 417 (264) | 576 | -159 | 5507 |
| களுத்துறை | 1217374 | 314260 | 8.08 | 235 | 277 (174) | 305 | -28 | 4395 |
| கண்டி | 1369857 | 169899 | 4.37 | 338 | 377 (238) | 344 | +33 | 3633 |
| மாத்தளை | 482166 | 84229 | 2.16 | 156 | 168 (104) | 121 | +47 | 2870 |
| நுவரெலியா | 706550 | 186588 | 4.80 | 140 | 186 (120) | 177 | +09 | 3799 |
| கா்லி | 1058492 | 161771 | 4.16 | 244 | 272 (172) | 266 | +06 | 3891 |
| மாத்தறை | 809610 | 78344 | 2.01 | 200 | 224 (136) | 203 | +21 | 3614 |
| அம்பாந்தோட்டை | 598025 | 110617 | 2.84 | 141 | 160 (98) | 150 | +10 | 3737 |
| யாழ்ப்பாணம் | 583371 | 252622 | -6.49 | 224 | 243 (152) | 146 | +97 | 2400 |
| கிளிநொச்சி | 112875 | 16875 | 0.43 | 38 | 40 (24) | 28 | +12 | 2821 |
| மன்னார் | 98893 | 22949 | -0.59 | 46 | 54 (34) | 25 | +29 | 1831 |
| வவுனியா | 171506 | 62511 | 1.31 | 52 | 637 (38) | 43 | +[illegible]0 | 2722 |
| முல்லைத்தீவு | 92143 | 2947 | 0.08 | 38 | 41 (88) | | +16 | 2247 |
| மட்டக்களப்பு | 525039 | 139142 | 3.58 | 128 | 143 (24) | 25 | +14 | 3596 |
| அம்பாறை | 648057 | 196057 | 5.04 | 201 | 231 (137) | 132 | +68 | 2805 |
| திருகோணமலை | 377978 | 81182 | 2.09 | 118 | 136 (80) | 163 | +41 | 2779 |
| குருநாகல் | 1609916 | 256299 | 6.59 | 340 | 378 (242) | 95 | -26 | 4259 |
| புத்தளம் | 759720 | 197776 | 5.08 | 161 | 186 (116) | 404 | +05 | 4084 |
| அநுராதபுரம் | 856004 | 185232 | 4.46 | 203 | 228 (140) | 191 | +13 | 3754 |
| பொலநறுவை | 403437 | 104335 | 2.68 | 91 | 102 (62) | 215 | +1 | 3955 |
| பதுளை | 811908 | 133758 | 3.44 | 215 | 239 (150) | 101 | +35 | 3397 |
| மொனராகலை | 448543 | 121142 | 3.11 | 104 | 121 (70) | 204 | +09 | 3706 |
| இரத்தினபுரி | 1081664 | 197279 | 5.07 | 229 | 258 (158) | 112 | -14 | 4192 |
| கேகாலை | 837695 | 109603 | 2.82 | 199 | 216 (136) | 272 | +06 | 3875 |

210

4833 வட்டாரங்களில் இருந்து 5092 பேர் தெரிவு செய்யப்படுவர். இவ்வட்டாரங்களுள் 241 இரட்டை அங்கத்தவர் வட்டாரங்களாக இருந்தன. 9 மூன்று அங்கத்தவர்கள் தெரிவு செய்யும் வட்டாரங்களாக இருந்தன. மீளாய்வுக்குப் பின்னர் தெரிவு செய்யும் அங்கத்தவர்கள் 5092 பேராகவும், வட்டாரங்களின் எண்ணிக்கை 4935 ஆகவும் இவற்றுள் 149 இரண்டு அங்கத்தவர்களை தெரிவு செய்யும் வட்டாரமாகவும் நான்கு மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் வட்டாரங்களாகவும் இருக்கின்றன. புதிய வட்டார விகிதாசார நிலைப்படி 5092 வட்டாரப் பிரதிநிதிகள் 60 வீதமாகவும் அண்ணளவாக 3165 பேர் வரையில் விகிதாசார முறையில் 336 சபைகள் அடிப்படையில் நாடு தழுவிய நிலையில் தெரிவாவர். நாட்டின் மொத்த உள்ளூராட்சி சபைகளின் மொத்த எண்ணிக்கை 8257 பேர் வரையில் இருக்கலாம். ஒவ்வொரு சபைக்கும் தனித்தனியான விகிதாசாரப் பிரதிநிதிகள் தீர்மானிக்கப்படுவதாலும் முழுத்தானமே எடுப்பதாலும் விகிதாசார பிரதிநிதித்துவ எண்ணிக்கையில் சிறு மாற்றங்கள் ஏற்படமுடியும். தேசிய ரீதியில் 3980 பேருக்கு ஒரு வட்டார பிரதிநிதியும் 6403 பேருக்கு ஒரு விகிதாசார பிரதிநிதித்துவம் நாட்டில் சராசரியாக 2454 பேருக்கு ஒரு உள்ளூராட்சி பிரதிநிதியும் இருக்கும் நிலை உருவாகியுள்ளது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் ஏதும் வேறுபாடுகளைக் காட்டுகின்றதா என நோக்குவோம். இலங்கையில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் முன்னர் 75000 பேருக்கு ஒருவர் என்ற நிலையிலும் 1000 சதுர மைலுக்கு ஒருவர் என்ற நிலையிலும் ஒதுக்கப்பட்டன. 1978 இல் குடியரசு யாப்பு இரண்டில் விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் 36 பேர் ஒன்பது மாகாணங்களுக்கு தலா நான்காகக் கொடுக்கப்பட்டது. மேலும் மாவட்டங்களுக்கு பகிரப்பட்டன. மிகுதி 160 அங்கத்தவர்கள் தேர்தல் மாவட்ட வாக்காளர்கள் எண்ணிக்கைப்படி நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களுக்கு பகிரப்படுகின்றன. இப்பகிரப்படும் செயற்பாடு ஒவ்வொரு வருடம் வாக்காளர் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டதும் இடம்பெற்று வருகின்றது.

மாகாண சபைகளுக்கான அங்கத்தவர்கள் ஒதுக்கீடு 40 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒருவரும் 1000 சதுர கிலோ மீற்றருக்கு ஒருவர் என்ற ரீதியில் ஒதுக்கப்படுகின்றது. மேலும் மக்கள் தொகை 20000 இற்கு மேற்படும் பொழுது முழுத்தானமாகக் கொண்டும் நிலப்பரப்பும் அரைவாசிக்கு மேற்படும் பொழுது முழுமையாகக் கொண்டு அங்கத்தவர்கள் ஒதுக்கப்படுவர். வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் 16 பிரதிநிதி மக்கள் அடிப்படையிலும் 1 பிரதிநிதி பரப்பு அடிப்படையிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று மக்கள் தொகையிலும் ஒருவர் பரப்படிப்படையிலும் மன்னார் மாவட்டத்தில் இருவர் மக்கள் தொகை அடிப்படையிலும் இருவர் பரப்படிப்படையிலும் முல்லைத்தீவில் 2 மக்கள் தொகை அடிப்படையிலும் மூவர் பரப்படிப்படையிலும் ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி முறையில் சபைகளின் அங்கத்தவர் எண்ணிக்கையைத் தீர்மானிக்க தேசிய ரீதியில் ஒரு வரையறைகள் கடைப்பிடிக்கவில்லை. ஒவ்வொரு சபையும் உருவாக்கப்பட்ட அங்கு அன்று நிலவிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப அங்கத்துவ எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் இன்றைய தேசிய நிலையில் மாவட்ட அடிப்படையில் அங்கத்தவர்கள் பங்கீட்டில் எத்தகைய நிலைகள் காணப்படுகின்றதென்பதைப் பார்ப்போம்.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களே தேசிய விகிதாசாரத்திலும் குறைவான பிரதிநிதிகளைக் கொண்டுள்ளன.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இதற்குக் காரணம் இம்மாவட்டங்கள் பெரிய நகர்களைக் கொண்டிருப்பதால் அங்கத்தவருக்குரிய குடித்தொகை உயர்வாக இருக்க வேண்டும் அல்லது சபைகளின் அங்கத்துவ எண்ணிக்கை அதிகமாகி நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படும்.

கொழும்பு மாநகர சபைக்கு இன்று 66 பேர் வட்டார அடிப்படையிலும் 44 பேர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர். இதன்மூலம் கொழும்பு மாநகர சபையின் அங்கத்தவர் எண்ணிக்கை 100 ஆக இருக்கும். இலங்கையில் சராசரி உள்ளூராட்சி சபைக்கு வட்டார ரீதியில் தெரிவு செய்யப்படும் அங்கத்தவரின் சராசரி மக்கள் தொகை 3980 ஆகும். கொழும்பு மாநகர சபையின் மக்கள் தொகை 561314 ஆகும். இத்தொகையை 3980 ஆல் பிரித்தால் 141 பேர் வட்டார அடிப்படையில் தெரிவாவர். மேலும் 94 பேர் விகிதாசார ரீதியில் தெரிவாகும் உரிமை பெறுவர். இதன்மூலம் கொழும்பு மாநகர சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 235 ஆக அதிகரிக்கும். இத்தொகை கொழும்பு மாநகர சபையை நிர்வகிக்க தேவைதானா என நீங்கள் தீர்மானிக்கலாம். ஆகவே இலங்கையில் உள்ளூராட்சி அங்கத்தவர் பங்கீடு மாவட்ட நிலையில் நியாயமாக இருக்கின்றது.

மாவட்டத்துள் இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே காணப்படும் ஏற்றுக்கொள்ள முடியாத வேறுபாடுகள் களையப்பட வேண்டும். மேலும் சில பிரதேசங்களில் புதிய சபைகள் அமைக்கப்படவேண்டிய தேவைகளும் உள்ளன.

இவைகள் சீர்செய்யப்படுமாயின் சிறந்த உள்ளூராட்சிக் கட்டமைப்பை நாடு பெறும். மேற்குறிப்பிட்ட இரண்டு பிரச்சினைகள் தீர்க்கப்படுமிடத்து குறைபடுபவர்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும்.

(தொடரும்)

## அரசியலமைப்புக்கு அமைய அரச தலைவருக்குரிய அளவற்ற

# அதிகாரத்தை கைவிடுவது தொடர்பான முன்மாதிரியை நான் வழங்கியுள்ளேன்

## ஜனாதிபதி மைத்திரி ஐ.நாவில் விசேட உரை

(ஜெனிவா)


ஆட்சிக்கு வந்த தலைவர், அரசியலமைப்புக்கமைய அளவற்ற அதிகாரங்களுடன் ஆட்சியில் இருக்கும் போது அந்த அதிகாரங்களை மீள ஒப்படைக்க அரச தலைவரென்ற ரீதியில் எனது நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் அதிகாரத்தைக் கைவிடுவது தொடர்பான முன் மாதிரியை நான் வழங்கியுள்ளேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில், பங்கேற்றுள்ள ஜனாதிபதி நேற்று அங்கு விசேட உரையாற்றியிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அனைத்து அரச தலைவர்களே, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நர்யகம் அவர்களே, 72ஆவது மாநாட்டில் விசேடமாக புதிய செயலாளர் நாயகம் நியமிக்கப்பட்ட நிலையில் அவருக்கு நல்வாழ்த்துக்கூறி இங்கு உரையாற்ற கிடைத்த வாய்ப்பையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையின் அரச தலைவர் என்ற வகையில் மூன்றாவது தடவையாகவும் இந்தச் சபையில் உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த 72 ஆவது மாநாட்டின் முக்கிய தலைப்பாக இருப்பது, பேண்தகு உலகில் அனைத்து மனிதர்களும் கௌரவமாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்காக எடுக்கும் முயற்சியாகும். இன்று உலகில் நிலவும் பல்வேறு நிலைமைகளை கருத்திலெடுக்கும் போது மிகவும் காலத்துக்குகந்த தலைப்பு இதுவெனக் கூறமுடியும். 2015 ஜனவரியில் இலங்கை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அவ்வாறு தெரிவுசெய்யப்பட முன்னர் எனது அன்புக்குரிய நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தேன். அதில் நான் விசேடமாக குறிப்பிட்ட விடயம், உலகில் எந்தவொரு நாட்டுத் தலைவருக்கும் இல்லாத அதிகாரங்கள் இலங்கையின் அரச தலைவருக்கு இருப்பதனால் நான் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த அதிகாரங்களை ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலக்கி நாட்டின் பாராளுமன்றத்திற்கு ஒப்படைப்பதான வாக்குறுதியாகும்.

ஆட்சிக்கு வந்த தலைவர், அரசியலமைப்புக்கமைய அளவற்ற அதிகாரங்களுடன் ஆட்சியில் இருக்கும்போது அந்த அதிகாரங்களை மீள ஒப்படைத்த அரச தலைவரென்ற ரீதியில் எனது நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் அதிகாரத்தை கைவிடுவது தொடர்பான முன் மாதிரியை நான் வழங்கியுள்ளேன்.



ஜனநாயகத்தை பாதுகாத்து போசிக்கும் நாடுகளில் ஆட்சிக்குவரும் தலைவர்கள், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும் அதிகாரத்தை உரியவாறு பயன்படுத்துவதற்கும், நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக தமது அதிகாரத்தை பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். ஆயினும் கடந்த பல தசாப்தங்களாக உலக வரலாற்றை நோக்கும்போது பல தலைவர்கள் அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல விரும்பாமை காரணமாக அந்த நாட்டின் சமாதானம் சீர்குலைவதுடன் அது சர்வதேச ரீதியிலான பல்வேறு விதமான பிரிவுகளுக்கும் காரணமாக இருப்பதனைக் காண முடிகின்றது. அவ்வாறான வரலாற்றுத் தகவல்கள் பற்றிய, உள்நாட்டு, வெளிநாட்டு ஏராளமான அனுபவங்கள் எமக்கு இருக்கின்றன.

அவ்வாறான நிலைமையில் எனது நாட்டில் ஜனநாயக்தை உறுதிப்படுத்தி ஏகாதிபத்திய அரசியலை கொண்டுநடத்திய அரசியல் குழுக்களை அகற்றி நாட்டில் மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயக்தையும் உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தை பாதுகாத்து அடிப்படை உரிமைகளை மேம்படுத்தி கடந்த இரண்டரை ஆண்டுகளாக வெற்றிகரமாக பயணித்துள்ளேன் என்பதை இந்த கௌரவம் மிக்க சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஆம் ஆண்டு எமது நாட்டை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்காக எமது நாடும் முழு உலகமும் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. வறுமையிலிருந்து விடுபடும் நாடாக எனது நாட்டை பிரகடனப்படுத்தி நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன. இலங்கையில் 30 ஆண்டுகளாக நிலவிய உள்நாட்டுப் போர், நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நாட்டைப் பிரிப்பதற்கு போராடிய பயங்கரவாதிகளைத் தோற்கடித்து சுதந்திரமான ஜனநாயக நாடாக இயங்க எம்மால் முடிந்துள்ளது. பொருளாதார பின்னடைவுகளுடன் நாட்டில் ஏற்பட்ட பின்னடைவுகளில் கற்றுக்கொண்ட பாடங்களுடன் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நோக்கிப் பயணித்து நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக தேசிய பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில் மயமாக்கலில் நாம் புதிய அத்தியாயத்தை திறந்துள்ளோம். இந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் போது சுற்றாடல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்குவது எனது அரசின் முக்கியமான குறிக்கோளாக இருக்கின்றது.

இன்று, எனது நாடு உட்பட உலகம் முழுவதிலும் அமெரிக்காவிலும் கூட வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருப்பதனை விசேடமாக இவ்வேளையில் குறிப்பிட்டே ஆகவேண்டும். காலநிலை மாற்றம் தொடர்பில் பாரிஸ் மாநாட்டில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றில் கைச்சாத்திட்டதன் மூலம் நாம் சர்வதேச ரீதியில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒற்றுமை, ஒத்திசைவு ஆகியவற்றை செயற்படுத்துவது மிக முக்கியமான தேவையாக இருக்கின்றது. குறிப்பாக இன்று உலக நாடுகள் முன் அதுமுக்கிய இலக்காக இருக்கின்றது என்பதையும் அதனைச் செயற்படுத்துவதன் மூலம் மானிட சமூகத்தினதும் ஒட்டுமொத்த உலகத்தினதும் இருப்பை உறுதிப்படுத்த அது இன்றியமையாததாக அமையும் என்பதனையும் ஞாபகப்படுத்த வேண்டும்.

வறுமையிலிருந்து விடுபடும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் கிராமசக்தி எனும் புதிய செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் 2025ஆம் ஆண்டு வரையான தெளிவான பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்டத்தை நாங்கள் பிரகடனப்படுத்தியுள்ளோம். தேசிய பொருளாதாரம் மற்றும் விவசாயத்தை பலப்படுத்தி வறுமையிலிருந்து விடுபடும் அந்த பாரிய தேசிய செயற்றிட்டத்தில் புதிய செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி, 2025ஆம் ஆண்டுவரை நாம் அமுல்படுத்த எதிர்பார்க்கும் பொருளாதாரத் திட்டம், நாட்டில் பொருளாதார புத்தெழுச்சியையும் சுபீட்சத்தை அடைவதற்கு பெரும் உந்துசக்தியாக இருக்குமென நான் நம்புகிறேன்.

எனது நாட்டிலும் உலகிலும் இன்று பிள்ளைகள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். எமது நாட்டில் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" என்ற தேசிய செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளோம். போதைப் பொருளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், அவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல் மூலம் முழுமானிட சமூகத்தினதும் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான செயற்றிட்டமானது தேசிய, சர்வதேச ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். அத் திட்டத்தின் இலக்கை அடையும் வகையில் செயற்படுத்த வேண்டும் என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கின்றோம்.

பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் அன்று போன்றே இன்றும் உலகத்தின் கூடுதல் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு சமவுரிமை வழங்கும்போது இன்றும் பல்வேறு வகையில் பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றார்கள் என்பது உலகில் பல நாடுகளிலும் பல சமூகங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. எனது நாட்டுச் சனத்தொகையில் நூற்றுக்கு 52 வீதத்திற்கும் அதிகமானோர் பெண்களாவர். பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களூடாக உறுதிப்ப்டுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களில் 25 வீதமானோர் பெண்களாக இருக்க வேண்டுமென்பதனை எமது புதிய அரசியல் திருத்தச்சட்டத்தில் கட்டாயப்படுத்தியிருக்கின்றோம்.

பிள்ளைகளைப் பாதுகாத்தல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பாரிய பிரச்சினையாக விருக்கும் போதைப்பொருளை ஒழிப்பது தொடர்பில் நாம் தேசிய ரீதியில் செயற்றிட்டங்களை ஆரம்பித்திருக்கின்றோம். ஒட்டுமொத்த மானிட சமூகத்தினதும் இருப்புககாக போதைப்பொருள் ஒழித்தல் பாரிய சர்வதேச செயற்றிட்டமாக செயற்படுத்த வேண்டுமென்பது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயமாகும். அதற்கமைய உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் அனைத்து சமூகங்களிலும் பாடசாலைப் பிள்ளை முதற்கொண்டு போதைப் பொருளை ஒழிப்பதற்காக ஒட்டுமொத்த மனித குலமும் பொதுவான உடன்பாட்டுடன் பயணிக்க வேண்டியது முக்கியமானதென நான் கருதுகிறேன்.

30 ஆண்டு கால போருக்கு முகம்கொடுத்த எமது நாட்டில் 2015 ஆம் ஆண்டு நான் ஆட்சிக்கு வரும் போது முதன்மைப் பிரச்சினைகள் இரண்டு இருந்தன. முதலாவது வெளிநாட்டுக் கடன் சிக்கலாகும். வரையறையற்ற வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டிய நிலையில் பாரிய நிதிப் பற்றாக்குறை இருந்தது. அடுத்த விடயம் போர்க்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு முகம்கொடுப்பதாகும். ஆயினும் குறிப்பான தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான புதிய வேலைத்திட்டத்தின் மூலம் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்கும் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார சுபீட்சத்தை உருவாக்குவதற்கும் இன்று நாம் முன்னெடுத்திருக்கும் வேலைத் திட்டங்கள் ஊடாக வெளிநாட்டு கடன்களிலிருந்து விடுபடும் இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையினால் நான் மேற் குறிப்பிட்ட யுத்தகாலத்தில் நிலவிய சூழ்நிலை தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கின்ற முன்மொழிவுகள் பற்றி அரசாங்கம் என்ற ரீதியில் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதுடன் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு.
~ சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாணவர்களிடம் ஆன்மிகத்தை ஏற்படுத்தி விடுங்கள்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தர் சிறப்பு உரையாற்றினார்.

சுவாமி விவேகானந்தரின் உரைக்குத் தனிச்சிறப்பு உண்டு. அந்தச் சிறப்பு யாழ்ப்பாணத்திலும் பரிணமித்தது.

அவர் தனது உரையில் ஆன்மிக தானம் செய்யுங்கள் என்றார்.

எதற்காக அவர் அங்ஙனம் கூறினார் என்று அன்றைய பெரியவர்கள் ஆழ்ந்து சிந்தித்தனர். அவர் கூறிய ஆன்மிக தானம் இன்று தேவைப்படுகிறது.

அதிலும் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் ஆன்மிக தானம் மிகவும் அவசியமாகும். எவரொருவர் இறைபக்தியும் அன்பும் பாவ புண்ணியம் என்ற நம்பிக்கையும் அறத்தின் வழி நடப்பதே தர்மமாகும் என்ற எண்ணமும் கொண்டிருப்பாரோ அவர் நிச்சயமாக தீய வழியில், தீய செயலில் ஈடுபடமாட்டார். எங்கும் எதிலும் அன்பு நிறைந்தவராக அவர் வாழப் பழகிக் கொள்வார்.

ஆக, இந்தப் பழக்கம் என்பது வாழ்வைத் தெய்வீகமாக்கும்.

பொதுவில் மாணவர்களை வழிப்படுத்துவதற்கு ஆன்மிக சிந்தனைகளும் ஆன்மிக உரைகளும் மிகப்பெரும் பங்கு வகித்தன.

பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனை, நற்சிந்தனை, நவராத்திரி விழாக்கள் என அனைத்தும் ஆன்மிக எழுச்சியை மாணவர்களிடம் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டது.

உண்மையில் ஒரு காலத்தில் எங்கள் மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்து நின்றனர் என்று நாம் பழம் பெருமை பேசுவதற்கு அடிப்படையாக இருந்தது ஆன்மிகம் தான்.

ஆன்மிகத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தி விட, குருபக்தியும் தன் பாடசாலையை ஆலயமாகக் கருதும் உயர்ந்த நினைப்பும் இயல்பாக ஏற்பட்டு விடுகிறது.

எனினும் இன்று நாம் ஆன்மிகம் என்ற மிக உயர்ந்த கருப்பொருளை மறந்து பொருத்தமற்ற விடயங்களைத் தேடி அதனை அமுல்படுத்தி எந்தப் பிரயோசனமும் இல்லை என்ற வெறுமையில் வேதனைப்படுகின்றோம்.

எனவே நவராத்திரி விரதம் ஆரம்பித்துள்ள இந்த புனிதமான காலத்தில் எங்கள் மாணவச் செல்வங்களிடையே ஆன்மிக்த்தை ஏற்படுத்திவிட, நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் எந்த மண்ணில் ஆன்மிகதானம் செய்யுங்கள் என்று அறைகூவல் விடுத்தாரோ அந்த அறைகூவலில் எங்களின் எதிர்காலத்தை நிமிர்த்துவதற்காக என்பதை ஏற்று, உணர்ந்து மாணவர்களிடையே ஆன்மிக சிந்தனைக்கு வித்திட வேண்டும்.

பெரியவர்களை மதித்தல்; ஆசிரியர்களைப் போற்றுதல்; பெற்றோர்களைப் பராமரித்தல்; பிறருக்கு உதவுதல் என்ற நற்பண்புகள் வளர்க்கப்படும்போது அது ஒட்டுமொத்தத்தில் எங்கள் வாழ்வை நிச்சயம் பெறுமதியாக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் வீரம், செல்வம், கல்வி என்பவற்றின் அதிபதியாக இருக்கும் அன்னை பராசக்தியை வழிபடும் இக்காலத்தில் தெய்வீகத் தன்மை உணரப்பட்டு சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து, எதையும் வீணாக்குதல் என்றில்லாமல் பயன்பெறுதல் என்ற வகையில் மாணவர்களிடையே ஆன்மிகத்தை தோற்றுவிக்க இந்தப் புனிதமான நவராத்திரிக் காலத்தைப் பயன்படுத்துவோமாக.

# சில கடும்போக்காளர்கள் எதிர்பார்க்கும் உடனடித் தீர்வுகளை வழங்க முடியாது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(ஜெனிவா)

துரிதமான பயணம் ஆபத்து மிக்கதாகும் என்பதை நாம் அறிவோம். ஆகையால் சில கடும்போக்காளர்கள் எதிர்பார்க்கும் துரிதமான உடனடித் தீர்வுகளை வழங்குவதிலுள்ள சிரமங்களை, எமது ஒட்டுமொத்த சமூகத்திலுமுள்ள சிக்கலான தன்மையின் அடிப்படையில் நீங்கள் அனைவரும் புரிந்து கொள்வீர்களென நான் நம்புகிறேன். ஆகையால் எனது நாட்டினுள் மீண்டுமொரு போர் ஏற்படாததை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து இனங்களிடையேயும் ஒற்றுமையினை ஏற்படுத்துவதற்கு எனது அரசு முன்னெடுக்கும் பணிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையினதும் உலக நாடுகளினதும் ஒத்துழைப்புக்களை மிகவும் கௌரவமாக எதிர்பார்க்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின 72 ஆவது பொதுச்சபைக கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ள ஜனாதிபதி நேற்று அங்கு விசேட உரையாற்றியிருந்தார். இதன்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் ஜனநாயகம், மனிதவுரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தி பாதுகாப்பதில் எனது அரசாங்கம் கடந்த இரண்டரை வருடங்களாக ஜனநாயக ரீதியிலான ஆட்சி முறையினை ஏற்படுத்தியிருக்கின்றது. அத்தோடு இனிவரும் காலங்களிலும் அந்த விடங்களைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்பதனை விசேடமாக இங்கு குறிப்பிடுகின்றேன். நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை பலப்படுத்தி எனது நாட்டில் வாழும் பல்வேறு மொழி பேசும், மதங்களைப் பின்பற்றும் அனைவரிடமும் சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்பி சந்தேகம், நம்பிக்கையீனம், பழிதீர்க்கும் உணர்வு மற்றும் குரோதத் தன்மையினை நீக்கி அனைவரும் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாவும் சமத்துவமாகவும் வாழக் கூடிய சமூகத்தை கட்டியெழுப்ப எமது அரசாங்கம் பாடுபடும் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கமைய முக்கியமாக தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக நாம முன்னெடுத்துள்ள தேசிய செயற்றிட்டங்கள் ஊடாக, பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதுடன் சமூகத்தில் ஆன்மீக ரீதியிலும் ஒழுக்கம் மிக்க பண்பான சமூகத்தை உருவாக்குவதற்காக எனது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது.

விசேடமாக சட்டத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் நியாயமான சமூகத்தை உருவாக்கும் அடிப்படைச் செயற்பாட்டுக்காக எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. அவ்வாறான பின்னணியில் ஜனநாயகம் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் போன்றவற்றை பலப்படுத்தி சர்வதேசத்தின் நற்பெயரைப் பெற்றுக் கொண்டு எம்மிடமிருந்து விலகியிருந்த நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தி மிகச் சிறந்த அரசாட்சியை முன்னெடுக்கும் இந்த நேரத்தில் எமது நாட்டைக் கட்டியெழுப்பி முன்னேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடென்ற ரீதியில் 62 ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் சமவாயங்கள், உடன்படிக்கைகள், ஒழுங்குவிதிகள் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்பட்டு வரும் நாம், ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் உறுப்பு நாடென்ற ரீதியில் இலங்கை அரசாங்கம் தனது கடப்பாடுகளை நிறைவேற்றியுள்ளது என்பதை இங்கே குறிப்பிடுகின்றேன்.

அதற்கமைய எனது நாட்டின் சுயாதீனத் தன்மை மற்றும் இறைமை ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்ளும் அதே வேளை எம்மீது முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுகள், பிரேரணைகள் ஆகியன தொடர்பில் நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதனை ஒரு சுதந்திரமான சமாதானம் மிக்க நாடென்ற வகையிலும் நிதானமான பயணத்தின்மூலம் தெளிவான இலக்கை எட்ட எமக்கு உங்கள் அனைவரினதும் மதிப்புக்குரிய ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

சில கடும்போக்காளர் துரிதமான பயணத்தை எதிர்பார்க்கிறார்கள். சில கடும்போக்காளர் விரைவான தீர்வுகளை எதிர்பார்க்கின்றார்கள். ஆயினும் 30 ஆண்டுகால போர் நிலவிய நாடென்ற வகையிலும், பிளவுகள் ஏற்பட்டிருந்த நாடென்ற வகையிலும், நட்டினுள் இன ஒற்றுமையை ஏற்படுத்தி சகோதரத்துவத்தை கட்டியெழுப்பி எனது அன்புக்குரிய நாட்டையும் மக்களையும் மேம்படுத்துவதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன். ஆகையினாலே நிதானமாகச் செல்லும் காத்திரமான பயணத்திற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென இங்கே மிகத் தெளிவாக குறிப்பிடுகிறேன்.

பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தி, பண்பான சமூகத்தைக் கட்டியெழுப்பி, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்படாத வண்ணம் செயற்பட்டு உலகில் சுபீட்சம் மிக்க பொருளாதாரதுடன் கூடிய முன்மாதிரியான ஒரு நாட்டை உருவாக்க உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-3)

## சத்திய தரிசனம்



### உண்மை உங்களைக் காப்பாற்றும்

❖ நீங்கள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அப்போது தான் வாழ்வில் துன்பம் நம்மை தாக்கும்போது, பாறைபோல எதிர்த்து நிற்க முடியும்.

❖ உலகில் மிகவும் இன்பம் தரும் செல்வம் இறையருளே. கண்ணை இமை காப்பதுபோல் இறையருள் நம்மைக் காப்பாற்றும்.

❖ மனிதனுக்குள் உண்டாகும் மிருகவுணர்ச்சியைக் களைந்து விட்டால், தெய்வீக இயல்புகள் ஊற்றெடுக்கும்.

❖ உண்மையும் பொய்யும் இவ்வுலகில் கலந்தே இருக்கின்றன. தயிரில் வெண்ணெயைப் பிரித்தெடுப்பது போல, உண்மையை மட்டும் தேர்ந்தெடுந்தெடுங்கள். உண்மையின் பக்கமே கடவுள் இருக்கிறார். உண்மை உங்களை என்றும் காப்பாற்றும்.

❖ உங்களுடைய குற்றங்குறைகளைக் கண்டுபிடியுங்கள். அடுத்தவர்களிடம் குணங்களை மட்டும் தேடுங்கள். அவர்களது குறைகளை பெரிதுபடுத்துதல் பாவமாகும்.

❖ வேண்டாத பரபரப்பு, பயம், அறியாமையில் சிக்கிக்கொண்டு மனிதர்கள் தவிக்கிறார்கள். கடவுளை முழுமையாகச் சரணடைந்தால் நடப்பது எல்லாம் நன்மைக்கே என்ற தெளிவோடு உலகில் வாழமுடியும்.

## நவராத்திரி பாமாலை

வீரத்திற்கு இன்று முதலாம் நாள்



### துயர் துடைக்கும் துர்க்கை

கொற்றவைத் தெய்வம்
கொடுமை தவிர்க்க
துர்க்கையாகத் தோன்றி
துயர் கொள்ளும் மக்களுக்கு
ஆறுதல் அளித்தவள்
சிங்க ரத்தில் அவள் ஏறி
சீக்கிரம் விடைகாண துடித்தாள்
வீரத்தை மக்களுக்கு கொடுத்தாள்
வேகத்தை மனதில் நிறுத்தினாள்
நவராத்திரியில் துர்க்கை புகழ் பாடிடுவோம்
நாடிவரும் பக்தர் துயர் தீர்த்திடுவாள்
நன்னெறியில் வாழ வழிகாட்டிடுவாள்
நமது வேண்டுதலுக்கு வழி சமைத்திடுவாள்

பா.கலாதேவி,
யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சி** பிரதேசத்தில கௌதாரிமுனையிலும் மன்னார் பிரதேசத்தில் நாகதாழ்வு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# 43 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வு இரு பிரிவிலும் வடமாகாணத்துக்கு பதக்கம்




இலங்கை 43 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வில் வடமாகாண பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி 2ஆம் இடத்தை பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணி மூன்றாம் இடத்தையும் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளது. தேசிய விளையாட்டுப்போட்டியில் பெண்கள் பிரிவில் நடைபெற்ற போட்டியில் இறுதிப் போட்டியில் இறுதிப்போட்டிவரை முன்னேறியவடமாகாணபெண்கள் அணி இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ் அணியின் பயிற்சியாளராக த.சிவதாஸ்செயற்பட்டிருந் தார்.

மேலும் தேசிய விளையாட்டு போட்டிகளில் அரையிறுதி வரை முன்னேறிய வடமாகாண ஆண்கள் அணி முதற்தடவையாக மூன்றாம் இடத்தைபெற்று வரலாற்று சாதனை புரிந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ் அணியின் பயிற்சியாளர்களாக S.பிரசன்னா மற்றும் மோ.கபிலன் ஆகியோர் செயற்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்சி செய்வதற்கு உரிய பொது கூடைப்பந்தாட்ட திடல் இல்லாத நிலையில் யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் விசேட செயற்றிட்டங்கள் மூலம் பழைய பூங்காவில் பெறப்பட்ட வெற்றுக்காணியில் பயிற்சிகளை பெற்றே இச்சாதனைகளை வடமாகாண வீரர்கள் படைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## வடமாகாண மகுடம் உதைபந்தாட்ட தொடர்

# வடமாகாண யோசப்வாஸ் தோட்டவெளி அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது



"வடமாகாண மகுடம் " மின்னொளியிலான உதைபந்தாட்டத் தொடர் வலிகாமம் சென்லூட்ஸ் அணியை வீழ்த்தி மன்னார் யோசப்வாஸ் தோட்டவெளி அணி அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது.

மானுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியான அழைக்கப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுத் தொடரின் நாங்காம் நாள் போட்டிகள் அன்று (18-09-2017) திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் கழக மைதானத்தில் இடம் பெற்றது ,

பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டியில் மன்னார் யோசப்வாஸ் தோட்டவெளி அணி முன்கள வீரர்களின் சிறப்பான ஆட்டம் அவர்களின் வெற்றியை உறுதி செய்தது.

இறுதியாக ஆட்டம் முடியும் போது 5-2 என்ற கோல் கணக்கில் வலிகாமம் சென்லூட்ஸ் அணியை வீழ்த்தி மன்னார் யோசப்வாஸ் தோட்டவெளி அணி அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதிபெற்றது. (கு)

## மைலோ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

Nestle Lanka Plc நிறுவனத்தினர் Milo வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை கடந்த நான்கு வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடத்தி வந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வருடம் கிளிநொச்சி மாவட்டத்தின் கழகங்களையும் இணைத்து நடத்துவற்கு சம்மதம் தெரிவித்துள்ளதுடன் போட்டிகளை நடத்துவது தொடர்பாக அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் Nestle Lanka Plc நிறுவனத்தின் பிரதிநிதிகள், உதவி மாவட்டச் செயலர், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் உதைபந்தாட்டப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அறுபது விளையாட்டுக்கழகங்கள் கலந்துகொள்ள இருப்பதுடன் தெரிவு செய்யப்படும் ஆறு கழகங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற இறுதிச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

இவ்விளையாட்டு போட்டி எதிர்வரும் 2017.10.07ஆந் திகதி காலை 9மணிக்கு கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக்

# அரியாலை சென்றல், சென்றலைட்ஸ் கால் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது

வி.ரி.மகாலிங்கம் பிறிமியர்லீக் கிரிக்கெட் தொடரில் (A) பிரிவில் அரியாலை சென்றல் அணி ஸ்ரான்லி அணியை 26 ஓட்டங்களாலும் மூனாய் விக்டோறி அணியை 42 ஓட்டங்களாலும் ஜொலிஸ்ரார் அணியை 23 ஓட்டங்களாலும் சென்றலைட்ஸ் அணியை 6 இலக்குகளாலும் சிறிகாமாட்சி அணியை 7 இலக்குகளாலும் வெற்றி பெற்று (A) பிரிவில் முதலாவது (Winners) அணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் தங்களது பிரிவில் 5 போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஓர் அணியாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சென்றலைட்ஸ் அணி, ஜொலிஸ்ரார் அணியை 8 இலக்குகளாலும் மூனாய் விக்டோறி அணியை 94 ஓட்டங்களாலும் சிறிகாமாட்சி அணியை 8 இலக்குகளாலும் ஸ்ரான்லி அணியை 69 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று அரியாலை சென்றல் அணியிடம் 6 இலக்குகளால் தோல்வியும் அடைந்து (A) பிரிவில் 2 ஆம் இடத்தை (Runners) கைப்பற்றியுள்ளனர். 4 பிரிவுகளிலும் (A) பிரிவுகளுக்குள் நடைபெற்ற போட்டிகளில் 5 போட்டிகளிலும் வெற்றி பெற்ற முதலாவது அணியாக அரியாலை சென்றல் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.




இவ்விரு அணிகளும் (C) பிரிவில் தெரிவு செய்யப்படும் முதலிரு அணிகளுடன் காலிறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## கோபன், எடிசன் அதிரடி

# உடுப்பிட்டி நவஜீவனை வீழ்த்தி காலிறுதியில் நுழைந்தது றோயல்



றோயல் நட்சத்திரங்களான கோபன், எடிசன் அதிரடி உடுப்பிட்டி நவஜீவன் அணியை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது ஊரெழு றோயல் அணி


அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் யாழின் கில்லாடி உதைபந்தாடத் தொடரின் (18.09.2017) போட்டியில் ஊரெழு றோயல் அணி உடுப்பிட்டி நவஜீவன் அணியுடன் மோதியது.



ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய றோயல் அணி 4 : 0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. றோயல் அணி சார்பில் நட்சத்திர வீரர்களான.கஜகோபன், எடிசன் ஆகியோர்தன இவ்விரு கோல்களை பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக கபில் தெரிவானார். (க)

# பிரபாகரனுக்கு தூபி அமைத்திருந்தால் தேசிய நல்லிணக்கம் ஏற்பட்டிருக்கும்

## -ஞானசார தேரர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உண்மையான வீரன். அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என பொது பல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

மகிந்த அரசு போரின் மூலம் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டபோதும் தமிழ் மக்களின் உள்ளத்தை வெற்றிகொள்வதற்கு எந்த வேலைத்திட்டமும் அமுலாகவில்லை.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நந்திக்கடலில் பிரபாகரனுக்கு நினைவுத் தூபி அமைத்திருந்தாலும் பிரச்சினை இல்லை என தேரர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஞானசார தேரர் இந்த கருத்தினை வெளியிட்டார்.

எந்த அரசியல் கொள்கையில் இருந்தாலும் நாட்டு மக்கள் மகிந்தவுக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும். இலங்கையின் வாழ்நாள் அரசனாக மகிந்த இருக்க வேண்டியவர். அது நடைபெறவில்லை. அவரைச் சுற்றியிருந்த ஆலோசகர்கள் சரியான ஆலோசனைகளை வழங்கியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

சிங்கள மக்களுக்கு மகிந்த வீரர் போன்று பிரபாகரன் தமிழ் மக்களுக்கு வீரராவார். சரியோ பிழையோ அதுதான் உண்மை.

விடுதலைப் புலிகளை போரின் மூலம் தோல்வியடையச் செய்தாலும் அவர்களால் சமூகமயமாக்கியுள்ள பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை தோற்கடிக்க முடியவில்லை. உண்மையான விடுதலைப் புலிகள் வடக்கில் இல்லை. வெளிநாடுகளில் இருக்கின்றனர். அவர்கள் சொல்வதையே பிரபாகரன் இங்கு மேற்கொண்டார்.

வடக்கில் போரின் மூலம் புலிகளை வெற்றி கொண்ட பின்னர் அங்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள் அமைக்கப்பட்டன. தமிழ் மக்களின் உள்ளத்தை வெற்றிகொள்வதற்கு அன்று அரசிடம் எந்த வேலைத்திட்டமும் இருக்கவில்லை. என்னதான் அபிவிருத்திகளை மேற்கொண்டாலும் மக்களின் உள்ளத்தை மாற்றுவது இலகுவான விடயமல்ல. தேசிய ஒற்றுமையை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு நந்திக்கடலில் பிரபாகரனுக்காக நினைவுத்தூபி அமைப்பதும் பிரச்சினை இல்லை

போர் வெற்றி விழாக்களை கொண்டாட வேண்டும். நாட்டின் அடையாளத்தை பாதுகாத்துக் கொண்டு அந்த மக்களின் உரிமையையும் பாதுகாக்க வேண்டும் என தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (மு-11)

---

# தமிழர்களின் சுயநிர்ணய போராட்டம் நியாயமானது-ஐ.நா பிரதிநிதி

(ஜெனிவா)

ஈழத் தமிழர்களது சுயநிர்ணயப் போராட்டம் நியாயமானது என ஐ.நாவின் விசேட பிரதிநிதி பேராசிரியர் அல்பிரட் சயஸ் தெரிவித்தார். பிரான்ஸ் தமிழர் மனித உரிமையத்தின் ஒருங்கிணைப்பில் உலக அணி (Global Allianes) என்ற அமைப்பினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டத்தில் இதை குறிப்பிட்டார்.

இந்த கூட்டம் தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

ஐ.நாவின் சர்வதேச நிலைக்கும் விதிக்குமான நிபுணராக ஆல்பிரட் சயஸ் கடந்த 2012ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து கடமையாற்றுகின்றார்.

ஈழத்தமிழர் தொடர்பான இவரது கூற்று ஐ.நாவின் பொதுச்சபை மற்றும் பாதுகாப்புச் சபை வரை ஒலிக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், ஈழத்தமிழர் விவகாரத்தில் ஐ.நாவின் நிபுணர் ஒருவர் கலந்துகொண்டு உரையாற்றியமை சரித்திரத்திலேயே இது முதன்முறையாகும்.

இக்கூட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், சர்வதேச ஊடகவியலாளர்கள், அரச பிரதிநிதிகள், அரச சார்பற்ற பிரதிநிதிகள் மற்றும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். (மு-11)

---

# தொண்டைமனாறு அக்கரை சுற்றுலாமைய அபிவிருத்தியை நிறுத்தக் கோரி உணவு தவிர்ப்பு போராட்டம்




(யாழ்ப்பாணம்)

தொண்டைமனாறு அக்கரை சுற்றுலா மையஅபிவிருத்தியை உடன் நிறுத்துமாறு கோரி அப் பிரதேச மக்களால் காலவரையறையற்ற உணவு தவிர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொண்டைமனாறு அக்கரை கடற்கரை பிரதேசம் சுற்றுலா துறை மையமாக பிரகடனப்படுத்தப்பட்டு வலிகிழக்கு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வருவதுடன், குறித்த பகுதியில் பசுமை திட்டம் அமுல்படுத்தப்பட்டு ஆக்கப்பட்டு பிரதேச செயலகத்தால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் குறித்த பகுதி சுற்றுலா மையமாக பிரகடனப்படுத்துவதால் அப்பகுதியில் கலாசார சீரழிவு ஏற்பட்டுள்ளதாகவும், பல குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் தமது கிராமமும் இளம் சமூகத்தினரும் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதியை உல்லாச மையமாக மாற்றும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் அப் பகுதியை சிறுவர் பூங்காவாக மாற்றுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த விடயத்தை ஆராய்ந்த அதிகாரிகள், அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தடைசெய்ய முடியாது என்றும் சமூக சீர்கேடுகள் குற்றச்செயல்கள் இடம் பெறும் இடத்தில் அதை தடுப்பதற்கு பொலிஸ் காவலரண் ஒன்று அந்த பகுதியில் அமைப்பதாகவும் தீர்மானித்திருந்தனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வலிகிழக்கு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் மேற்குறித்த விடயம் தொடர்பில் தீர்மானமாக அதிகாரிகள் தெரிவித்த போது, அதை மறுத்த பிரதேச மக்கள் சிலர், இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும்தீர்வு கிடைக்கும் வரை காலவரையறையற்ற உணவு தவிர்ப்பு போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்து சென்றனர். அதேபோன்று நேற்று இரவில் இருந்து குறித்த. போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (மு-9)

---

# திருமுருகன் காந்தி உள்ளிட்ட மே 17 அமைப்பினர் விடுதலை

(சென்னை)

மே 17 இயக்கத்தைச் சேர்ந்த திருமுருகன் காந்தி உள்ளிட்ட நான்கு பேர் மீதான குண்டர் தடுப்புச் சட்ட நடவடிக்கையை உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (செப்.19) ரத்து செய்ததை அடுத்து, புதன்கிழமை (செப் 20) அவர்கள் நால்வரும் புழல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

திருமுருகன், இளமாறன், அருண் மற்றும் டைசன் ஆகியோர் கடந்த மே 21-ம் திகதி சென்னை மெரினா கடற்கரையில் மெழுகுவர்த்தி ஏற்றி ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்த சென்ற சமயத்தில் கைது செய்யப்பட்டு குண்டர்தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டனர்.

நினைவேந்தல் கூட்டம் நடத்தியவர்களை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ததை எதிர்த்து கடும் விமர்சனங்கள் எழுந்தன. மே 17 இயக்கத்தவரால் கடுமையாக விமர்சனத்துக்கு ஆளாகும் திமுக கூட இதைக் கண்டித்திருந்தது.

நான்கு மாத சிறைவாசத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த நால்வரையும் அவர்களது அமைப்பைச் சேர்ந்தவர்கள் புழல் சிறை முன்பு திரண்டு நின்று வரவேற்றனர்.

விடுதலை ஆனதும், செய்தியாளர்களிடம் பேசிய திருமுருகன் குண்டர் தடுப்புச் சட்டம் போன்ற சட்ட வழிகளைப் பயன்படுத்தி அரசின் மீதான விமர்சனங்களை நிறுத்த எண்ணுவது தவறு என்று குறிப்பிட்டார்.

மாணவர்கள், பொதுமக்கள் என பலருக்கும் எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிச்சயமாக எதிர்ப்போம். தமிழகம் முழுவதும் பயணம் செய்து மாணவர்களை திரட்டுவோம் தமிழக மக்களுக்காக தொடர்ந்து போராடுவோம் என்றார் அவர்.

கடுமையான சட்டங்களைக் கொண்டு சிறையில் அடைத்தாலும் மக்களுக்கு எதிரான திட்டங்களை எதிர்த்துப் போராடுவதை நிச்சயம் தொடருவோம் என்றும் அவர் தெரிவித்தார். (மு-11)

---

## இடைக்கால அறிக்கை...

மன்றம் இன்று காலை 9 மணிமுதல் சுமார் ஒரு மணி நேரம் அரசமைப்புப் பேரவையாகக் கூடவிருக்கின்றது. (மு-11)

---

## உழவு இயந்திரத்திலிருந்து...

மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளார்கள் என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வனவளத் திணைக்களத்தினர் மணல் ஏற்றிக்கொண்டு பயணித்த உழவு இயந்திரத்தை துரத்தி சென்ற வேளை அதி வேகமாக சென்ற உழவு இயந்திரத்தின் பக்க வாட்டில் (மக்காட்டில்) இருந்து பயணித்த இளைஞன் ஒருவன் தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் வள்ளிபுனம் முருகன் ஆலய சுற்றாடல் பகுதியில் வசிக்கும் செல்லையா செல்வன் (வயது - 20) என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனது சடலம் முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன், புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றார்கள். (மு--15)

---

## மூன்றிலிரண்டு பெரும்...

மாகாண சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டமூலம் 111 மேலதிக வாக்குகளினால் நேற்று இரவு 8.00 மணிக்கு பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த திருத்தச் சட்ட மூலம், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

குறித்த சட்டமூலத்தின் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக 154 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இச்சட்ட மூலத்துக்கான வாக்கெடுப்பு நேற்று இரவு 6.30 மணிக்கு நடைபெற வேண்டிய நிலையில் இருந்தும், இரவு 8.00 மணி வரை அது தள்ளிப் போடப்பட்டமைக்கு கூட்டு எதிர்க்கட்சியினர் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

வீட்டிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து வந்து, மூன்றில் இரண்டு வாக்குப் பலத்தைக் காட்டுவதற்கே இவ்வாறு வாக்கெடுப்பைத் தள்ளிப்போட்டதாகவும் கூட்டு எதிர்க் கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர். (மு)

---

## டொனால்ட் ட்ர...

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் எழுபத்து இரண்டாவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை முதன் முறையாக சந்தித்தார்.

இதன்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாரியார் ஜயந்தி புஷ்பா குமாரியும் டொனால்ட் ட்ரம்ப்பின் மனைவி மெலனியா ட்ரம்ப்பும் உடனிருந்தனர். (மு-11)

---

## மின்சார சபையின்...

இ.மி.ச. ஊழியர்கள் சகலரும் வழமை போன்று சேவைக்கு சமூகம் தருமாறு அவ்வமைப்பு கேட்டுள்ளது.

அமைச்சர் ஜோன் செனவிரத்னவுடனான பேச்சுவார்த்தையின் பின்னர், ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர். இதனையடுத்தே கூட்டுத் தொழிற்சங்க அமைப்பு வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததாக தொழிலாளர் திணைக்களம் அறிவித்துள்ளது. (மு-11)

---

## தமிழ் மக்களின்...

குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே, புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்த அவர் இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், முஸ்லிம் கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை, திருக்கோவில், சாகாமம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததாகவும் அந்தச் சந்தர்ப்பத்தில் சம்பந்தன், நீலம்திருச்செல்வம் ஆகியோர் பாரிய பங்களிப்புகளை வழங்கியிருந்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 17 வருடங்களின் பின்னர் மீண்டும் ஒரு புதிய யாப்பு சீர்திருத்தத்தை வரைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதெனவும் இதனூடாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (மு-11)

## வாக்கெடுப்பு...

தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணா ரட்ன, அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய இயக்கத்தின் இணைப்பாளர் சுந்தரம் மகேந்திரன், புரவெசி பலய அமைப்பின் இணை ஏற்பாட்டாளர் காமினி வியங்கொட, சர்வ மதத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதிய அரசமைப்பை நிறைவேற்றி சமத்துவத்தை உறுதிப்படுத்துவோம், அதிகாரத்தை பரவலாக்கி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம், ஊழல் மோசடியாளர்களை காப்பாற்ற வேண்டாம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்க போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தினிடையே ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன, யார் என்ன கூறினாலும்,, சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கி நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

கேஜ் என்ற அமைப்பு ஆரம்பித்த இந்த நடவடிக்கையுடன் இணைவதற்கு வணக்கத்திற்குரிய மதத் தலைவர்களுடன் நாங்கள் இங்கே வந்துள்ளோம். அரசியலமைப்புச் சபையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்து, ஜனநாயக அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்குதல் மற்றும் அதிகாரத்தைப் பரவலாக்கல், காணி, பொலிஸ் உரிமையுடன் மாகாண சபைகளை உருவாக்கல், தேர்தல் முறையை மாற்றுதல் போன்ற ஜனநாயகவாத யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்றகெதிராகவும் பலர் எழுந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு ஆதரவு வழங்குகின்ற நிலையில் சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர் இதனை எதிர்க்கின்றனர். குறிப்பாக நிறைவேற்று அதிகார முறையை நீக்குவதை எதிர்க்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவின் குழுவும் அதிகாரப் பரவலை எதிர்க்கின்றனர். இப்படியான பல யோசனைகள் காணப்படுகின்றன. இதற்கெதிராக குரல் கொடுப்பதோடு மற்றும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இவ்வாறான ஜனநாயக அரசியலமைப்பை முன் கொண்டுசென்று, சர்வஜன வாக்கெடுப்பில் விட்டு நிறைவேற்றும்படி வலியுறுத்தவுமே நாங்கள் இவ்விடத்திற்கு வந்துள்ளோம். இதுவொரு ஆரம்பநடவடிக்கை. நாடு முழுவதும் இதனை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த மனித உரிமை செயற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன், 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றி தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பரவலை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார். (மு-11)

## நல்லாட்சி அர...

சட்டம் தொடர்பில் சில கருத்துக்களை முன்வைக்கும் அதேவேளை சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் எனது கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அந்த வகையில் 1988ஆம் ஆண்டு தேர்தல் திருத்தச்சட்டத்தில் பெண்களுக்கு 30சதவீத ஒதுக்கீட்டை வழங்குவதற்கு எடுத்த முயற்சிகளுக்கு பாராட்டுக்கள்.

அதேநேரம் மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்கின்றோம் என்ற பெயரில் விரைவில் நிறைவடையவுள்ள கிழக்கு, சப்ரகமுவ, வடமேல் ஆகிய மூன்று மாகாணங்களுக்கான தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது. தேர்தல்கள் காலம் தாழ்த்தப்படுவதென்பது ஜனநாயகத்தினை மறுக்கும் செயற்பாடாகும். அவ்வாறானதொரு செயற்பாட்டிற்கு நாம் ஒருபோதும் துணைபோக முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

மாகாண சபைகள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியாகவிருக்கும் எமக்கு ஆரம்பகாலம் முதல் நீண்ட அனுபவம் இருக்கின்றது. அந்த வகையில் இந்த நாட்டின் சுமார் 30வருடங்களாக அதிகாரப்பகிர்வு, மாகாண சபை நிருவாகத்தினை வலுப்படுத்தல் என்பன பற்றியெல்லாம் அதிகம் வார்த்தைகள் அளவிலேயே பேசப்பட்டு வந்ததே தவிர செயல் வடிவத்தில் எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை.

இந்த நாட்டின் பிரஜைகளாக இருக்கின்ற தமிழர்கள் நாட்டின் வடக்கிலே வீதியோரங்களில் போராடிக்கொண்டிருக்கின்றபோது ஆக்குறைந்தது அவர்களை இந்த நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையிலாவது பொறுப்புள்ள அரசாங்கம் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை.

தமிழ் மக்கள் தங்களின் ஆணையை இந்த அரசாங்கத்திற்கு வழங்கினாலும் அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களைப் போன்றே சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை முன்னிலைப்படுத்தி தமிழ் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நோக்குகின்ற நிலைமையே தொடர்கின்றது. இந்த நிலைமை மாறவேண்டும் என்று நாம் எத்தனையோ தடவைகள் எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

ஆனால் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காக இருக்கின்றது. அரசாங்கம் எமது விடயங்களை கவனம் செலுத்துவது போன்று வெளிப்படமொன்றை காண்பித்து எமது கூட்டமைப்பின் தலைவரையும் ஏமாற்றிக்கொண்டு தனக்கு வேண்டிய நிகழ்ச்சி நிரலை கொண்டு சென்றுகொண்டிருப்பதை நாம் அறிவோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தினை நீட்டிப்பதற்காக ஆரம்பத்தில் புதிய அரசியலமைப்பு பணிகளை அவசர அவசரமாக முன்னெடுத்தார்கள். கடந்த ஆண்டின் டிசம்பர் 10ஆம் திகதி இடைக்கால அறிக்கையை அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிப்பதாக அறிவித்தார்கள்.

ஈற்றில் அதனை ஏதோவொரு வகையில் நிறுத்தி விட்டு சர்வதேசத்திற்கு அனைத்தும் தயாராகவே உள்ளது என்று காண்பித்து கால அவகாசத்தினை பெற்றுவிட்டார்கள். தற்போது ஏற்கெனவே வெளியிடப்படவிருந்த இடைக்கால அறிக்கையில் அனைத்து தரப்பினர்களும் இணங்கியிருந்த விடயங்களுக்கு அப்பால் சென்று ஒவ்வொரு தரப்பினரும் குறிப்பாக ஹெல உறுமய, கூட்டு எதிர்க்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என கட்சியின் கொள்கைகளுக்கு அமைய அதியுச்ச நிபந்தனைகளை பின்னிணைப்பாக இணைத்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆரம்பத்தில் செய்த விட்டுக்கொடுப்பினை கடந்து தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயத்தினை பின்னிணைப்பாக இணைக்குமாறு முன்மொழிந்துள்ளது. ஏற்கெனவே ஒவ்வொரு கட்சிகளும் இவ்வாறான அதியுச்ச நிபந்தனைகளை கொண்டிருந்தமையினால் தான் இந்த நாட்டில் இதுவரையில் அரசியல் தீர்வு என்பது கானல் நீராக இருந்து வருகின்றது.

எந்தவொரு படையினரையும் தண்டிப்பதற்கு இடமளிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மிகத்தெளிவாக கூறுகின்றார். அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன. அது குறித்து நியாயமான விசாரணை நடைபெற்றால் சாட்சியமளிக்க தயார் என்று கூறுகின்றார்.

மறுபக்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படையினர் குறித்த ஜனாதிபதியின் உறுதிமொழியை ஒருபோதும் யாரும் மீறப் போவதில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச சமவாயச் சட்ட மூலம் கடந்த காலத்திற்கு செல்லுபடியாகாது. எதிர் காலத்திற்கே செல்லுபடியாகும் என்றும் கூறுகின்றார். ஈற்றில் சர்வதேச சமவாயச் சட்ட மூலத்தினையே கைவிடும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

படையினர் தண்டிக்கப்பட வேண்டும் என்று காழ்ப்புணர்ச்சியில் கூறவில்லையே. யுத்த பூமியில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான பரிகாரம் செய்யப்பட வேண்டும். மீண்டும் இந்த நாட்டில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

இச்செயற்பாடுகள் அனைத்தும் இடம்பெறுவதற்கு சர்வதேச விசாரணையொன்றே சரியானதாக அமையும் என்பதே எமது நிலைப்பாடாகவுள்ளது. தற்போதுள்ள அரசாங்கமும் நீதித்துறையில் தலையீடுகளை செய்வதை நாம் உணரக்கூடியதாக உள்ளது. குறிப்பாக அண்மையில் பிரதமர் தலைமையிலான குழுவினர் சட்டமா அதிபரை அழைத்து கலந்துரையாடுகின்றமை அதற்கொரு உதாரணமாகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயகத்தின் பெயரால் தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாட்டினை முன்னெடுக்கின்றது என்பதே எமது நிலைப்பாடாகின்றது என்றார் சிவசக்தி ஆனந்தன். (மு-250)


கறையான் தொல்லையா?

கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும் (Warranty)

ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :- ந.ரூபகாந்த் (602) 077 151 5897 21 499 3200

விற்பனைக்கு

LBXXXX இலக்கமுடைய 11/2 கீப் அளவையுடையரிப்பர் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (622) 077 717 0069

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்

Banking courses

IABF & DABF

(tamil & English medium)

Qualification:-GC.E.O/L 6 passes with 5 Credits including maths

ஆரம்பம் :- 23/9/2017

கணக்காளர் கற்கை நெறிகள்

Chartered Accounting Courses

Executive Level & Business level (tamil&English medium)

Qualification :- G.C.E A/L 3 Passes

Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.

ஆரம்பம் :- 23/9/2017 (C-9534)

Students Awaiting (A/L) Results Enrich Your Proficiency in English Certificate Course in English

15 Batches have Succesfully Completed the Course Register your names before 23/9/2017

Further Details : Jaffna college Undergraduate dept. 464, Hospital Road, Jaffna. 0212223382/0212229149

உடனடி வேலை வாய்ப்பு

V2 TRAVELS

(C-9625) UK-550/=Kg

விமானப் பயணச்சீட்டுக்கள், விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?

5,000/= (பயிற்சியின் போது) / 15,000/= (பயிற்சியின் பின்)

தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)

49A ... யாழ்ப்பாணம் 0768226241

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

UK - 550/= (C-9625)

CANADA - 400/= மட்டுமே

V2 TRAVELS- 0768226240

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

தொழில்நுட்ப உதவியாளர்கள் தேவை

இளவாலையில் அமைந்துள்ள Arul Constructionக்கு தொழில்நுட்ப உதவியாளர்கள் தேவை. Qualification : NVQ Level 03 (minimum) one year experience

Age Limit : 23 - 40 (male) (637)

கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

Salary : 35000+ food allowance

தொடர்பு: 0773547460, 0766885242

ஒன்பதாம் ஆண்டு நினைவுநாள்



சண்முகலிங்கம் ரமேஸ்

4-ம் வட்டாரம் முள்ளியவளை

கனவுகள் பல
சுமந்தோம்
கனவாகப்
போனதேனோ
நிலைகுலைந்து
நிற்கின்றோம்
எமைப் பிரிந்து
சென்றதேனோ
உம் நினைவில்
துடிக்கின்றோம்
முகம் பார்க்கத்
தவிக்கின்றோம்
ஒன்பதாண்டு
சென்ற பின்னும்
ஓயாமல் வாடுகின்றோம்

அன்னை மடியில் : 1981.11.14
ஆண்டவன் அடியில் : 2008.09.21

4-ம் வட்டாரம்,
முள்ளியவளை. (9704)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.